நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදිය පූමි

சுற்று 06 ஒக்டோபர்/நவம்பர் 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 31


## ஜனாதிபதி தேர்தலில்
## இடதுசாரி ஜனநாயக சக்திகளின் பொது வேட்பாளர்
## தோழர் வாசுதேவ நாணயக்காரா



பூகோளமயமாதல் - தனியார்மயம் - யுத்தம் - இனவாதம் - ஜனாதிபதி முறை ஆகியவற்றுக்கு எதிரான தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்தை முன்னெடுக்க சிறந்த தெரிவு அவரேயாவார்.

**இனப்பிரச்சினை**

# ஜனாதிபதி தேர்தலில் அரசியல் பந்து!

## ஆட்சி அதிகாரமே குறிக்கோள்

உரிய காலத்திற்கு முன்பாக ஜனதிபதி தேர்தல் இடம் பெற உள்ளது. அதன் பிரதான நோக்கம் தற்போதய ஜனாதிபதி மீண்டும் பதவிக்கு வருவதாகும். அதன் மூலம் பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தி அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சி அதிகாரம் செலுத்துவதேயாகும். உண்மை இவ்வாறிருக்க இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்துகிறேன் என ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் கூறி வருவது சுத்த ஏமாற்றே யாகும். இனப் பிரச்சினை யை தேர்தல் விளையாட்டிற்கும் அதன் வெற்றிக்கும் உரிய ஒரு பந்தாகவே சந்திரிகா அம்மையாரும் பொதுசன ஐக்கிய முன்னணியும் எடுத்துள்ளார்களே தவிர அதன் தீர்வுக்கல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இதே பந்தை அடித்து விளையாடியே அதிக வீத வாக்குகள் பெற்று பதவிக்கு வந்தார். ஆனால் ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் சாதித்துக் கொண்டவை என்ன?.



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் எனக் கூறிக்கொண்டு பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையாரால் அதனை ஒழிப்பதற்குப் பதில் அதன் மூலம் திருப்தி கண்டு ஆட்சி சுகம் பெற்றதையே காண முடிந்துள்ளது. அது மட்டும் மன்றி இன்று அந்த தனிநபர் சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று கூறத்தாயார் இல்லாத நிலைமிலேயே இருந்து வருகின்றார்.

இனப் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டு வந்து யுத்தத்தை இல்லாமல் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்க வில்லை என மக்கள் மத்தியில் ஜனாதிபதி முறையிட்டு வருவதில் ஒரு சிறுபகுதி உண்மை மட்டுமே உண்டு. ஐ.தே.கட்சி தனது வழமையான பேரினவாத பெருமுதலாளித்துவ நிலைப்பட்டில் நின்று வருவதை எவரும் இல்லை என மறுக்க முடியாது.



ஆனால், ஜனாதிபதியும் பொதுசன முன்னணியும் முன்வைத்துள்ள தீர்வுப் பொதி தமிழர்களின் நியாயமான உரிமைகளை உள்ளடக்கவில்லை என்பதும் அதனைக் கூடப் பாராளுமன்றத்தில் முன்வைக்கவில்லை என்பதும் எதனால்? பேரினவாதிகளின் எதிர்ப்புக்கு அஞ்சியேயாகும், பௌத்த சிங்கள பேரின வாதிகளின் நெருக்குதலால் தான் தீர்வுப் பொதியின் ஆரம்ப அம்சங்கள் கூட பின்பு வெட்டி வெட்டிக் குறைக்கப் பட்டன. இன்று வெறும் கிலுகிலுப்புக்கள் காட்டும் பொதியே உள்ளது. அதே வேளை பேரினவாதிகள், யுத்தவெறியர்கள், அமெரிக்க எசமானார்கள் என் போரது விருப்பத் திற்கு அமைய யுத்தத்தை விரிவுப் படுத்தி நடாத்தி வருவர்கள் யார்? சிங்கள மக்களில் எழுபது வீதத்திற்கு அதிக மானோரின் கடுமையான எதிர்ப்புடன் யுத்தத்தை நடாத்திக் கொண்டு பழியை ஏனையோர் மீது போடுவது நியாயமாகாது. ஏமாற்றுவதற்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும்.

*தொடர்ச்சி 12ம் பக்கம்*

**தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக விஷேட மலர் உள்ளே. மறைவு தினம் 27.11.89 - 99**

## பலாலி காணிச் சுவீகரிப்பு

பலாலி ராணுவ முகாம் விஸ்தரிப்புக்கு காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி தம்மிடம் கூறியுள்ளதாக இந்து மாமன்றச் செயலாளர் திரு.க.நீலகண்டன் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். அப்படியானால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படுமா? அல்லது இந்தக் கதை தேர்தல்கள் இரண்டும் முடியும் வரை தானா? பிரபல சட்டத்தரணி நீலகண்டன் ஜனாதிபதியிடம் கேட்டுச் சொல்வாரா?

## வறுமையடைந்த பிக்குகள

பட்டதாரிகளான 48 பௌத்த பிக்குகள் தமக்குரிய நியமனம் அரசாங்கத்தினால் வழங்கப்பட வில்லை என்பதால் விரக்தியுற்று தமது மஞ்சள் அங்கிகளைச் களைந்து எறிந்துவிட்டு வேறு வேலைகள் தேடிச் சென்றுவிட்டனர். எஞ்சியுள்ள 76 பிக்குகளும் அவ்வாறு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் எதிர்நோக்கியுள்ள வறுமையே ஆகும். இது ஊவா மாகாணத்தில் இடம் பெற்றுள்ளது. பிக்குகள் மத்தியிலும் வர்க்கமும் சாதியும் உண்டு.


## சர்வதேசப் பாடசாலை

யாழ்ப்பாணத்தில் சில சீமான்கள் சீமாட்டிகளுக்கு சர்வதேசப் பாடசாலை வேண்டுமாம். குடாநாட்டுக் கல்வி பாழ்பட்டுக் கிடப்பதையிட்டு இந்த புளிச்சல் ஏவறைக் காரருக்குப் பிரச்சினை இல்லை. உண்டி கூழுக்கு அழுகிறது. கொண்டை பூவிற்கு அழுகிறது.

# மலையகத் தலைமைகள் யார் பக்கம்? மக்களின் பக்கமா? சுயநலசுகபோகப் பக்கமா?

ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆலவட்டம் பிடித்து சாமரை வீசி வருவதில் மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர்கள் அல்லர். தத்தமது சுயநல சுகபோக வாழ்வுக்காக மலையக மக்களின் பெயரால் எங்கேயும் யாருடனும் கூட்டுத் சேர்ந்து கொள்வார்கள். அவர்களுக்குத் தேவையானவை அமைச்சர், அரை அமைச்சர், மாகாண அமைச்சர் மற்றும் உயர் பதவிகள் மட்டுமே. இவற்றுடன் தம்மைச் சுற்றி நிற்கும் கூட்டத்தினருக்கு உரிய சலுகைகள். இவற்றின் மூலம் சொத்து சுகபோகங்கள் போன்றவற்றை அனுபவித்துக் கொள்வார்கள். இவைதான் கடந்த காலத்தில் நடைபெற்று வந்துள்ளன. தலைமைகளை மேற் கூறியவற்றின் மூலம் விலைக்கு வாங்கி விட்டால் மலையக மக்களுக்கு என எதுவும் வழங்கத் தேவை இல்லை என்பதை ஆளும் கட்சிகள் நன்கு உணர்ந்தே வைத்திருக்கிறார்கள்.

ஆதலால் இத்தலைமைகள் மலையக மக்கள் நலன் சார்ந்த ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி தேர்தலில் புதிதாக எடுத்து நிற்பார்கள் என எவரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் மலையக மக்கள் மத்தியில் விழிப்புற்ற சக்திகள் புதிய நிலைப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான அரசியல் சூழலைத் தோற்றுவிக்க வேண்டும். சோரம் போகும் சுய நலத் தொழிற்சங்க அரசியல் தலைமைகளுக்குப்



பின்னால் இனிமேலும் மலையக மக்கள் இருக்கத் தயார் இல்லை என்ற ஆரம்ப அடியெடுப்பு இடம் பெறல் வேண்டும். அமைச்சர் தொண்டமான் மீதும் அரசாங்கத்தின் மீதும் உள்ள வெறுப்பை எதிர்ப்பை மற்றொரு பேரினவாத பெரு முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு கொடுத்து நிலை நிறுத்தக் கூடாது. அது சட்டியில் இருந்து அடுப்புக்குள் வீழ்வதாகும். எனவே இரண்டு பெரும் கட்சிகளுக்கும் எதிராகப் போராட்டப் பாதையில் செல்லக் கூடிய சிங்கள முற்போக்கு புரட்சிகர சக்திகளுடன் கைகோர்த்து அணிதிரளக் கூடிய அரசியல் பாதையில் மலையக மக்கள் அணிதிரள முற்படவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் புதிய திசை நோக்கி நகரத் தயாராக வேண்டும். அதுவே எதிர்காலத்திற்கு உரிய பாதையாக அமைய முடியும்.

## மதுவும் மதுக்கடைகளும்

மலையகத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர் என அமைச்சர் தொண்டமான் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். ஆனால் மலையகத்தின் பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை எத்தனை மதுக்கடைகளுக்கு (பார்கள்) அனுமதிப்பத்திரம் வழங்கி உள்ளனர் என்பதை அமைச்சர் வெளியிடுவாரா? சில மதுக் கடைகளுக்கு பா.ஊக்களே சொந்தக் காரர்களாக விளங்குவதை அவர் அறியவில்லையா? உட்சுவர் பூசி வெளிச் சுவர் பூச வேண்டும்.

## இயல்பு வாழ்வுக்குள் சாதி

யாழ் குடா நாடு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிட்டது என்றே கூறப்படுகிறது. அதில் உண்மை அதிகம் இல்லை. ஆனால் சாதி வெறி தன் இயல்பை மீண்டும் காட்டத் தொடங்கி விட்டது. தென்மராட்சியில் உள்ள ஆலயங்கள், குடிநீர் கிணறுகள், குளிக்கும் குளங்கள் போன்றவற்றில் சாதிவெறி ஆட்டம் நடைபெறகின்றதாம்.

# ஜே.வி.பி. – விக்கிரமபாகு இரகசிய ஒப்பந்தம்!

**ஜே.வி.பி.** ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளரை நிறுத்தியுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரியே இத் தேர்தலில் தாம் நிற்பதாகவும் அறிவித்துள்ளது. ஜே.வி.பி.யின் இடதுசாரிக் கொள்கை நிலைப்பாடு என்பது தெளிவற்றது, தவறுகள் நிறைந்தவை. குழப்பங்கள் கொண்டவை. யாவற்றுக்கும் மேலால் இனவாத அடிப்டைகள் கொண்டவை. உதாரணத்திற்கு தேசிய இனப் பிரச்சினை, சுயநிர்ணய உரிமை, யுத்தம், அரசியல் தீர்வு என்பனவற்றில் அதன் நிலைப்பாடு இனவாத சோஷலிசம் தான். யூகோஷ்லாவிய ஜனாதிபதியான மிலோவிச்சை சோஷலிசவாதி எனக் கூறி அவரது இன ஒழிப்பு யுத்தத்தை நியாயப்படுத்தி வருபவர்கள் இந்த ஜே.வி.பி.யினர்.

இத்தகைய ஜே.வி.பியுடன் இணைந்து நிற்பவர் விக்கிரமபாகுவும் அவரது நவசமசமாஜக் கட்சியும். வேடிக்கை யாதெனில் தமிழர் பிரச்சினை பற்றியும் புலிகளின் போராட்டம் பற்றியும் சுயநிர்ணய உரிமை பற்றியும் பொறி பறக்கப் பேசுபவர் விக்கிரமபாகு. எப்படி ஜே.வி.பி யுடன் இணைய முடியும். ஜே.வி.பி. தனது இனவாத சோஷலிசத்தை மாற்றிக்கொண்டதா? அல்லது விக்கிரமபாகு தனது 'புரட்சிகர' வாய்வீச்சை விட்டுக் கொடுத்தாரா? ஜே.வி.பி. எதையும் விட்டுவிடவில்லை. விக்கிரமபாகுவே சகலதையும் கழற்றி வைத்துவிட்டு எதிர்காலப் பதவிக்காகப் படிமிறங்கிப் போய் நிற்கிறார் பாவம்.

ஜே.வி.பி. யிடம் விக்கிரமபாகு ஒரு இரகசிய ஒப்பந்தத்திற்கு வந்துள்ளார் என அறிய முடிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியுடன் நின்றால் அடுத்துவர உள்ள பாராளுமன்றத் தேர்தலில் விக்கிரமபாகுவிற்கு ஒரு ஆசனத்தை ஜே.வி.பி. வழங்க வேண்டும் என்பதே அவ் இரகசிய ஒப்பந்தம் ஆகும்.

ஜே.வி.பி.யின் தேர்தல் நடைமுறையால் இந்தப் பதவியைப் பெறுவது விக்கிரமபாகுவிற்கு சாத்தியமான ஒன்றாகும். இந்த இரகசிய ஒப்பந்தம் நவசமசமாஜக்

தொடர்ச்சி 12ம் பக்கம்...

நன்றி - நூலகத்திட்டம்



# சம வாய்ப்பு இன்னொரு சூழ்ச்சியா?

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தொழிலில் சமவாய்ப்புக்களை வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர இருக்கிறார். சமவாய்ப்புக்கள் என்ற பேரில் தொழிற்சங்கங்கள் மீதும் சட்டத்தின் கெடுபிடிகளை வலுப்படுத்தும் வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தோற்றத்தில் நல்ல ஒன்றைக் காட்டி ஒரு கெடுதலை இரகசியமாகப் புகுத்துகிற முயற்சி இது என்று இன்னமும் பலர் அறியவில்லை.

அதேவேளை, சமவாய்ப்புக்கள் எவ்வாறு நடைமுறையில் செயற்படும் என்று நாம் சிறிது யோசிக்க வேண்டும். தொடர்ந்தும் அரச உத்தியோகங்களில் சிறுபான்மைத் தேசிய இனத்தவருக்கு எதிரான பாரபட்சம் அதிகரித்துள்ளது. பல சேவைகளில் சன விகிதாசாரத்திற்கும் குறைவாகவும் பாதுகாப்புத் துறையில் புறக்கணிக்கத்தக்க அளவிலுமே சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் உள்ளனர் இந்த நிலையில், தனியார் நிறுவனங்களிலேயே வேலை வாய்ப்புக்களைச் சிறுபான்மைத் தேசிய இனத்தவர் நாட வேண்டியுள்ளது.

இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது, அரசுசார் துறைகளில் வேலைகளில் சமவாய்ப்பு வழங்கப் படுமா என்பது ஐயத்துக் குரியது. மறுபுறம் அதிகளவில் சிறுபான்மையினரை எடுக்கும் தனியார் நிறுவனங்கள் மீது பலத்த நெருக்குவாரங்கள் கொண்டுவரப்பட இடம் உண்டு.

திட்ட மிட்ட குடியேற்றத்தின் மூலம் குடிப்பரம்பலை பெரும்பான்மை தேசிய இனத்திற்குச்சாதகமாக மாற்ற எடுத்த முயற்சியின் தொடர்ச்சியாக, சிறுபான்மைத் தேசிய இனத்தோர் பெருமளவில் வாழும் பகுதிகளில் உருவாகும் தொழிற் துறைகளில் பெரும்பான்மையோரை அதிகளவில் தொழிலில் அமர்த்தவும் இது வசதி ஏற்படுத்தும். பிரதேச சுயாட்சிக்குக் கீழ் பிரதேசங்களின் குடிப்பரம்பலுக்கு ஏற்ப வேலை வழங்கல் போலல்லாது தேசிய அடிப்படையில் மேற்கோள்ளும் போது இது சிறுபான்மையினருக்குப் பாதகமாகவே அமையும். மாவலி நீர்வழங்கற் திட்டத்தின் கீழ் நடந்த குடியேற்றங்கள் எல்லாம் தேசிய மட்டத்தில் சனத்தொகை விகிதாசரத்தில் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டு சிறுபான்மைத் தேசிய இன்ங்கள் மிகவும் புறக்கணிக்கப் பட்டதையும் கிழக்கின் பிரதேசங்களில் பெரும்பான்மை இனக் குடியேற்றமே நடைபெற்றதையும் நாம் மறக்க முடியாது.

முதலில் அரசாங்கம் அடுத்த 5 வருடங்களில் சகல அரச தொழில் துறைகளிலும் சம வாய்ப்பை நடைமுறைப்படுத்தட்டும். அதன் பின்பு தனியார் துறை பற்றி நாம் சிந்திக்கலாம்.

சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு நீதி வழங்குகிற பேரில் அவர்களை மேலும் மேலும் ஏமாற்றிச் சுரண்டுகிற காரியங்களே இன்னும் நடைபெறுகின்றன. இவை பற்றித் தமிழ், முஸ்லிம், மலையகத் தலைமைகள் என்ன செய்கின்றன?

# யுத்தமும் அகதிகளும்

கடந்த் 16 வருடகால யுத்தம் பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள, இளைஞர்களைப் பலிகொண்டுள்ள துடன் பல இலட்சக்கணக்காக குடும்பங்களை அகதிமுகாம் வாழ்க்கைக்கு தள்ளியுள்ளது.

இந்த அகதிமுகாம் வாழ்க்கை இன்று பல சமூக பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளது. வடக்கிலே ஒவ்வொரு அகதிமுகாம்களிலும் 1500முதல் 2000 குடும்பங்கள் வாழ்கின்றனர் இதில் சுமார் 10,000 முதல் 12,000 மக்களை உள்ளடக்கியே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொறு 10-20 அடி குடிசையில் 10 குடும்பங்கள் வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் வேவ்வேறு வகைப்பட்டவை, முதியவர்கள், இளம் தம்பதியினர், வயதுவந்த பிள்ளைகள், இளைஞர்கள், குழந்தைகள் என பல்வேறு வகைப்பட்டவை.

இவ்வாழ்க்கை பல சமூக பிரச்சினைகளை கொண்டு வந்துள்ளதுடன் பல மனோவியல் பிரச்சினைகளையும் கொண்டு வந்துள்ளது, படித்த, படிப்பறிவற்ற என வாழும் இவர்கள் அரசு கொடுக்கும் நிவாரண நிதி மூலமே ஜீவியத்தை நடத்த வேண்டியுள்ளது. அது மாத்திரமின்றி மாதமொன்றுக்கு 1080 ரூபாவிலேயே தமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாதுள்ளதுடன், இவர்கள் வெளியில் சென்று வேலை செய்யவோ வேறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவோ முடியாத நிலமையும் காணப்படுகிறது. சிலர் வெளி வேலைகள் செய்த போதும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர்.

அத்துடன் தமது அடிப்டை பிரச்சினைகளான, குடிநீர் வசதியின்மை, மலசலகூட வசதியின்மை, சரியான வடிகாலமைப்பின்மை போன்றவற்றுடன் நோயுற்றவர்க ளுக்கான தேவையான மருந்தின்மை (மருந்து இல்லாமை) மருத்துவ வசதியின்மையுடன் வெளியில் சென்று சிகிச்சை பெற முடியாமையினாலும் நோயாளியை தனித்து வைக்க வசதியின்மை யாலும் ஏனையவருடன் வைத்திருப்பது ஏனையவர்களுக்கும் நோய் தோற்றிக்கொள்ளமுடிகிறது. வயது வந்த பிள்ளைகளைப் பாராமரிப்பதற்கும் பிரசவத்திற்கான பெண்களை வசதியாக நடத்த முடியாமையால் கர்ப்பிணித் தாய்மார் நோய் வாய்ப்பட வேண்டியுள்ளது.

மற்றும் இளைஞர் யுவதிகளிடையேயும், ஆண்கள், பெண்களிடையேயும் வாழ்கைப் பிறழ்வுகள் இடம் பெற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றால் மன அழுத்தங்களும் சண்டை சச்சரவுகளும் வன்முறை பாவித்தலும் பெருமளவுக்கு பெருகின்றன.

மேலும் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லமுடியாத நிலமை தொடர்வதுடன் போக்குவரத்தின்மை என பல பிரச்சினைகளை முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. இவர்களில் பல குழந்தைகள் சந்துணவின்றி போசாக்கின்மையால் . இலகுவில் நோய்களுக்கு ஆளாகின்றனர்.

மேற்கூறியவைகள் இடம் பெயர்ந்த அகதி வாழ்வின் சில முக்கிய பிரச்சினைகள் மட்டுமே. இன்னும் ஏராளம் அன்றாடப் பிரச்சினைகளை அகதிவாழ்வுக்கு உட்பட்டமக்கள் நாளாந்தம் ` அனுபவித்து வருகின்றனர். சுய கௌரவத்துடனும் தலை நிமிர்ந்தும் வாழவேண்டிய நாட்டின் பிரஷைகளான மக்களில் ஒரு பகுதியினர் அகதி வாழ்வில் நாளாந்தம் அல்லற்பட்டு சீரழிந்து வருவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள வியலாது. ஆதலினாலேயே யுத்தம் முடிவுக்கு வரவேண்டும். அரசியல் தீர்வு வேண்டும் என்பது உடனடியாகத் தேவைப்படுகின்றது.

*-மத்துரட்ட கதிர்-*

# வன்னியில் மீனவர்களின் அவல நிலை!

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள கடற் தொழிலாளர்கள் போரின் தொடர்பால் தொடர்ந்தும் பாதிக்கப் பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான படகுகள் கரையோரமாக கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளன. கடற் படையினரின் தாக்குதல் சம்பவங்களில் பலதடவை மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்து அங்கவீனமாகியும். படகு, வலை. போன்ற தொழில் சாதனங்கள் பல லட்சம் பெறுமதியானவை அழிக்கப்பட்டுள்ளன. இப்படியான தொடர் நெருக்கடிகளால் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதில் அச்சமடைந்தவர்களாக இருக்கின்றார்கள். இதனால் பெரும்பாலான மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இது மட்டுமல்லாமல் இயந்திரப்படகுகளின் இயந்திரங்கள் பெற்றோலில் இயக்க வேண்டிவை வன்னிக்காக பெற்ரோல் அனுப்புதல் முற்றாக தடையில் உள்ளது. இதனால் மண்ணெண்ணையிலேயே இயந்திரங்களை வன்னிக் கடற் தொழிலாளர்கள் இயக்கி வந்தார்கள். ஆனால் மண்ணெண்ணையும் மட்டுப்படுத்தப்பட்டே அனுப்பப்பட்டு வந்தன. அதுவும் போக்குவரத்து பாதை சீரின்மையால் பல மாதக்கணக்காக மண்ணெண்ணை கிடைக்காமல் போனதால் படகுகள் கரையோர மீன் பிடிப்பில் ஈடுபடுத்த பயன்படுத்தியவையும் கரையிலேயே கிடக்கின்றன. வன்னி நிலவரத்தில் இவர்களால் வேறு தொழில் எதுவும் செய்ய முடியாது என்பது வெளியுலகத்திற்கு தெரியாத விடயம் ஒன்றல்ல. யாவற்றிக்கும் பல இராணுவ நடவடிக்கைகளே காரணம் என்பதும் உண்மையாகும். இந்தத் தொழிலாளர்கள் இப்போது அன்றாடம் உணவுத் தேவையைப் போக்கவே நிவாரண்த்தை நம்பி வாழ வேண்டியதாகப் போய்விட்டது. நிவாரணம் கூட ஒழுங்காகக் கிடைப்பதில்லை. இந்தத் தொழிலாளர்களின் நிலையறிந்து சம்பந்தப் பட்டவர்கள் ஆக்கபூர்வமான, நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னியில் பல தடவை கடற் தொழிலாளர்கள் தெரிவித்தும் எருமைக்குமேல் மழைபெய்த கதையாகவே உள்ளது. வன்னியில் கவனிப்பாரற்று இருக்கும் மீனவர்களின் அவலத்தை யார் போக்குவது?

**- க. ரவீந்திரன் வவுனியா-**

# நாலு நடக்கும் உலகிலே

## நீளுகிற படுகொலைப் பட்டியல்

நீலன் திருச்செல்வத்தின் கொலை உண்டாக்கிய பரபரப்பு ஓய முன்பு புளொட் மாணிக்கதாசனும் உதவியாளர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகள் மூலம் எதைச் சாதிக்க முடியும் என்பது ஒரு புறமிருக்க, கொலைக்குட்பட்டவர்களது அரசியலின் அடிப்படையிலேயே அவற்றுக்கெதிரான கண்டனங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். நீலனின் மரணத்தைப் பிரமுகர்கள் அங்கலாய்க்கிற அளவுக்கு இன்னமும் தமிழ்ப் பொது மக்கள் மத்தியில் பெரிய பாதிப்பு எதுவும் காணப்படவில்லை. கொல்லப்பட்ட மாணிக்கதாசன் ஆகியோர் பற்றிய முழுப்பக்க விளம்பரங்கள் புளொட் இயக்கத்தால் வெளியிடப்பட்டன. மறுபுறம், இக் கொலை பற்றிய ஆழ்ந்த கவலை பல பத்திரிகைக் கட்டுரைகளிற் காணப்படவில்லை. புளொட் 'ஜனநாயக' நீரோட்டத்திற் கலந்துவிட்டாலும் இன்னும் வன்முறை அரசியலைக் கைவிடவில்லை என்பன போன்ற விமர்சனங்களே மிகவும் மாமூலான முறையில் முன் வைக்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் முன்னாலுள்ள பிரச்சினைக்கு அரசாங்கத்துடன் அதிகாரப் பேரம்பேசியே முடிவு காணலாம் என்ற நிலையில் உள்ள தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உட்பட்ட சகல அமைப்புக்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எப்போதோ மரித்துவிட்டவை தாம். எனவே இவற்றின் தலைவர்களைக் கொல்வதன் மூலம் விடுதலைப் புலிகள் இந்த இயக்கங்கட்குக் குழுக்களுக்குப் புதிய தியாகிகளை வழங்குவதை விட வேறெதையும் செய்வதில்லை. மக்களால் நிராகரிக்கப்படுவதை விடப்பெரிய அரசியல் மரணம் இல்லை. எனவே மக்கள் மத்தியிலான அரசியல் வேலைகளை முன்னெடுப்பதை விட வேறெந்தச் செயலும் அரசாங்கத் தயவிற் செயற்படும் சந்தர்ப்பவாத அரசியலை முடிவு கட்ட உதவாது. தமிழ்த் தேசிய இன விடுதலை அரசியல் ஒரு வெகுஜன அரசியல் பண்பை அடையும் வரை இவ்வாறான படுகொலை அரசியலும் ஓயுமாப்போல இல்லை.

## லயன் காம்பராவும் இராமையாவும்

மலையகத் தோட்டத் தொழிலாளரின் வீடமைப்புப் பிரச்சினையைத் தீர்த்து வருவதாக அரசாங்கமும் அமைச்சர்களும் பொய்ப் பிரசாரம் செய்வதை நிறுத்த வேண்டும் என்று ஓ.ஏ.ராமையா என்ற முன்னாள் புரட்சிவாதி செப்டெம்பர் 4ம் திகதி வீரகேசரியில் கடுமையாக விமர்சித்து எழுதியுள்ளார். இந்த ஏமாற்று வேலைகளைப் பற்றி 1960களில் அறிந்தவர் தானே இந்த ராமையா. தொண்டமான் 'பற்றியும் அப்போதே அறிந்தவர் தானே இந்த ராமையா. அறிந்திருந்தும் திரிபுவாதிகளுடன் போய்ச் சேர்ந்து இந்த அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கி வந்தார். இந்த வருடம் தொண்டமானுக்குத் தேர்தல் காவடி தூக்கி அதுவும் பலன் தராததால் இப்போது மலையக மக்களுக்காக மறுபடியும் அழுகிறார்.

ராமையா தனது சமூகத்துக்கும் மாக்சிச அரசியலுக்கும் செய்த துரோகத்துக்குப் பரிகாரம் தேடுவதனால் எப்போதோ தன் மோசடி அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும். அவர் செய்யாததை மலையக மக்கள் அவரைச் செய்யப் பண்ணுகிற நாள் நெருங்கி வருகிறது.

## மின் அஞ்சல் ரணில் அமைச்சர்

எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு அனுப்பப்பட்ட மின்மடலொன்று எவ்விதம் அமைச்சர் பற்றி வீரக்கோனிடம் போனது என்ற கேள்விக்கு அதில் மோசடி எதுவும் இல்லை என்பதும் அனுப்பியவர் தவறான முகவரிக்கு அனுப்பியே இது நடந்தது என்பதும் தெளிவாகிவிட்டது.

இது ஒருபுறமிருக்கச் சில காலம் முன்பு தொண்டமான் ஆறுமுகத்தின் வன்முறைக்கு வக்கலாத்து வாங்கிய என்.ஜி.ஓ பத்திரிகை ஒன்றில் இன்னொருவருக்கு எழுதப்பட்ட கடிதத்தை வாசிப்பது ஒழுக்கக் கேடானது என்று கடுமையான கண்டனம் கூறப்பட்டுள்ளது.

ரணில் ஆலோசனை பெறும் நிறுவனம் மிக மோசமான ஒரு வலதுசாரிச் செய்தித்திரிப்பு விளம்பர நிறுவனம் என்ற விடயமோ ரணில் இறக்குமதி செய்யவுள்ள உபகரணங்களின் தேவையும் நோக்கமும் என்ன என்ற விடயமோ இந்த (என்.ஜீ) ஓநாய் நிறுவன ஏடுகட்கு முக்கியம் இல்லை.

## விக்கிரமபாகுவுக்காகப் பாடுபட்டது வீணா?

மேல் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் கடும் உழைப்பாலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வென்றதைப் பலரும் அறிவார்கள். தேர்தலுக்கு முன்பே அவரது சுயநலமும் அகம்பாவமும் பற்றி புதிய இடதுசாரி முன்னணியில் இருந்த பலரும் அறிந்திருந்தும் அவருக்கு ஆதரவாக வாக்களித்து அவரை மாகாண சபைக்கு அனுப்பியிராவிட்டால் அவர் இப்படி நம்பிக்கை மோசடி செய்ய வாய்ப்பு இருந்திராது என்ற விமர்சனத்தில் உண்மை உண்டு. ஆனால் அவர் வென்றிராவிட்டால் பு.இ.முன்னணிக்குள் தனது அழிவு வேலைகளை இன்னும் கொஞ்சக் காலத்துக்கு செய்துவிட்டுத்தான் போயிருப்பார். இப்போது நடந்தவற்றை நோக்கும் போது சந்தர்ப்பவாதியான விக்கிரமபாகுவின் அரசியற் தற்கொலை அவர் தெரியப்பட்டதன் மூலம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. தோற்றத்தில் கெட்டதாகத் தெரிகிற விடயங்கள் எல்லாமே கெடுதலானவை அல்ல என்று விளங்குகிறதல்லவா!

• • • • • • • • • • • •

தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# தோழர் மணியம் நினைவுகள் காலத்தால் அழியாதவை

இலங்கையின் வடபகுதி தமிழர் பழமை வாதத்தின் இருப்பிடமாக இருந்து வந்திருக்கிறது. பொருளாதார அரசியல் சமூக கலாச்சாரத்துறைகளில் தமிழ் நிலவுடமையாளர்களான வேளாளரின் ஆதிக்கமே நிலவியது. சாதியப் படிநிலை அமைப்பின் உச்சத்தின் அவர்களே இருந்தனர். இத்தகைய பழமை வாதத்தின் சைவசமய கலாசாரப் பிரதிநிதியாக ஆறுமுக நாவலரும் அரசியல் சமூக ஆதிக்கத்தின் பிரதிநிதியாக சேர் பொன் இராமநாதனும் விளங்கினர். இத்தகைய மேட்டுக்குடி வேளாள ஆதிக்கம் நிறைந்த யாழ்ப்பாணச் சூழலில் இருந்து நாற்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் கம்யூனிஸ்டுக்கள் தோற்றம் பெற ஆரம்பித்தனர். தம்மைச் சூழ்ந்திருந்த ஆதிக்க கருத்தியல்களை எதிர்த்தும் சாதிய சமூக நடைமுறைகளை உடைத்துக் கொண்டும் முதல் வரிசைக் கம்யூனிஸ்டுகள் உருவாகினர். அன்றைய சூழலில் இத்தகைய உருவாக்கம் மிக எளிதான ஒரு விடயமல்ல. அந்த வகையில் தோழர் மு.கார்த்திகேசன் முதன்மை வாய்ந்த கம்யூனிஸ்டாகவும் முன்னுதாரணத் துடன் பல உறுதி வாய்ந்த கம்யூனிஸ்டுக்களை உருவாக்கி அமைப்பு வாயிலாக ஒன்றிணைத்தவராகவும் திகழ்ந்தார்.

மேற் கூறிய யாழ்ப்பாணச் சூழலில் இருந்தே தோழர் மணியம் கம்யூனிஸ்ட் பாசறைக்கு வந்து சேர்ந்தார். அவர் மிக இளவயதில் தமிழக ஈ.வே.ராவின் பகுத்தறிவு சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டார். காரணம் தமிழரிடையே நிலவி வந்த சாதிய அமைப்பின் மீது கொண்ட எரிச்சலும் எதிர்ப்புமாகும். இதனால் அவரது கொல்லன் கலட்டிக்கிராமத்தில் அமைந்த குடும்பத்தினரின் எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. நடுத்தரக் கல்வியை முடித்துக் கொண்ட தோழர் மணியம் வட பகுதியில் பெரும் தொழிற்சாலையாக உருவெடுத்துக் கொண்டிருந்த காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் பொறியியல் பகுதி பயிலுனர் மேற்பார்வையாளராக சேர்ந்து கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டாகும். அத்தொழிற்சாலையிலே தொழிலாளர்களுடனான தொடர்பும் உறவும் ஏற்பட்டது. அவர்களிடையே கம்யூனிஸ்டுக்கள் இருந்தனர். அவர்கள் தொழிலாளர்களின் உரிமைக்கான தொழிற் சங்கத்தை உருவாக்க முனைந்தனர். அக் கம்யூனிஸ்டுக்கள் மூலமாக மாக்சிச நூல்கள் பிரசுரங்கள் கிடைத்தன. மிக விரைவாகவே மாக்சிசத்தின் பால் தோழா 'மணியம் ஈர்க்கப்பட்டார். இயல்பிலேயே அநீதி அடக்குமுறைகளுக்கு எதிராக அமைந்த அவரது போக்கிற்கு மாக்சிசம் தகுந்த தத்துவமாகவும் நடைமுறைக்கு ஏற்ற போராட்ட ஆயுதமாகவும் காணப்பட்டது. மாக்சிசம், கம்யூனிஸ்ட் கட்சி மீதான அவரது ஈர்ப்பையும் வேட்கையையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் சந்தர்ப்பமாக 1953ம் ஆண்டின் வரலாற்றுப் புகழ் மிக்க ஹர்த்தால் போராட்டம் அமைந்தது. அவரது தீவிரமான அரசியல் வேலைகள் மூலம் சீமெந்து தொழிற்சாலையில் இருந்து வேலை நீக்கப்பட்டார். அதன் பின் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர அரசியல் ஊழியனாக மாறிக் கொண்டார்.

ஆரம்பத்தில் வலி வடக்கில் சுன்னாகத்தை மையமாகக் கொண்டு அவரது வேலைகள் அமைந்தது. கட்சி வேலைகளை ஒழுங்கு படுத்தியும் ஸ்தாபன ரீதியில் நெறிப்படுத்தியும் குறிப்பாக வாலிபர் இயக்க வேலைகளை முன்னெடுத்தார். இக்கால கட்டத்தில் தனது எதிர்கால வாழ்க்கை முற்றிலும் அரசியல் வாழ்வாகவே அமைய வேண்டும் என்பதில் தூர நோக்குடனும் தெளிவுடனும் தன்னைத் தகவமைத்துக் கொண்டார். அத்தகைய கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறை இன்றைய சமூக அமைப்பில் இலகுவானதாக அமைந்து விடாது என்பதையும் தோழர் மணியம் உயர்ந்திருந்தார். ஒரு கம்யூனிஸ்ட் தனது குறிக்கோளை நோக்கி வீறு நடைபோடுகின்ற போது எத்தகைய இடர்களைச் சந்திக்கவும் அவற்றை வெற்றி கொள்ளவும் இடையிறாது போராட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து கொண்டார். தான் மனமார விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கு சாதியப்படி நிலையில் மேலே இருந்த அவரது குடும்பம் மறுத்து நின்ற போது அத்தகைய பிற்போக்குத்தனம் நிறைந்த குடும்ப உறவைத் தூக்கி வீசி விட்டு தனது பாதையில் கட்சியின் முடிவோடு திருமண வாழ்வை ஆரம்பித்துக் கொண்டார். குடும்ப வாழ்க்கையை அரசியல் வாழ்வுக்கு ஏற்ற தொன்றாக மாற்றியமைத்ததில் தோழர் மணியமும் அவரது துணைவியாரான வள்ளியம்மையும் கம்யூனிஸ்டுக்களுக்கு ஒரு முன்னுதாரணத்தை வழங்கினார்கள். அவரது வீட்டின் சகல இடங்களிலும் பாட்டாளி வர்க்க அரசியலே முன்னெழுந்து நிற்கும் அளவுக்கு அரசியல் முதன்மை பெற்றிருந்தது. அதனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலீஸ் அடக்கு முறை, பிற்போக்கு சாதி வெறியர்களின் மிரட்டல்கள், நாளாந்த வாழ்க்கை கஷ்டங்கள் போன்றவற்றுக்கு முழுக் குடும்பமும் ஆளாக வேண்டியேற்பட்டது. ஆனால் நெருக்கடிகளின் உச்சக் கட்டங்களில் கூட ஒரு சந்தர்ப்பத்தில் தானும் 'நாங்கள் இப்படி ஒரு அரசியல் வாழ்க்கையை நாடியிருக்கக் கூடாது' என்ற நொந்த வார்த்தைகளை அக் குடும்பத்தில் இருந்து அன்று கேட்க முடியவில்லை. காரணம் மனித குலவிடுதலைக்கான மாக்சிச லெனினிசக் குறிக்கோளை தோழர் மணியம் இறுதிவரை பாதுகாத்து முன்னெடுத்தமையும் அதனை ஒரு வாழ்க்கை முறைமை யாக்கி கொண்டதுமாகும்.



தோழர் மணியம் சொல்லாலும் செயலாலும் கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர். அவர் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எப்போதும் தத்துவார்த்த அரசியல் மார்க்கத்தை வகுக்கும் நிலைப்பாட்டில் தெளிவுடனும் தூரநோக்குடனும் செயல்பட்டவர். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கட்சி வெகுஜனங்களுடன் பிணைந்து அவர்களது பிரச்சினைகளை முன்னெடுத்து போராட்டப் பாதையில் முன்செல்ல வேண்டும் என்பதில் உறுதியான முடிவுகளுக்கு காரணமாக இருந்தவர். 1960துகளில் மாக்சிச லெனினிச இயக்கத்தில் தத்துவார்த்தம் போராட்டம் கட்சிக்குள் எழுந்த போது தோழர் மணியம் முக்கியமானவராகத் திகழ்ந்தார். வெறுமனே புரட்சிகர முழக்கங்களோடு கட்சிவேலைகளை மட்டுப்படுத்திக் கொள்ளவதை அவர் நிராகரித்து வந்தார்.

உதாரணமாக 1966ம் ஆண்டின் முற்கூறிலே வடபகுதியில் சாதியத்திற்கும்

## சி.கா. செந்திவேல்

பொதுச் செயலாளர் – புதிய ஜனநாயக கட்சி

தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களை முன்னெடுப்பது பற்றிய விவாதம் கட்சிக்குள் எழுந்தது. அவ்வேளையில் சாதியப் பிரச்சினையை நாம் கையில் எடுத்தால் அது வெறும் சாதிய நிலைப்பாடாக அமைந்து கொள்ளும். அது ஏனைய மக்களிடம் இருந்து கட்சியை அந்நியப்படுத்தி விடும் என சிலரால் வாதிடப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் தோழர் மணியம் இத்தகைய கண்ணோட்டம் ஒரு பாராளுமன்ற வாத நிலைப்பாடு எனச் சுட்டிக்காட்டி ஒடுக்கு முறை எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்த்துப் போராட வேண்டியது கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு என வற்புறுத்தினார். இறுதியில் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை தீர்மான வடிவில் அன்றி நடைமுறைப் போராட்டங்களாக மாற்றுவதிலும் கட்சியின் வழிகாட்டலுக்கு தோழர் மணியம் தனது ஆகக் கூடிய பங்களிப்பை வழங்கினார். வரலாற்று திருப்புமுனையாக 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21ன் எழுச்சியும் அதைத் தொடர்ந்த போராட்டங்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முன்னேறிச் செல்வதற்கு தோழர் மணித்தின் அர்ப்பணிப்பு நிறைந்த கடுமையான வேலை முறை பெரும் உந்து சக்தியாக அமைந்தது. அவர் பெயர், புகழ் சுயலாபம் கருதி சிறு துரும்பைக் கூட அசைக்க மாட்டார். ஆனால் ஒரு போராட்டத்திற்கு தலைமை தாங்கும் கட்சிக்கு தலைமைத்துவம் வழங்குவதில் மிகப் பொறுப்புடனும் கவனத்துடனும் தூரநோக்குடனும் செயல்படுவார். கட்சி முடிவு எடுக்கும் முன்னர் குறிப்பிட்ட பிரச்சினை சம்மந்தமாக விவாதங்களில் ஈடுபடுவதும் முடிவு ஒன்று எடுக்கப்பட்ட பின்பு கூட்டுத் தலைமைக்கும் தனி நபர் பொறுப்புக்கும் உள்ள முக்கியத்துவத்தை அவரது உறுதியான வேலைகளில் கண்டு கொள்ள முடியும்.

அரசு அடக்குமுறை யந்திரமான பொலீஸ், முதலாளித்துவ பிற்போக்கு வாதிகள் முன்பு தோழர் மணியம் வணங்காமுடியாக ஒரு கம்யூனிஸ்ட் புரட்சி வாதிக்குரிய கம்பீரத்துடன் நின்றார். ஆனால் சாதாரண உழைக்கும் மக்கள் மத்தியில் குறிப்பாக போராட்டகாலங்களில் ஒடுக்கு முறைகளை எதிர்நோக்கி நின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் 'முற்றிலும் பணிந்த எருது போல்' தலைவணங்கி நின்ற தோழராக இருந்து வந்தார். அதன் காரணமாகவே நெருக்கடி மிகுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் அவரை தமது குடிசைகளில் மறைத்து பாதுகாத்து வந்தனர். தலைமறைவு நாட்களில் எவராலும் தோழர் மணியத்தை நெருங்க முடியாது இருந்தது என்பது அவர் மக்கள் மத்தியில் இருந்தார் என்பதேயாகும். தோழர் மணியம் தன் வாழ்நாள் பூராவையும் மாக்சிசம் லெனினிசத்திற்காகவும் மாஒசேதுவ் சிந்தனைக்காகவும் அர்ப்பணித்தவர். அதன் பொருள் யாதெனில் அனைத்து ஒடுக்குமுறைகளையும் ஒழித்துக் கட்டும் சமூக மாற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர் என்பதாகும்.

## புதிய தலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரணம்

எளிமையான வாழ்க்கை கடுமையான போராட்டம் என்னும் மாஒசேதுங் எடுத்துக் கூறிய நிலைப்பாட்டில் இருந்து தோழர் மணியம் இறுதி வரை செயல்பட்டார். எப்படியும் வாழலாம் என்னும் முதாலாளித்துவச் சீரழிவு நிறைந்த சூழலில் இப்படித் தான் வாழவேண்டும் என வரையறை செய்து ஒரு கம்யூனிஸ்ட் வாழ்வை முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர் தோழர் மணியம். தேவை, என்பது ஆசையாக மாறி, ஆசை பேராசையாக மாறி, பேராசை ஆடம்பரமாகி, குறிக்கோள் அற்ற வாழ்வுக்கு ஒவ்வொரு கம்யூனிஸ்டின் வாழ்வும் சீரழிந்து விடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தவர். முதலாளித்துவ சமூக அமைப்பில் இத்தகைய விஷக் கிருமிகள் கம்யூனிஸ்டுக்களை வந்தடையக் கூடாது என்பதில் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம் என அடிக்கடி வலியுறுத்தி வழிக்காட்டி வந்தவர். அவரது முன்னெச்சரிக்கையானது எவ்வளவிற்கு சரியானது ஏன்பதை இன்றைய பூகோளமயமாதலின் கீழ் தாராள்மயம் போன்றவற்றால் பல முன்னாள் கம்யூனிஸ்டுக்கள் தடம் மாறிப் போய் சீரழிந்துள்ள உண்மையைக் காண முடிகிறது.

தோழர் மணியம் தமக்குரிய ஒரு கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறையை வானத்திலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. கடந்த நூற்றி ஐம்பது வருடகால கம்யூனிஸ்ட் இயக்கத்தின் செழுமையான அனுபவங்களில் இருந்தே பெற்றுக் கொண்டார். பரித்தியாக உணர்வுடன் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களுக்காகவும் வர்க்கப் போராட்டங்களில் ஈடுபட்டு தம்மை மெழுகுவர்த்தியாக்கிக் கொண்ட கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளின் அடிச் சுவட்டில் இருந்தே அவரால் கம்யூனிஸ்ட் முன்னுதாரணங்களை பெற முடிந்தது. ஒருவரது சொற்களில் இருந்தல்ல செயல்களில் இருந்தே கண்டுகொள்ளல் வேண்டும். என்பதே அவரது அளவு கோலாக இருந்தது. இது மாக்சிய ஆசான்களின் வழிகாட்டலாகும்.

தோழர் மணியத்தின் அரசியல் வாழ்வின் மற்றொரு மகிமை என்னவெனில் தனது காலத்தோடு யாவும் நின்றுவிடக் கூடாது என்னும் நிலைப்பாடாகும். இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பல தடவைகளில் பிளவுகளும் பலவீனங்களும் இடம் பெற்ற போதிலும் புரட்சி கரமான மாக்சிச லெனினிசக் கட்சியை மாஒசேதுங் சிந்தனை அடிப்படையில் கட்டியெழுப்பி முன்னெடுக்க வேண்டும் என்பதில் தூரநோக்குடையவராக இருந்தார். விரக்தி கொண்டவர்களும் இயலாமையுடையவர்களும் மாக்சிசத்தையும் கட்சி அமைப்பையும் விட்டுச் தூரச் சென்று விடலாம். ஆனால் தனியொறு மாக்சிச லெனினிச வாதி எஞ்சியுள்ள வரை அத்தகைய கம்யூனிஸ்டால் மீண்டும் ஒரு பலம் மிக்க கட்சியை கட்டியெழுப்பி முன் செல்ல முடியும் என்ற கம்யூனிஸ்டுகளுக்கே உரிய ஆத்ம பலத்தோடு இறுதிவரை செயல்பட்டவர். தனது இறப்பிற்கு சில நாட்களுக்கு முன்பாக கட்சியின் அரசியல் குழுத் தோழர்களை மருத்துவமனைக்கு அழைத்து கட்சியை தொடர்ந்தும் பலப்படுத்தி மக்களுக்கு சேவை செய்யும் கட்சியாகவும் புரட்சிகர கட்சியாகவும் முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பினை ஒப்படைத்த அவரது நினைவுகள் தோழர் மணியத்தின் உயர்ந்த கம்யூனிஸ்ட் நிலைப் பாட்டினை தெளிவாக்கியது. அவர் கட்சித் தோழர்களை உயிருக்கு உயிராக நேசித்தார்.கட்சி வேலைகளுக்கு வழி காட்டினார். தவறுகளை உரிய முறையில் சுட்டிக்காட்டி திருத்த உதவினார். இவ்வாறு கூறும் போது அவர் தவறுகள் ஏதும் இழைக்கவில்லை என்றோ யாவற்றையும் சரியாகவே கையாண்டார் என்றோ கூறுவது மிகையானது மட்டுமன்றி அத்தகைய பார்வை மார்க்சிசப் பார்வையாகவும் இருக்க முடியாது. அவரது தவறுகள் குறைபாடுகள் யாவும் அவரது பங்களிப்புகளுடன் ஒப்பிடும் போது சிறியவைகளேயாகும்.

தோழர் மணியத்திடமிருந்து புதிய தலைமுறையினர் கற்றுக் கொள்வதற்கு நிறையவே உண்டு. இன்றைய ஏற்றத்தாழ்வான வர்க்க சமூகத்தில் ஒரு கம்யூனிஸ்ட் எவ்வாறு தோற்றம் பெற்று வளர முடியும் என்பதற்கும், அத்தகைய ஒரு கம்யூனிஸ்ட் பலவாறான இடர்களுக்கு மத்தியில் எவ்வாறு தன்னை நிலைப்படுத்தி ஒழுங்கு படுத்தி அரசியலுக்கு முதலிடம் கொடுத்து வாழ முடியும் என்பதற்கு தோழர் மணியம் முன்னுதாரணம் மிக்கவர் என்பது எவராலும் நிராகரிக்க முடியாத ஒன்றாகும்.

தொடர்ச்சி Vம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



## தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# ஐக்கியம், போராட்டம், போராட்ட ஐக்கியம்

"நாடுகள் சுதந்திரத்தை வேண்டுகின்றன, தேசங்கள் விடுதலையை வேண்டுகின்றன, மக்கள் புரட்சியை வேண்டுகின்றனர்." இது இந்த வரலாற்றுக் காலக் கட்டத்தின் சாராம்சமான கூற்று. 1917ல் ஒக்டோபர் புரட்சியின் பின்பு தொடர் தொடராக நிகழ்ந்த விடுதலைப் போரட்டங்கள் கொலனியத்தை வேரறுத்தன. கொலனியம் ஒழிந்தாலும் ஏகாதிபத்தியம் நவகொலனியமாக இன்று முழு உலகையும் தன் பூரண ஆளுமைக்கு உட்படுத்த மும்முரமாக நிற்கிறது. அதன் அதிகார வேட்கை எவ்வளவுக்கு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை வேட்கையும் அதிகமாகிறது. சோவியத் யூனியனின் சரிவுக்கான காரணங்களைக் க்ருஷ்ச்சொவ் யுகத்திற் காணமுடிந்தவர்கள் 1991ல் சோவியத் யூனியனின் சிதைவால் அதிர்ச்சி அடையவில்லை. ஆயினும், சோவியத் யூனியனின் சரிவு ஏகாதிபத்தியத்திற்கு கிடைத்த ஒரு பெரும் பரிசு என்பதில் ஐயமில்லை. இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் ஒரே பெரு வல்லரசாக உள்ளது. ஆயினும் அதனால் முழு உலகையும் ஆதிக்கம் செலுத்த இன்னும் முடியவில்லை. இந்தச் சூழ்நிலையிலேயே இன்று மறுபடி உலகைக் கூறு போடுவதற்கான போட்டிகள் தொடர்கின்றன. முன்னேறிய முதலாளிய நாடுகட்குச் சற்றும் சளைக்காத முறையில் பிராந்திய மேலாதிக்கத்திற்கான போட்டி வலிய ஏகாதிபத்திய நாடுகளது அனுசரணையுடன் ஆட்சேபனைக்கு மத்தியிலும் நடப்பதை நாம் காணலாம். இந்தச் சூழ்நிலையிலேயே இலங்கையிலும் பிற மூன்றமுலக நாடுகளிலும் சமூக மாற்றத்திற்கான போராட்டங்களின் பாதையை நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

சோஷலிஸத்துக்கான புரட்சி தவிர வேறெதுவும் பயனற்றது என்று வாதித்தவர்கள் ஒவ்வொருவராக ஏகாதிபத்தியத்திடம் முதலாளியக் கட்சிகளிடமும் சரணடைந்த கதையைக் கடந்த 50 வருடங்களாகக் கண்டு வந்துள்ளோம். இன்றும் தீவிர இடதுசாரிகள் என்று தம்மைப் பிரகடனப் படுத்திக் கொள்கிற சிலர் உலகமயமாதல் மூலம் புரட்சியின் கடமை இலகுவாகிறதாகக் கூறிக் கொண்டு தேசிய இன விடுதலைப் போராட்டம் உட்பட்ட வெகுசனப் போராட்டங்களை எல்லாம் பிற்போக்கு முத்திரை குத்தி ஒதுக்குவதை நாம் காணமுடிகிறது. சோஷலிஸம் வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று போதித்துச் சமூக விடுதலைக்கான சமகாலப் போராட்டங்களை எல்லாம் நிராகரிக்கிற போக்கு இடது தீவிரத்திலும் வலது தீவிரத்திலும் உள்ளது. அது வெளிப்படுகிற முறை மட்டுமே வேறுபடுகிறது. சமரசம் பேசி சமாதான பாதையில் சோஷலிஸத்துக்கு அழைத்துச் செல்வோர் எல்லாரும், ஐக்கியத்தை வலியுறுத்திப் போராட்டத்தை மறந்தவர்கள். நெறியற்ற ஐக்கியம் முடிவில் சரணாகதியாகியதை வரலாறு மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறது. போராட்டத்தை மட்டுமே வலியுறுத்தி ஐக்கியத்தை நிராகரித்த சக்திகள் தாமும் தனிமைப்பட்டுப் பலவீனமானது மட்டுமல்லாமல் தம்முள் பிளவு பட்டுப் பிரதான எதிரி பற்றிய கவனம் எதுவும் இல்லாமல் தங்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளையே பெரிதாக்கித் தம்மையும் தமது போராட்டத்தையும் பலவீனப்படுத்தி வருவதையும் வரலாறு நமக்குக் காட்டி வருகிறது.

வரலாற்றினின்று கற்கத் தவறுவோருக்கு வரலாறு மேலும் கடுமையான முறையில் தவறவிட்ட பாடங்களைப் புகட்டுகிறது. எனவே தான் போராட்ட ஐக்கியம் பற்றிய பாடத்தை நாம் திரும்பத்திரும்ப நமக்கு நினைவூட்ட வேண்டிய தேவை உள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றிலும் பொதுபட இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றிலும் ஐக்கியமும் போராட்டமும் பற்றிய பல பாடங்களை நாம் கற்கலாம். 1953ல் ஹர்த்தால் போராட்டத்தின் வெற்றி போராட்ட ஐக்கியத்தின் வெற்றி, அந்த வெற்றியின் தொடர்ச்சியாக பாட்டாளிவர்க்கத் தலைமையில் பரந்துபட்ட ஒரு ஐக்கியம் கட்டியெழுப்பப்படவில்லை. அதற்காக இலங்கையின் இடதுசாரி இயக்கம் கொடுத்த விலை அதிகம்.

### சி.சிவசேகரம்

1963ல் 21 கோரிக்கைகள் மீது கட்டியெழுப்பப்பட்ட தொழிலாளர் ஐக்கியத்தைப் பதவி ஆசை காட்டி ஸ்ரீ.ல.சு. கட்சியால் குலைக்க முடிந்ததென்றால் அது நமது இடதுசாரி இயக்கத் தலைமைகளின் வருந்தத்தக்க நிலைமைக்கு ஒரு சான்றே ஒழிய வேறல்ல. வலது சந்தர்ப்பவாதம் இவ்வாறு பாட்டாளி வர்க்கப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தது என்றால், மறுபுறம், சரியான கொள்கையைக் கையில் வைத்து கொண்டு வரட்டுத்தனமான மாக்சியத்தை நடைமுறைபடுத்தியதன் விளைவாக, 1963 முதல் 1968 வரை வலிமை பெற்று வந்த மாக்சியலெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி வலுவிழந்தது.இதற்குச் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியும் அதன் எதிர் வினையாகக் குறுகிய தமிழ்த் தேசிய வாத அரசியலின் வளர்ச்சியும் அளித்த பங்கு பெரியது. ஜே.வி.பி. போன்ற ஒரு இயக்கத்தால் சிங்களப் பேரினவாத அரசியலை மாக்ஸிய மயக்கத் தோற்றத்துடன் முன்னெடுக்க இயலுமானதற்கு மாக்ஸிய–லெனினியத் தலைமையின் போதாமையின் பங்கை நாம் அலட்சியம் செய்தால் வரலாற்றிலிருந்து நாம் எதையும் கற்க மாட்டாதவர்களாவோம்.

வடக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தைக் குறுகிய தேசிய வாதிகள் ஆக்கிரமிப்பதற்குத் தென்னிலங்கையின் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளது நடத்தை மிகவும் உதவியது. மாக்ஸிய லெனினிய வாதத் தலைமையும் உரிய நேரத்தில் ஒரு மாற்றுத் தலைமையை வழங்காமைக்கு புறக்காரணிகள் மட்டுமல்லாது சில அகக் காரணிகளும் இருந்தன. எனினும் போராட்ட வரலாறு கூறுவது என்ன? தன் லாபத்துக்காகத் தேசிய முதலாளியம் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கத் தயங்காது என்பதே அந்தப்பாடமாகும்.

இன்று வடக்கிலும் கிழக்கிலும ஒடுக்குமுறைக்கு எதிராகப் போரிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோர் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள பாட்டாளிகளும் ஏழை விவசாயிகளுமே. எனவே இன்று தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம் பாட்டாளிவர்க்க அடையாளத்தை நோக்கி நகர்கின்றது. மறுபுறும் சர்வதேச அரங்கில் இன ஒடுக்கலுக்கான அரசின் யுத்தத்திற்கு ஏகாதிபத்திய ஆதரவு வலுப்படுவதையும் நாம் காண முடிகிறது.

இங்கே தான், நண்பன் யார் எதிரி யார் என்ற கேள்வி முனைப்புப் பெறுகிறது. மாக்ஸிய லெனினிய வாதிகள் கடந்த 50 சொச்ச வருட இடது சாரி இயக்க வரலாற்றில் கற்ற முக்கியமானபாட மாகவே ஐக்கியமும் போராட்டமும் கொண்ட போராட்ட ஐக்கியக் கொள்கையை நாம் அடையாளங் காணலாம். கொள்கை அளவிலும் நடைமுறையிலும் இதைக் குழப்பமின்றிக் கடைப்பிடித்த ஒரு மாக்ஸிய–லெனினிய வாதி என்ற வகையில் நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம் முதலில் என் நினைவுக்கு வருகிறார்.

சரியான புரட்சிகரக் கொள்கைகள் வெகுஜனப் போராட்ட நடைமுறையினின்று தான் உருவாகின்றன. சாதியத்துக்கு எதிரான போராட்டத்தின் போது ஒரு புறம் காட்டிக்கொடுப்பும் எதிரியுடனான சமரசமும் சிலரால் முன்னெடுக்கப்பட்டது. மறுபுறம் சாதியத்திற்கு எதிரான போரட்டத்தைச் சாதிகளிடையிலான போராட்டமாக்கும் ஒருவகையான போலி இடது தீவிரவாதமும் போராட்டத்தை தனிமைப்படுத்த முற்பட்டன. இவற்றுக்கிடையே, இவற்றை முன்வைத்த சக்திகளுடனுங் கூடப் போராட்டமும் ஐக்கியமும் என்ற பாதையில இணைந்து செயற்பட்டதன் மூலமே, சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டம் சாதிய எல்லையை மீறி ஒரு வர்க்கப் பரிமாணத்தையும் ஒரு பரந்து பட்ட வெகுஜயப் போராட்டப் பண்பையும் பெற்றது. சிந்தனைத் தெளிவுடன் இப் போராட்டப் பாதையை ஆராய்ந்து அறிந்ததன் விளைவாகவே நண்பர் கே. ஏ. சுப்பிரமணியத்தால் பிற்காலத்தில் வரவிருந்த நெருக்கடிமிகுந்த சூழல்கள் மத்தியிலும் தாக்குப்பிக்கக் கூடிய வலிமை கொண்ட ஒரு கட்சி ஸ்தாபனத்தை நெறிப்படுத்த முடிந்தது என்பது என் மதிப்பீடு.

இன்று இலங்கையில் ஏகாதிபத்தியத்திற்கும் பேரினவாத ஒடுக்குமுறைக்கும் எதிராக ஐக்கியப்படுத்த முடியுமான சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்த வேண்டிய அவசியம் மேலும் அதிகமாகியுள்ளது. 'புதிய இடதுசாரி முன்னணி போன்ற ஒரு அமைப்பின் தேவையை நண்பர் கே.ஏ. சுப்பிரமணியம் எப்போதோ உணர்த்திருந்தார் என்பதை அவரது அரசியல் நடவடிக்கைகளில் நாம் காணலாம். தனது கொள்கையில் தெளிவும் உறுதியும் பொது உடன்பாட்டில் நேர்மையும் ஒத்துழைப்பும் என்பதே ஒரு வலிய ஐக்கிய முன்னணிக்கான அடிப்படை நெறி. இதில் தவறுகிறவர்கள் ஐக்கிய முன்னணியை மட்டுமன்றித் தம்மையுமே அழிவுப் பாதையில் கொண்டு செல்கிறவர்களாவர். இது பற்றிய தெளிவும் அவரிடம் இருந்தது. திறந்தமனதுடனேயே ஐக்கிய முன்னணியை நோக்கிய நண்பர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் இடதுசாரி, முற்போக்கு ஐக்கிய முன்னணிக்கான விருப்பு அவர் இறந்த பல வருடங்களின் பின்பே நடைமுறைக்கு வந்தது.

சந்தர்ப்பவாதமும் தனிநபர்வாதமும் எப்போதுமே இருந்து வருகிற நோய்கள். அவை ஒரு ஐக்கிய முன்னணிக்குள் களைகள் போல இருக்கும். காலத்துக்குக் காலம் ஐக்கியமும் போராட்டமும் என்ற அடிப்படையில் சினேக பூர்வமான விமர்சன மூலம் அச் களைகள் களையப்பட வேண்டும். தனிமனிதவாத அரசியலை வெகுஜன அரசியல் மூலம் முறியடித்தே போராட்ட ஐக்கியம் கட்டியெழுப்படவேண்டும். இவ்வாறான போராட்டங்களால் ஐக்கிய முன்னணி வலுவடைய முடியுமே ஒழிய வலுவிழப்பதில்லை.

இத்தகைய ஒரு போராட்டச் சூழலிற் புதிய இடதுசாரி முன்னணி அண்மையில் தனது முதலாண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த மண்ணின் விடுதலைக்கான உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் அது தொடர்ந்து வளர்வதற்கு மாக்ஸிய லெனியவாதிகள் ஆற்றும் ஒவ்வொரு பணியும் நண்பர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் நினைவை நம் மத்தியில் நிலைத்திருக்கச் செய்வதாகும். ●

## மணியத்தார் குறிக்கோள் வீரர்

**முருகையன்**

*சுப்பிர மணியம் என்று*
*சொல்லிய மாத்திரத்தே*
*பற்பல எண்ணம் சூழ்ந்து*
*படர்ந்திடும் – தொடர்ந்து நீளும்.*
*ஒப்புரவாளர் கே. ஏ.*
*உன்னத இலட்சியங்கள்,*
*நற்பணி – இவற்றுக்காக*
*நாள் தொறும் உழைத்து வந்தார்*

*அறுபத்தெட் டாண்டின் முன்னால்*
*அழகிய ஈழ மண்ணில்*
*வடபக்கப் புலத்தில் தோன்றி*
*வாலிபப் பருவம் கண்டு,*
*முறுகிய செயல்வீரத்தின்*
*முனைப்புடன் மலர்ந்து நின்றார்.*
*உறுதியும் உணர்வும் ஓயா*
*ஊக்கமும் பூண்டு கொண்டார்.*

*சீமெந்துத் தொழிற்கூடத்தின்*
*பயிலுநர் ஆகச் சேர்ந்து,*
*போய் வந்து பணிகள் ஆற்றி*
*உழைப்பிலே திளைத்த வேளை,*
*ஆர்வங்கள் புதிசாய்த் தோன்ற*
*அங்குள்ள தொழிற் சங்கத்தின்*
*ஊழியம் சிறக்க வேண்டி*
*ஒரு பெரு முயற்சி செய்தார்.*

*உழைப்பவர் உரிமை வேட்கை*
*ஓங்கிடுமாறு தூண்டும்*
*தொழிற்சங்கத் துறையில் எய்தித்*
*தொண்டராய் மாறிவிட்டார் –*
*விழிப்பொன்றின் துவக்கம் கண்ட*
*மேல் நிலை ஆட்கள் கூடி,*
*குழப்பினாய் அமைதி என்று*
*கோபித்து முரண்டினார்கள்.*

*சரி–பிழை ஓர்ந்து கண்டார்,*
*தளர்ச்சியே அறியார், கே–ஏ.*
*பரபர என்று மேலும்*
*பணிகளில் ஈடுபட்டார்.*
*விரிவிலா அறிவினோர்கள்*
*விடுத்ததோர் சவாலை ஏற்றுப்*
*பதவியைத் தூக்கி வீசிப்*
*பாட்டையை மாற்றி விட்டார்.*

*   *   *

*மாக்சிய நெறியைக் கற்றார்,*
*மக்களின் நலத்துக்கான*
*ஆக்கங்கள் எந்தவாறாய்*
*அமைவன? என்ற கொள்கை*
*மார்க்கத்தைத் தேர்ந்து கண்டார்,*
*வழிமுறை வகுத்தாராய்ந்தார்.*
*தேக்கமுற்றிருந்த நாட்டைச்*
*சிறப்பிக்கத் தீர்மானித்தார்.*
*காத்தியர், பொன் கந்தையர்,*
*கட்சிப்பற்றாளர் எம் – சி,*
*டாக்குத்தர் சீனி... மற்றும்*
*வைத்தியலிங்கர் என்னும்*
*கீர்த்திசால் அறிஞரோடு*
*கெழுமிய ஈடுபாட்டல்,*
*தோற்றிய தெளிவு, தேர்ச்சி,*
*சுடர்கிற போதம் பெற்றார்.*

*தொழிற்சங்கத் தொண்டு தந்த*
*துய்யதோர் பண்பாட்டாலே,*
*எழுச்சியும் நிதானம் சார்ந்த*
*இயற்கையின் பதிவும் பெற்றார்.*
*செழிப்புள்ள கல்வி தோன்றும்*
*தேசிய மயத்தால் என்று*
*முழுப்பெரு முயற்சி வாய்ந்த*
*இயக்கத்தில் முனைந்து நின்றார்.*

*வாலிபர் இயக்கத்துக்கும்*
*வலிமையை ஊட்டி வென்றார்.*
*சாதியப் பாம்பு சாகத்*
*தடியடி மிண்டர் ஆனார்*
*ஆதிக்க வர்க்கத்தாரின்*
*அடாவடித் தனங்கள் சாய*
*மோதற்குத் தயங்காராகி*
*முன்சென்று முகம்கொடுத்தார்.*

*உலகத்துப் பொதுமியத்தில்*
*உடைவொன்று நேர்ந்த வேளை,*
*மலைவுற்று மயங்கல் இன்றி*
*மாஓ சே துங் நெறியிற் சென்ற*
*லெனினியம் – மாக்சியத்தின்*
*நியாயத்தை உணர்ந்து கொண்டு*
*இடது கம்யூனிஸ்ற் கட்சி*
*என்பதைத் தழுவி நின்றார்.*

*புத்தகவாதம், வெற்றுப்*
*புலம்பல்கள், சுலோகக் கூச்சல்,*
*அர்த்தமில்லாத கத்தல்,*
*அலட்டல்கள், ஆட்சி மன்ற*
*வித்தைகள், தேர்தல் கூத்தின்*
*வியர்த்தத்தை உணர்ந்து*
*கொண்டே*
*உட்கட்சி நிலையில் நின்றும்*
*உண்மைக்காய்க் குரல்*
*கொடுத்தார்.*

*வெகுசனப் போராட்டத்தின்*
*மேன்மையும் தேவைப்பாடும்*
*அவசியப் பாங்கும் நோக்கி*
*அவைகளை முன்னெடுத்தார்.*
*வகைவகையான தொண்டு*
*முனைமுகம்வகுத்துக் கொண்டு,*
*தொகுதிகள், குறிச்சி, ஊர்கள்*
*தொறும் தொறும் எழுச்சி கண்டார்.*

*தீண்டாமை ஒழிக்கும் கொள்கைச்*
*சிறப்பியல் வேள்வி ஆற்றிப்*
*பூண்டோடு சாதியத்தைப்*
*பொசுக்கிடக் கொள்ளி தொட்டார்.*
*ஆண்டோர்கள் உழைப்போர் தம்மை*
*அடக்கிடச் சூழ்ச்சி செய்தால்,*
*'மாண்டேனும் காப்போம் நீதி.*
*வாருங்கள்!' என்று நின்றார்.*

*இடது கம்யூனிஸ்ற் கட்சி*
*எழுந்ததாம். எழுபத்தெட்டில்*
*கடுகியே வளர்ந்த கட்சித்*
*தேசிய மாநாட்டின்கண்*
*பொதுச்செயலாளர் ஆனார்.*
*பொறுப்புடன் இயங்கி வந்தார்.*
*முதற்பணி கட்சிக்கென்று*
*முனைப்பொடு செயலில் நின்றார்.*

*இனமேன்மை வெறியாட்டாலே*
*இலங்கையே எரியும் வேளை,*
*கடுவேகமான நாட்டுப்*
*பிரிவினை சாலாதொன்றார்:*
*சனமேன்மை, இறைமை, தாம் தாம்*
*தம் நிலை நிர்ணயிக்கும்*
*திடமான உரிமைப் பேற்றின்*
*தேவையை உணர்த்தி வந்தார்.*

தொடர்ச்சி Vபக்கம்.....

## தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# மணியத்தார் என்றொரு கொம்யூனிஸ்ட்

**சோ. தேவராஜா**
அரசியல் குழு உறுப்பினர்
புதிய ஜனநாயக கட்சி

தமிழ் அறிஞர் குழாத்தின் ஆய்வு மனப் பாங்கில் அயல் நாட்டு தனி மனித சாதனைகளை அறிவதிலும் ஆராய்வு செய்வதிலும் அபார சாதனை படைப்பதில் விருப்புடையோராய் இருப்பது ஒன்றும் விந்தையல்ல. அதற்கு காரணங்கள் உண்டு. I. அக்கரை பச்சை என்ற என்ற உணர்வு II. தான் வாழும் சூழலை ஆய்வுக் குட்படுத்துவதில் அக்கறையீனம் III. அயல் மொழியில் அத்தனிநபர் பற்றி ஏற்கனவே ஆராயப்பட்ட நூல்களின் அனுசரனை IV. மக்கள் தெரிந்திராத விடயங்களென்பதால் பண்டித மனோபாவத்தைப் பாதுகாத்தல் V. நடைமுறையில் எவ்வித பாதிப்புகளிலிருந்தும் விடுபட்டு சுயபாதுகாப்பு அரண் அமைத்தலும் தனி மனித ஈடேற்றமும். இன்னும் ஒரு படிமேலே சென்று ஏற்கனவே அறியப்பட்ட அயல்நாட்டுச் சாதனையாளர்களை விடவும் அண்மையில் அறியப்பட்டவரும் ஆங்கில வழியில் வந்தவருமெனில் அதில் அலாதிப்பிரியம் கொண்டு ஆராய்வதில் மகிழ்வும், ஏற்கனவே எமது சூழலில் அறியப்பட்ட மாக்சீய சிந்தனையாளர்களுக்கு மாறான கருத்துடையவர்களெனில் அதில் கொள்ளைப் புளுகமும் கொண்டு பிரசங்கமே செய்துவிடும் சமகால நோய் வாய்ப்பட்ட சமூகச் சூழலில் தோழர் மணியத்தார் பற்றி பத்த வருடங்களின் பின் நாம் நினைத்துப் பார்ப்பதில் அவரிடமிருந்து நாம் பெற்ற அனுபவ–அரசியல் பாடங்கள் நமக்கு வழிகாட்டி வலுவூட்டுவனவாகும்.

முன்னாள் மாக்சீயச் சிந்தனையாளரும் இந்நாளில் அமெரிக்கத் காளாராகப் பண்பாட்டில் கிளைப்பு வருமான நோர்வேப் பேராசிரியர் போன்ற என்.ஜி.ஓ.க்களின் சொந்தக்காருமாகிய ஒருசிலர் இலங்கைத் தமிழ் சூழலை நாசப்படுத்தவெனக் கங்கணம் கட்டி நிற்கும் அந்நிய வெள்ளைத் திமிரில் உலாவரும் இவ் வேளையில் தோழர் மணியத்தாரின் வாழ்வும் பணியும் எமது சிந்தனைக்கு உரமும் அரசியல் நடைமுறைக்கு வலுவும் சேர்க்கவல்லன.

எமது தமிழ் அறிஞர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். தோழர் மணியத்தார் பற்றித் தெரிந்திருக்கிறீர்களா என்பதுதான். அது அவரை அவரது அரசியலைத் தெரிந்திராவிடில் அறுபதுகளின் பின் தமிழர் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட மக்கள் அரசியல் பண்பாட்டைத் தெரியாதவர்களாகிவிடுவோம்.

தோழர் மணியத்தாரின் அரசியல் பள்ளியில் நாம் கற்ற ஐந்து பாடங்களை இச்சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

முதலாவது, மானுட விடுதலைக்காக சமூக மாற்றத்ததை அடிப்படையாகக் கொண்டெழுந்த மாக்சீயத் தத்துவத்தை இலங்கைச் சூழலுக்கேற்ப பிரியோகித்தமையும் நடைமுறைச் சாத்தியமாக்கியமையாகும். அதாவது மாக்சியத்தை அறிமுகப்படுத்திய அறிஞர்கள் பலரும் சோவியத்–சீனப் பிரயோகங்களை அப்படியே இலங்கைக்குப் பிரதிசெய்வது போலச் செய்வதில் சாதனை படைத்து அரசியல் தோல்வி கண்ட வேளையில் தோழர் மணியத்தார் துணிந்து செயற்பட்டார்.

மாக்சீயத்தின் சாரம்சம் ஒடுக்குமுறையை இனங்காண்பதும் அதற்கெதிராகப் போராடுவதுமாகும் என்பதனை தெளிவாக உணர்ந்தமையால், வரலாற்று ரீதியில் யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சாதிய தீண்டாமைக் கொடுமைக்கெதிரான அரசியல் போராட்டத்தினை திட்டமிட்டு வழிநடத்தியதில் தனகர்த்தராக விளங்கினார்.

'தொழிலான வர்க்கம்' என்ற பதப்பிரயோகத்தை தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு மட்டுமே பிரயோகிக்கப்படக் கூடியதாகுமே தவிர 'தாழ்த்தப்பட்ட' தமிழர்களுக்குச் சற்றும் பொருந்தாதென உயர்த்தப்பட்ட தமிழ் இடதுசாரித் தமிழ்த்தலைவர்கள் அரசியல் சமரசம் செய்து கொண்டனர். அதாவது தீண்டாமை என்பதனை இந்தியப் பாணியில் காந்தியச் சமூகச் சேவையாக சீர்திருத்தக் கணிப்பில் புரிந்து கொண்டு, கொம்மியூனிஸ்ட் என்பவர் சாதி பேதம் பாராத சாதனையாளராக விளங்கும் பெருமையுடன் திருப்தி கொண்டிருந்த வேளையில் கூலித் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, சிகையலங்காரத் தொழிலாளி, பனைசீவும் தொழிலாளிகளாக வாழ்ந்த மக்களை அடிமை குடிமைகள் என்று வியாக்கியானப் படுத்தி நிலமானிய நீசத்தனத்தின் துணைகொண்டு சாதிய சமூதாயமாக நிலைத்துவிட்ட தமிழ்ச் சமூகத்தில் இரண்டு வகைப்பட்ட மனிதர்கள் விளங்குவதை அடையாளம் கண்டார். எனவே கொம்யூனிஸ்ற் கட்சியின் தளப் பிரதேசங்களாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் கிராமங்களைத் தெரிவு செய்து செயற்பட்டார்.

ஒடுக்கப்பட்ட சாதியினருள்ளும் வர்க்கச் சிந்தனையும் மேல்தட்டு வர்க்கத்தினரும் விளங்கினர். இவர்கள் சாதியின் பெயரால் சலுகைகளை அனுபவிக்கவும் சாதியின் பெயரில் சங்கமமைத்து சாதிய பழமைவாத சமூக அமைப்பைப் பேணிக்காக்கவும் பேரம் பேசி சமரசம் செய்யவும் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தனர்.

'சாதியமைப்பு தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகையை உயர்த்திப்பிடித்து 'குச்சுக் குடிகைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சி' கட்சி ஸ்தாபனத்தை கட்டி வளர்த்து – யாழ்ப்பாண பழமைத்துவச் சின்னமாக விளங்கிய மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயப் பிரவேசம் முதல் பொது இடங்களில் சாதியத்திமிருக்கெதிரான 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்' கூட்டுச் செயற்பாட்டில் தனது தனித்துவ முத்திரையைப் பதித்துக் கொண்டார். பொன்னாலையில் பொதுத் தண்ணீர் குழாய்களில் குறைந்த தொகையுடைய வேளாளருக்கு பல குழாய்கள் பொருத்தி மூடியபடி இருக்க ஒரு குழாயில் மட்டும் ஒடுக்கப்பட்ட தமிழர் வரிசையில் காத்து நின்று தண்ணீர் பெறும் பாரபட்சப் புறக்கணிப்பை அம்மக்களிடம் எடுத்து விளக்கி அம்மக்களை கிளர்த்தெழச் செய்தார்.

மக்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்குவது வெகுஜன அபிப்பிராயத்தை உருவாக்கிப் போராட்ட உணர்வலைகளை தோற்றுவிப்பதிலும் முன்னணியில் நின்று செயற்பட்டார்.

'தீண்டாமைக்' என்ற பழமைக் கொடுமைக்கெதிராக அனைத்துச் சாதியமைப்பிலுள்ளவர்களும் அணிதிரள முயச்சிகள் செய்யப்பட்டன. ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை ஒன்று சேர்ந்தனர். அக்காலத்தில் 'தமிழர்கள்' என்ற பதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாவிக்கப்படுவது தவிர்க்கபட்டு சாதியப்பெயரே அடையாளமாகப் பாவிக்கபட்டது.

இப்போராட்டச் சூழலில் உயர்த்தப்பட்ட தமிழ்ச் சூழ்ச்சியாளர் சிலர் "முதலில் சலூனில் பிரவேசம், சலவைக்கடையில் பிரவேசம் என்று உங்களுக்குள்ளேயிருக்கும் முரண்பாடுகளுக்கெதிராக போராடுக்கோவன்" என ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் நோக்கில் ஆலோசனை தெரிவித்தனர். பொது இடங்களில் உயர்த்தப்பட்ட மேலாதிக்க சமூகத்துக்கு பந்தம்பிடிக்கும் சிலரும் அவ்வாலோசனைக்குப் பணிந்தன ரெனிலும், அக்கருத்தின் பின்புலத்தை கொம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் எங்கேயும் எதற்கும் போராடுவதென்பதல்ல, மாறாக ஒடுக்குமுறையின் அடிப்படைச் சாராம்சத்தை தகர்க்கும் அணியில் வர்க்க ஒற்றுமையென்ற தளத்தில் ஐக்கியமும் போராட்டமும் என்ற தந்திரோபாயத்தை சரியான முறையில் பிரயோகித்து 'இரண்டாயிரமாண்டுப் பழைய சுமைகளைத்' தகர்ப்பதிலும் போராட்ட அணியைப் பலப்படுத்தி மாக்சியப் பிரயோகத்தை சரியான வழிமுறையில் வியூகமமைத்து செயற் பட்டதிலும் தோழர் மணியத்தாரின் ஆளுமை புரிந்து கொள்ளத்தக்கதேயாகும். இல்லாவிடில் இன்றும் தமிழ் நாட்டில் பறையர் கட்சி என விடுதலைச் சிறுத்தைகளும் பள்ளர் கட்சி என புதிய தமிழகமும் எனச் சாதிக்கட்சிகள் பல முளைத்திருக்கும் விபத்தை இலங்கை தவிர்த்தது மாத்திரமல்ல பள்ளர் கட்சி பறையர் கட்சி, நளவர் கட்சி என மேல்தட்டு வர்க்கத்து தமிழர் கொம்யூனிஸ்ட் அமைப்புகளை முத்திரை குத்தி இன்றுவரை தமிழர் சமுதாயத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் கொம்யூனிஸ்ட் அமைப்பை தீண்டாமைக்குட் படுத்திப் புறந்தள்ளம் போக்குத் தொடர்வதனையும் நாம் அவதானிக்கலாம்.

எனவே ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தொழிலாளி வர்க்கத் தலைமையை கட்டி யெழுப்புவதில் சாதி, மத, இன வேறுபாடுகளுக் கப்பால் மாக்சீயத்தைப் பிரயோகித்து வெற்றி கொள்ளும் மார்க்கத்தை வகுப்பதில் மணியத்தார் பிரதான பங்கேற்றார்.

## மாக்சீயத்தின் சாரம்சம் ஒடுக்கு முறையை இனங்காண்பதும் அதற் கெதிராகப் போராடுவதுமாகும்

தொழிலாளி வர்க்கம் நகரத்தில் தொழிற்சாலைகளில் வாழ்பவர்கள் மட்டுமேயென்று நகரங்களில் தொழிற்சங்கங்கள் அமைத்து கட்சி நடத்துவதே சரியான பணியென கொம்யூனிஸ்ற் கட்சிகள் செயற்பட்ட வேளையில், பின்தங்கிய மூன்றாமுலக நாடுகளில் வறுமையில் உழரும் கிராமங்களை தேர்வு செய்வதும், அக்கிராம மக்கள் முகங்கொள்ளும் ஒடுக்குமுறைகளைக் கண்டறிவதும், அணிசேர்ப்பதும் 1953 – ஹர்த்தால் கற்றுத்தரும் பாடம் என்பது அவரது கருத்தாகும்.

நகரத் தொழிலாளர்கள் கூட 'அரசாங்க உத்தியோகத்தர் என்ற அந்தஸ்த்து மனோபாவத்துடன் கிராமங்களில் வலம் வருவதையும் சீதனம் பெறுவதற்கு அதனைப் பெருந்தகுதியாகக் கொள்வதனையும் நாம் அவதானிக்கலாம். வங்கி ஊழியர்கள் மட்டில் எந்தளவில் தொழிலாளி வர்க்க குணாம்சம் இருக்கிற தென்பது இன்றுவரையும் கேள்விக்குரியதே! உதாரணமாக கட்சியில் மத்தியதரை வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவரைச் சுற்றி ஏழு தொழிலாளர்கள் எப்போதும் சூழ்ந்திருப்பதன் மூலமே அவரின் பாட்டாளி வர்க்கக் குணாம்சத்தைப் பேணமுடியும் என தோழர் மணியம் அடிக்கடி குறிப்பிடுவதனை நினைத்துப் பார்க்கிறேன்.

மாக்சீயப் பிரயோகம் என்பது இலங்கையின் விஷேட சூழலை தெரிந்து கொண்டு யதார்த்த வாழ்வுக்கமையப் போராட்ட அணியை வலுப்படுத்துவதே சமகாலத் தேவையாகும் என்பது தோழர் மணியத்தாரின் நடைமுறைச் சிந்தாந்த மெனலாம்.

இரண்டாவதாக, வெகுஜன அரசியல் மார்க்கத்தை தனது அரசியல் தளச் செயற்பாடாக வகுத்து கொண்டார். வெகுஜன அரசியல் மார்க்கம் என்பது ஒரு முனைத் தன்மை கொண்டதல்ல. அது பன்முகத் தன்மை படைத்தது. எந்த ஒரு விடயத்தையும் அரசியல் கண்கொண்டு அலசுவதும் அதன் அடிப்படை முரண்பாட்டைப்புரிந்து கொண்டு பெரும்பான்மைத் தொண்ணூறு வீதப் பொது மக்களின் நலனை முதன்மைப்படுத்தி அரசியல் மார்க்கத்தை தீர்மானிப்பது மாக்சீயக கடமையாகும். பொதுமக்கள் மத்தியில் கட்சி ஊழியர் என்பவர் கடலில் இருக்கும் மீன்போல எப்போதும் மக்களுடன் வாழவேண்டுமென்ற மாவோவின் உதாரணத்தை பின்பற்றினார்.

வெகுஜன அரசியல் என்பது ஆளும் அரசியல் விதியாக–கட்சித்தலைவர்கள் முதலாளித்துவ ஆட்சியாளர் விரிக்கும் நிகழ்ச்சி நிரல் வலையில் விழுந்து வெகுஜனப் பிரபல்யம் தேடுவதெனக் கருதவில்லை. மக்கள் மத்தியில் அரசியல் பாடமூட்டுவதும்–மக்களை அரசியல் மயப்படுத்துவதும் அடிப்டைத் தேவையாகும். அதாவது அரசியல் என்பது ஆட்சியில் இரண்டறக் கலப்பதல்ல என்பதில் தெளிவாக விருந்தார். பத்து வருட யூ.என்.பி ஆட்சியில் இலங்கை மக்கள் திறந்த பொருளாதாரக் கெடுபிடிக்குள்ளும் யுத்தப்பாதிப்புக்குள்ளும் ஆட்பட்டிருந்த வேளையில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பிலும் ஜனாதிபதி தேர்தலிலும் எதிரணியில் நின்று யூ.என்.பிக்கு எதிராக மக்களின் பரந்த எதிர்ப்பை வெளிப்படுத்தினார். அடுத்துவரும் ஆட்சியில் பங்கும் பதிவியும் கேட்டு ஐக்கியப்படுவதோ சரணடைவதோ அல்லது சமரசம் செய்ததோ வல்ல என்பதே அவரது நிலைப்பாடு.

இலங்கை வரலாற்றில் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் இடதுசாரிகள் முதல் தமிழ் தேசியவாதிகள் வரை ஐக்கியம் என்பதனை ஆட்சியாளருடன் இரண்டறக் கலத்தல் என்று கொச்சைத்தனமாக வெகுஜன அரசியலை அர்த்தப்படுத்தி வருவதனால் பொது மக்களே அரசியலிலிருந்து விலகி ஒதுங்கும் அவலம் இன்று ஏற்பட்டுவிட்டது. அதுவே இன்று தமிழர் அரசியலிலும் இடதுசாரிகளின் அரசியலிலும் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

விதேசியப்பண்புடைய யூ.என்.பிக் கெதிரான வெகுஜன சக்தியை வெளிப்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற தேர்தலைப் பயன்படுத்துவதற்காக இடது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் மணியத்தார் சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்திய வேளையில் 'யூ.என்.பியை ஆட்சியிலிருந்து அகற்றும் மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தவும் மக்களின் போராட்ட நம்பிக்கையை வலுப் படுத்தவும் உங்களுக்கு ஆதரவு வழங்குகிறோம். நீங்கள் ஆட்சியிலமர்ந்து தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்க நடவடிக்கை எடுக்கும் போது நாம் அதற்கு எதிராக போராடுவோம்.' என நேரடியாகவே எடுத்துக் கூறினார். அச்சமயம் சிறிமாவோ புன்னகை பூத்தார். அநுருத்த ரத்வத்தை குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார். ஐக்கியமும் போராட்டமும் என்பதனை அவ்வாறே அவர் புரிந்துகொண்டார். ஐக்கியப் படுவது அல்லது போராடுவது என ஒற்றமைப்பரிமாணத்தில் வெகுஜன மார்க்கத்தை அவர் கொச்சைப்படுத்தவில்லை.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும் வென்ற அரசுடன் பேரம் பேசுவதும் பதவி சலுகை பெறுவதும் தேர்தல் வரும் அந்திமகாலத்தில் போராட்டம் நடாத்தி வெளியேறுவதும் தமிழ் தேசியவாதிகள் முதல் பாராளுமன்ற இடதுசாரிகள் வரை செய்யும் வெகுஜன விரோத அரசியல் மார்க்த்துக்கு நேர் மாறானதே தோழர் மணியத்தாரின் பாதையாகும்.

தமிழ் தேசிய இயக்கங்கள் தமிழ்ப் பொது மக்களின் ஜனநாயக மனித உரிமைகளை வேட்டையாடியபோது இடது கம்யூனிஸ்ட் கட்சியையும், கட்சிப் பிரதேசங்களையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் யாவரினதும் மக்கள் விரோத செயலுக்கு தோழர் மணியமும் கட்சித் தோழர்களும் இலக்காயினர். எனினும் கூட அதனை பகைமுரண்பாடாக்கவில்லை. மாறாக சினேக முரண்பாடாகக் கணித்து அவர்களுடன் ஐக்கியமும் போராட்டமும் என்ற மாக்சியத் தந்திரோபாயத்தை வெகு பக்குவமாகவே பயன்படுத்திய நடைமுறை வியக்கத்தக்கதாகும். பல உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம். மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தை 1984ல் உருவாக்கி இந்தியப்படை வரும்வரையில் வெகுஜன அரசியல் மார்க்கத்தை வலுப்படுத்தி வழிநடாத்திய அவரது நடைமுறை எமக்கு பல பாடங்களைத் தரும்.

இந்திய இராணுவத்தை எதிர்த்து 16–10–87இல் இலங்கை–இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டவுடனேயே பிரசுரமடித்து எதிர்ப்பைக் காட்டி வழிகாட்டினர். எனினும் அரசியல் தீர்வு காண்பதில் முத்தரப்பு பேச்சுவார்த்தை என்பதனை முன் வைத்தார். இந்திய இராணுவத்தை வரவேற்றவர்கள் எமது கட்சியை 'சீனதாசர்கள்' என 'ஈழமுரசில்' விமர்சித்தபோதும் விட்டுக்கொடுக் காமல் தனது கருத்தை முன்வைத்துப் போராடி தமிழ் விடுதலைப் போராளிகளையும் உணரவைத்தவர்.

1988ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணத்தில் இடது கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக மக்கள் சக்தியின் சார்பில் வேட்பாளர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பண்டத்தரிப்பில் வரவேற்றது. அப்போது அங்கு தோழர் மணியம் தலைமையில் நடந்த கூட்டத்தில் பொது மக்கள் பலத்த கரகோஷத்தின்

தொடர்ச்சி IV பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



## தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# பாட்டாளி வர்க்க கட்சியும் புத்தி ஜீவிகள் மத்தியிலான வேலைகளும்

**இ. தம்பையா**

தேசிய அமைப்பாளர் புதிய ஜனநாயக கட்சி

வெறுமனே படித்தவர்கள் என்பதற்காகவன்றி மக்களுக்காக உழைக்கக் கூடிய புத்திஜீவிகளை இனங்கண்டு அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைக்கத் தவறாத ஒரு மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டாக தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்வது அவசியமானதாகும். வர்க்கமற்ற சுரண்டலற்ற சமூகத்தை உருவாக்குவதற்கான போராட்டத்தில் மாக்சியத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எண்ணிக்கையளவில் கூடியதாக இருந்த ஒரு காலக்கட்டத்தில் அவரது அரசியல் வாழ்க்கையின் பெரும்பகுதி அமைந்திருந்தது.

ஒரு மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் மாக்சியத்தை ஏற்றுக்கொண்ட அதன் வழிவாழ்கின்ற புத்திஜீவிகளுக்கு உயர்ந்த மதிப்பை கொடுப்பவராக இருப்பார். அதிலும் அவ்வகை புத்திஜீவிகள் கம்யூனிஸ்ட் கட்சியொன்றின் அங்கத்தவர்களாக இருக்கும் போது மேலும் அம்மதிப்பு உயர்த்தப்படும். அவ்வகை புத்திஜீவிகளை சமூகமாற்றத்திற்கான கட்சியின் அசைவியக்கத்திற்கு எவ்வாறு உறுதுணையாக வைத்திருப்பது என்பது மிகவும் முக்கியமான விஞ்ஞானமாகக் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் புத்திஜீவிகள் என்போர் பெரும்பாலும் புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில் முதலாளித்துவ சூழ்நிலையிலேயே பிறந்து வாழ்கின்றனர். அவர்களின் அறிவு வளர்ச்சி தொடர்ந்தும் இடம் பெறுகின்றது.அது முதலாளித்துவ அடிப்படையின் தாக்கங்களை கொள்ளாமல் அதன் செல்வாக்கிற்குட்படாததாக இருக்கும் என்று கூறமுடியாது. அதாவது முதலாளித்துவ வர்க்க பாதிப்பு அறிவிலிருந்து முற்றாக விடுப் பட்டிருக்கும் என்று கூறமுடியாது. எனவே கட்சியினுடைய வழிமுறையும் தொடச்சியான செயலூக்கமுமே புத்திஜீவிகள் தொடர்ந்து மாக்சிய நிலைப்பாட்டில் இருக்கவும், புத்திஜீவிகளின் பிறழ்வுகளிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியும். அதன் காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியொன்று புத்திஜீவிகளுக்கு கதவடைப்பு செய்யப்படுவதோ, புத்திஜீவிகளை சந்தேக கண்ணுடன் பார்க்கும் அணுகுமுறையோ பிழையானதாகவே இருக்கும். புத்திஜீவிகளை வெறுமையான கட்சியின் தேவை களுக்காக "பயன்படுத்துவது" என்பது சரியான மாக்சிச அணுகுமுறையாக இருக்க முடியாது. கட்சியின் அங்கத்தவரான பிறகு அல்லது கட்சியின் தொடர்புடைய மாக்சிசத்தை ஏற்று கொண்டவராக இருக்கும் போது சந்தேக கண்ணுடன் அணுகுவது பாட்டாளிவர்க்க உணர்வுடைய வர்களை ஓரம்கட்டும் வக்கிர போக்காகவே இருக்கும்.

முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளர்களுக்கும் மக்கள் சார்ந்த புத்திஜுவிகளுக்கும் இடையே நிலவும் முரண்பாடுகள் சிநேக முரண்பாடுகள் என்பதால் கட்சிக்குள்ளும் சிநேக முரண் பாடாகவே அணுகப்பட வேண்டும். பாட்டாளி வர்க்க அறிவியலை வளர்ப் பதில் அனைத்து துறைகளிலும். மாக்சிக புத்திஜுவிகளின் பங்கை ஊக்குவிக்க வேண்டும். புரட்சிக்கான அவர்களின் பங்களிப்பை மனித சமூக விடுதலைக்கான பங்களிப்பாக அதிகரிக்க வேண்டும்.

அதேவேளை கட்சி அங்கத்தவராகவோ, கட்சியுடன் நெருக்கமாக இருக்கும் மாக்சிச புத்திஜுவிகள் அவர்கள் புத்திஜுவிகள் என்பதற்காக ஏனைய அங்கத்தவர்களை விட கட்சியில் சிறப்புரிமையுடை யவர்களாக கொள்ளப்படுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப் படமுடியாது. அப்படி கொள்ளபடுவதால் புத்திஜுவிகளின் 'தளம்பல்களும் ஊசலாட்ட நிலைப் பாடுகளும் பங்களிப்பு என ஏற்றுக் கொள்ளப்பட்டு அழிவுகளுக்கு வழி ஏற்படுத்தும் நிலை தோன்ற முடியும்.

புத்தி அல்லது அறிவு என்பது புறச் சூழ்நிலைகளிலிருந்து உருவாகிறது என்ற மாக்சிச பொருள் முதல்வாத இயங்கியலின் அடிப்படையை ஏற்றுக்கொண்டால் புத்திஜுவிகள் என்பதால் தொடை நடுங்க வேண்டிய அவசியம் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒரு போதும் ஏற்படாது.

மாக்சிஸ்ட்டுகளாக இருக்கும் மேற்படி இரண்டு விதமானவர்களை விட சமூகத்தில் மாக்சியத்தை ஏற்றுக்கொள்ளாதபோது கட்சிக்கோ புரட்சிக்கே ஆதரவானவர்களாக இருக்கும் புத்திஜுவிகளை அடையாளம் காண்பதும் அவர்களுடன் மாக்சிஸ்ட்டுகள் ஐக்கியம் போராட்டம் ஐக்கியம் என்ற அடிப்படையில் தொடர்பை வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அவர்களை விட கட்சிக்கு புரட்சிக்கும் எதிரில்லாத புத்திஜுவிகளுடன் உறவுவைப்பதும் மிகவும் அவசியமாகிறது.

கருத்து ரீதியாகவும் நடைமுறையிலும் மாக்சிசத்திற்கும் புரட்சிக்கும் எதிரான பிற்போக்கான புத்திஜுவிகளுக்கு எதிராக கடுமையான போராட்டத்தை செய்ய வேண்டிய பொறுப்பை பிரித்தறிய வேண்டியதில் ஒரு மாக்சிஸ்ட் தவறுவிட இயலாது.

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் ஒரு மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட் என்ற ரீதியில் பல விதமான புத்திஜுவிகளின் பங்களிப்பையும் கட்சிக்கும் புரட்சிக்கும் பெற்றுக்கொள்ள பல விதமான முயற்சிகளை எடுத்திருந் தார் என்பதை அவர்களுடன் நெருக்கமாக இருந்தவர்கள் அறிவர். அவர்களின் அந்த முயற்சிகள் பற்றி புதிய ஜயநாயக கட்சி மதிப்பீடுகளை செய்ய வேண்டியது அவசியம். அம்மதிப்பீடுகள் மாக்சிஸ்ட்டுகளுக்கு வழிகாட்டியாகலாம்.

மாக்சிசத்திற்கும் புரட்சிக்கும் எதிராக புத்திஜுவிகளை மாசடைய செய்வதற்கு திட்டமிட்ட ஏகாதிபத்திய சதிகள் கூடியுள்ள இன்றைய சூழ்நிலையில் 'புத்திஜுவிகள் பற்றி மாக்சிஸ்ட்டுகள் மதிப்பீடுகளை செய்ய வேண்டியது அவசியம். கருத்தியல் ரீதியாக உழைப்பில் இருந்து புத்தியை அல்லது அறிவைப் பிரித்து தனியான கருவூலமாகப் (concept) பார்க்கின்ற பின்நவீனத்துவ கருத்துக்கள் அடிப்படையில் மாக்சிசத்திற்கு எதிரான நச்சுக் கருத்துக்களாகும்.

மார்க்சிய இயக்கம் ஏறுமுகமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் புத்திஜுவிகள் பலர் அவ் இயக்கத்தால் இலகுவாகவே ஈர்க்கப்படுவார்கள். ஆனால் தற்காலிகப் பின்னடைவுகள் ஏற்படும் சூழ் நிலைகளில் அவர்களில் பலர் தூர விலகி நின்று தமக்கு அளவான நிலைப்பாடுகளை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் சில புத்திஜுவிகள் தமக்குரிய வரலாற்றுக் கடமையினை உணர்ந்து பாட்டாளி வர்க்க இயக்கத்தில் மாக்சிசத்தின் அடிப்படையிலான பங்களிப்பை வழங்கவே செய்வார்கள். இன்றைய தேசிய சர்வதேசச் சூழல் புத்திஜுவிகளை பலமுறைகளிலும் அவரவர் நிலைகளுக்கு ஏற்ப நச்சுப்படுத்தும் வலைப்பின்னல் வேலை முறை ஒன்றினை உலக ஆதிக்க சக்திகள் வெவ்வெறு வடிவங்களில் அமைப்பு ரீதியாக முன்னெடுத்து வருவது நம் முன்னே காண இயலுமாகிறது. இவ்வேளையில் தோழர். மணியம் புத்திஜுவிகள் மத்தியில் செய்து வந்த வேலை முறையில் ஆணுகுமுறையின் அனுபவங்களை பயன் உள்ள வகையில் வளர்த்தெடுத்து சமகாலப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். இதனை கட்சியின் உறுப்பினர்கள் ஊழியர்கள் தலைமைத்துவ தோழர்கள் கவனத்தில் கொண்டு செயல் படுவது இன்றைய தேவையாகும்.

• • •

---

### மணியத்தார் என்றொ...

*III தொடர்ச்சி.......*

மத்தியில் ஸ்ரீமாவோ "பிரபாகரனுடன் பேசிப்பிரச்சினையைத் தீர்ப்பேன். இந்திய இராணுவத்தை வெளியேற்றுவேன்" என முழங்கினார்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புபில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்திய இராணுவத் தளபதி தோழர் மணியத்தாரிடம் "உங்களுக்கு புலிகளால் பிரச்சினை உண்டு. உங்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்க வேண்டும்" எனக் கூறி நிர்ப்பந்தித்த போது "உங்களை வெளியேற்றுவதற்கு போராடும் நாம் எவ்வாறு உங்கள் பாதுகாப்பில் இருப்பது" எனக் கூறிவிட்டு அன்றைய கூட்டம் முடிந்ததும் சைக்கிளில் கிராமத்தக்குச் சென்று சிலமாதங்கள் தலைமறைவாக வாழ்ந்தார். இந்திய இராணுவம் அவருக்கு 'பாதுகாப்பு வழங்க' தேடித் திரிந்தது.

வெகுஜனப் போராட்டத்தில் பற்றுறுதி கொண்ட தோழர் மணியத்தார் எவருக்கும் அடிபணிந்து சோரம் போகாமல் மக்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டார்.

விடுதலை இயக்கங்கள் மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டால் அடக்குமுறையாளருக்கு காட்டிக் கொடுப்பதோ, விடுதலைப் போராட்டத்துக்கு துரோகம் செய்வதோ, ஆட்சியாளர் அடக்கு முறையாளருடன் கூடிக் குலாவி பழி தீர்ப்பதோ மத்தியதரவர்க்கத் தலைமையின் ஊசலாட்டமாகுமென்றும் மாக்சீய கட்சியினர் மக்கள் இயக்கத்தை ஆர்ப்பாட்டத்தில் ஈடு படுத்துவதை உயிர் வாழுவதற்கான வழியென நெறிப்படுத்தினார். (காட்டிக்கொடுப்ப வேலைகளில்) விடுதலைப் போராட்டத்துக்கெதிராக ஈடுபடாமல் வெகுஜனப் போராட்டத் தினூடாகவே விடுதலை இயக்கங் களையும் வழிப்படுத்த முடியுமென நடந்து காட்டினார். பல சம்பவங்களை உதாரணமாக சொல்லலாம்.

வெகுஜன அரசியல் மார்க்கத்தில் எவ்வித விட்டுக் கொடுப்புமின்றி மக்களிடம் கற்று மக்களை அணிதிரட்டி மக்களையே தலைவர்களாகக் காணும் பணியில் கட்சியை கட்டிவளர்த்தார் தோழர் மணியம், யூலிசியஸ் பியுசிக்கின் 'இன்பத்துக்காக வாழ்வோம். இன்பத்துக்காகப் போராடுவோம், இன்பத்துக்காக மரணத்தையும் எதிர்கொள்ளவோம். என்பதனை மந்திரமாகவே வரித்துக்கொண்டார்.

மக்கள் மத்தியில் தம்மை முதன்மைப் படுத்தும் காந்தியத் தலைவராகத் தன்னைப் பிரகடனப் படுத்தாமல், ஏனைய தொழிலாளி வர்க்கத் தோழர்களைத் தலைவர் களாக்குவதில் தனது அடக்கமான ஆளுமையை வெளிப்படுத்தினார்.

அறிஞர்கள் மத்தியில் நிலவும் நிபுணத்துவ முரண்பாடுகளை உள்வாங்கிக் கொண்டு மக்கள் மத்தியில் அவர்களின் பணியைப் பெற்று உதிரிப் புலமையாளர்களாக அவர்கள் உலாவருவதற்குப்பதிலாக மக்கள் அறிஞர்களாக சிந்திக்கத் தூண்டுவதில் தனது மாக்சீயச் சிந்தனையை வளப்படுத்திக் கொண்டார். போராசிரியர் கைலாசபதி. சிவசேகரம். தில்லைநாதன், ஏ.ஜே.கனகரட்ணா. சி.வி.வேலுப்பிள்ளை ஆகிய அறிஞர்கள் முதல் பல்கழைக்கழக மாணவர்கள் வரை பலவித கருத்து மாறுபாடுகளுக்கப்பால் வெகுஜன மார்க்கத்தில் புத்திஜுவிகளை ஒன்றினைக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டார்.

தேசிய கலைஇலக்கியப் பேரவை என்பதனை அறிஞர்கள் முதல் தொழிலாளர்கள் வரை பங்கேற்கும் வெகுஜனப் பண்பாட்டுத் தளமாகப் பர்ணமிக்கும் ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் வழங்கி ஊக்குவித்தார். கந்தன் கருணை முதல் காகிதப்புலிகள் வரை நாடக இயக்கத்துக்கு ஆதரவு வழங்கி 'புது வரலாறும் நாமே படைப்போம், ஒலிப் பேழைக்கு ஊக்கமளித்து, பாடல்கள் கவிதைகள் பற்றி கலந்துறவாடி கலைஞர்களை எழுத்தாளர்களை நேசித்து இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து நூல்களை வெளியிடும் பணியினையும் தொடக்கி வைத்தார். நூல்கள் வெளியிடுதல் 'நூறுமலர்கள் மலரட்டும், நூறு கருத்துகள் முட்டிமோதட்டும்' என்ற அகன்ற ஆழமான பெருஞ் சுவர் போன்ற நெஞ்சு மாக்சிஸ்ட் ஒருவனுக்கு அமைதல் வேண்டுமென்பார். எந்தக் கப்பலும் அங்கே பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்பார். கதவடைப்பு வாதமென்பது வெகுஜன மார்க்கத்துக்கு விரோதமானதாகும். எந்தப் பிழையையும் மக்களே தீர்மானிக் கட்டும். பிழையை நாம் சுட்டிக்காட்ட லாம். ஆனால் அதனைச் செய்பவரே அதனைச் பிழையென உணர வேண்டும். எனவே அவரது வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு உதவ வேண்டும். அரங்கில் ஆடுவதற்கு அனுமதிக்க வேண்டும். அங்கே அவையினர் சிரிக்கும் போதே நிர்வாணமாக நிற்பதை அவர் புரிந்து திருத்திக்கொள்வார் என்பது அவரது கலைஞர்கள் எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள் என்போர் மீது வைத்த அனுகுமுறையாகும். எழுத்தாளர் டானியல் மீதான விமர்சனத்தை கட்சியினர் பகிரங்கப்படுத்தாமல் உள்ளகப்படுத்தி வைத்திருப்பின் நன்று எனக் குறிப்பிட்டமை கவனங் கொள்ளத் தக்கது. மாஓ முதல் லூசுன் வரை அவர்களின் கலைக் கொள்கைகளை கோட்பாடுகளை சளைக்காமல் புதிய எழுத்தாளர்களுக்கு விளக்கி விளக்கமளிப்பார், வீரம் விளைந்தது, தாய், தூக்கு மேடைக் குறிப்புகள், சிறந்த கொம்யூனிஸ்ட் ஆவது எப்படி போன்ற பல நூல்களை வாசிக்கும்படியும் விவாதிக்கும்படியும் ஆலோசனை வழங்வார். அரசியலும் கலையும் பல்லும் சில்லும் எனக் கருதி பண்பாட்டு வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

மக்கள் தலைவர்கள், போராசிரியர்கள் வானத்திலிருந்து வருபவர்களல்ல, மண்ணிலிருந்து விளைபவர்களே என்பதனால் அவர்கள் மீதான குறைபாடுகளை புரிந்து தெளிந்து அவர்களுடன் உறவைப் பேணுவதில் வரட்டு மாக்சீயத்தையோ, பிராமனியத் தூய்மைவாதக் கோட்பாட்டையோ, நடைமுறையையோ நிராகரித்து சிநேகமுரண்பாடுகளை அவ்வவ் தளங்களில் விவாதித்து வெகுஜனச் செயற்பாட்டில' அவர்களை முன்தள்ள வேண்டும் என்பது நடைமுறையாகும். சோர்வுக்கும், நம்பிக்கையீனத்துக்கும் அவர் ஆட்படுவது கிடையாது. மக்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் கிண்டல் செய்பவர்களை அவர் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. அத்தகையவர்கள் உண்மையான செயற்பாட்டாளர்களாக வளருவது சிரமம் என்பது அவரது அனுபவமாகும்.

எந்தக் கட்சித் தோழர்கள், நண்பர்கள் மத்தியிலும் அவர்களது வீட்டு நிலைமைகளின் துன்பங்களில் பங்கேற்பதும், வீட்டுத்தலைவியரே வீட்டை நடத்துவதில் முதன்மை செலுத்தபவர்களென்பதால் அடுப்படிவரையும் நமது அரசியல் உறவு அமைய வேண்டும் என்பது அவரது துணிவாகும். பெண்களைப் பெருமளவில் அரசியலில் பங்குபெற வைப்பது கட்சியினரின் பணியாகுமென்றும் அதனை நடைமுறையில் ஒவ்வொரு குடும்பமுமே பொதுப் பணிக்குத் தம்மை அர்ப்பணிப்பதன் மூலம் வெகுஜன அணியைக் கட்டியெழுப்புவது சுலபமான வழிமுறையாகும். இங்கு குடும்ப ஆதிக்க அரசியல் என்ற பழமை வாதப்பண்பல்ல என்றதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சமகாலப் போராட்டச் சூழலில் அனைவரதும் பங்களிப்பே தவிர 'வீட்டுக்கொருவரது' அரசியல் தியாகம். அவசியமல்ல என்பது அவரது கருத்தெனலாம்.

மூன்றாவதாக, தமிழ் தேசியப் போராட்டத்தினை நான்கு கட்டப் போராட்டவரலாறாக வியாக்கியானப் படுத்தி தேசிய ஜனநாயக புரட்சிக்கான முன் தேவையை எடுத்து விளக்கியிருந்தார். பாட்டாளி வர்க்கத்தலைமையை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வழங்குவதன் மூலம் நாம் இப்பணியை நிறைவேற்றலாம் என்பது அவரது கருத்தாகும். இதுபற்றிய விரிவான ஆய்வு அவசியமாகும்.

நான்காவதாக, கட்சியின் ஜனநாயக மத்தியத்துவ நடைமுறையாகும். கூட்டுத்தலைமையும் தனிமனித பொறுப்பையும் நடைமுறைப் படுத்தியவர். கட்சி ஸ்தாபனத்தினுள் கருத்தை எடுத்துச் சொல்வதும் அது பற்றிய முரண்பாடிருக்குமெனில் அதனைத் தவிர்ப்பதும் கட்சியில் முடிவு தனது கருத்துக்கு விரோதமாக இருக்குமெனிலும் முன்னணியில் நின்று செயற்பட்டமையும் அவரது கம்யூனிஸ்டின் நடைமுறையாகும்.

ஐந்தாவதாக, சிங்கள, முஸ்லிம் மலையக, தமிழ் மக்கள் மத்தியில் தேசிய உணர்வைத் வளர்த்தெடுப்பதில் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தைக் கட்டியெழுப்பும் இலக்கை தனது இலட்சியமாக கொண்டு தனது இறுதி மூச்சு வரை இலட்சிய வீரராக வாழ்ந்த வீர வரலாற்றில' நாம் பெறவேண்டிய படிப்பினைகள் அநேகமெனலாம்.

சர்வதேச சமூகத்தின் ஒரு போராளியாக வாழ்ந்த அவரது பிரபஞ்ச உண்மையாகிய மாக்சியப் பற்றும் மாக்சிய வாழ்வும் இன்றைய சமகால நவகாலனித்துவ சூழலில் நமக்குப் பலமான அடித்தளமாகுமென்பதில் நம்பிக்கையுடையோம். இறுதியாக, அவர் தனது தனிப்பட்ட வாழ்வின் சுயசரிதையை வெறும் புராணமாக அல்லது புலம்பலாக தியாக வரலாறாக எழுத விரும்பவில்லை. 'ஒரு கம்யூனிஸ்ட்டின் சய விமர்சனம் என்ற தலைப்பில் சில குறிப்புகளைச் சேர்த்து வைத்திருந்தார்.

தனது மரணத்தை தெரிந்தவராகவே வாழ்ந்தார். எனினும் நாம் அதனை இவ்வளவு விரைவில் எதிர்நோக்கவில்லை. "விடைபெறுகிறேன்" என்று தனது இறுதி நிகழ்வு அமைய வேண்டுமென விரும்பினார்.

அவரது இறுதி வழியனுப்பு வைபவம் மத அனுட்டானங்களின்றி மாக்சிய வழிமுறையில் செம்மலர் தூவி செம்பதாகை ஏந்தி மரியாதை செய்து வழியனுப்பி வைத்தோம்.

மணியத்தார் மரணிக்கவில்லை. மக்கள் மனங்களில் நிறைந்து வாழ்கிறார். அடுத்த நூற்றாண்டின் விருட்சமாக அவர் விளங்குவார்.

• • •

நன்றி - நூலகத்திட்டம்



## தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள்

தோழர் மணியத்தின் நினைவு வெறுமனே ஒரு சம்பிரதாய பூர்வமான ஒன்றல்ல. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றுப் பதிவாகவும் புதிய தலைமுறைத் தொடர்புகளுக்கு ஒரு வழிக்காட்டல் கொள்கையாகவும் அமைத்தல் வேண்டும். சிறந்த பொதுவுடைமைவாதியாகவும் வர்க்க சீற்றங்களுக்கு மத்தியில் துணிவு மிக்கப் போராளியாகவும் வலம் வந்த தோழர் மணியம் அனைத்து ஒடுக்க முறைகளையும் எதிர்த்து நின்றவர். அவருடன் கட்சிவேலைகளில் மிக நெருக்கமாக இருந்தவர்களில் ஒருவன் என்ற வகையில் என் அவதானிப்புகளை முன்வைக்க விரும்புகிறேன்.

1958ம் ஆண்டு கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்தின் தைப்பொங்கல் மாநாடு நடைபெறுவதற்கு ஒருவாரம் முன்பாக தோழர் கே.ஏ.சுப்பரமணியத்தை வலி வடக்கு வாலிபர் இயக்க அங்குரார்ப்பனக் கூட்டத்தில் சந்தித்தேன். ஏற்கனவே தோழர் மணியத்துடன் அறிமுக மாகியிருந்த தோழர் குமாரலிங்கம் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவ்வேளை தோழர் மணியம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபகுதி முழுநேர ஊழியராக நியமனம் பெற்று வலி வடக்கிற்கு பொறுப்பாக இருந்தார். அவ்வேளை 'கலைமதி' இலக்கிய சஞ்சிகையும் 'தேசாபிமானி' அரசியல் பத்திரிகை யாகவும் வெளி வந்து கொண்டிருந்தன. இதற்குப் பொறுப்பாக இருந்த தோழர் மணியம் ஒவ்வொரு வாலிபர் இயக்க உறுப்பினரும் ஐந்து பிரதிகள் ஒவ்வொன்றிலும் விற்பனை செய்து அதற்குரிய பணத்தை ஒப்படைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார். இதனை ஒரு வேலை முறையாக்கி அதன் ஊடாக மக்கள் மத்தியிலான அரசியல் இலக்கிய தொடர்புகளுக்கு வழி காட்டினர். அன்று அத்தகைய கட்சி உணர்வோடு பத்திரிகை, சஞ்சிகை, நூல்களை விற்று கட்சிவேலை செய்ய ஆரம்பித்த நான் இன்று வரை அதனை அதே உணர்வோடு கட்சி வேலையாகக் கொண்டிருக்க முடிகின்றது என்றால் தோழர் மணியத்தின் உணர்வு பூர்வமான வழிகாட்டல் என்றே கூற வேண்டும்.

மேற்படி வாலிபர் இயக்க மாநாட்டு வேலைகளில் போது இரண்டாவது மூன்றாவது தடவை அவருடனான சந்திப்புகளில் எமது பிரதேசத்தின் நிலைமைகள் பற்றி சற்று விபரமாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. தோழர் மணியம் வடபகுதி கொல்லன் கலட்டியைச் சேர்ந்தவர். அவரது கம்யூனிஸ்ட் கட்சிப் பிரவேசத்தையும் தீவிரமான,வேலைமுறைகளையும் அவரது சுற்றத்தினர் உறவினர்கள் விரும்பமில்லை. காரணம் அவர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான கு. வன்னியசிங்கத்தை உறவு காரணமாகவும் சாதி வர்க்கம் காரணமாகவும் ஆதரித்து நின்றமையாகும். அவ்வேளை தோழர் மணியமும் அவருடன் இணைந்து வேறு சில தோழர்களும் கட்சி வாலிபர் இயக்கப் பணிகளில் ஈடுபட்டமை அன்றைய நிலவுடைமை ஆதிக்கச் சூழலில் குறிப்பிடத் தக்கதாகும். நாளடைவில் கொல்லங்கலட்டி, கீரிமலை, கூவில், கலட்டி போன்ற கிராமங்களில் கட்சி வேலைகள் விரிவாகின, அதே போன்று எனது கிராமமான தையிட்டி காங்கேசன்துறைப் பகுதிகளிலும் வாலிபர் இயக்க வேலைகள் விரிவாக வேண்டும் என்பதை மணியம் தோழர் வற்புறுத்தினார். ஏற்கனவே தோழர்கள் டாக்டர் சு.வே.சீனிவாசகம். குமாரலிங்கம், கந்தப்பிள்ளை, சிதம்பரி, விரி.செல்வராசா, மயில்வாகனம் போன்றவர்கள் இருந்தனர். அவர்களுடன் நான் இணைந்து கட்சி வாலிபர் இயக்க வேலைகளை முன்னெடுக்க ஆரம்பித்தேன்.

குறித்தபடி 1958ம் ஆண்டு 14ம் திகதி தைப்பொங்கல் மாநாடு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இடம் பெற்றது, குடாநாட்டின் நான்கு திசைகளில் இருந்தும் மாநாட்டுக்கு வந்த வாலியர் பிரதிநிதிகள் யாழ் ஆரியர் குளம் சந்தியில் ஒன்று கூடி அங்கிருந்து ஊர்வலமாக மாநாட்டு மண்டபத்தை அடைந்த காட்சி இப்போதும் நெஞ்சில் உணர்வலைகளை தோற்றுவித்து நிற்கின்றன. அன்றைய வாலிபர் மாநாட்டில் தோழர் மணியமும் தோழர் ஜெயசிங்கமும் இணைந்து ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தனர். அதாவது 1955ல் இடம் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி வல்வெட்டித் துறை மாநாட்டில் நிறைவேற்றிய பிரதேச சுயாட்சியின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற தீர்மானத்தை வாலிபர் இயக்க மாநாட்டுத் தீர்மானங்களில் இடம் பெற வைத்தனர். அதனை மாநாடு ஏற்றுக் கொண்டது. அன்றைய மாநாடு தெரிவு செய்த வாலிபர் இயக்க பிரதேசக் கமிட்டியில் தோழர் மணியத்துடன் ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். அவர்களில் நானும் ஒருவனாகி இறுதி வரை தோழர் மணியத்துடன் இணைந்து கட்சி, வேலைகளை முன்னெடுத்து வந்தேன் என்பதில் மன நிறைவு காண்கின்றேன்.

**இ.க . சூடாமணி**
**மத்திய குழு உறுப்பினர்**
**புதிய ஜனநாயக கட்சி**

வாலிப இயக்கத்தில் இணைந்த பின்பு நான் கட்சி உறுப்பினராக ஆகிக் கொண்டேன். இது 1958 ம் ஆண்டின் நடுப்பகுதியாகும். என்னுடன் சேர்ந்து ஆறு பேர் புதிய அங்கத்தவராகினோம். சுன்னாகத்தில் உள்ள கட்சி காரியாலயத்தில் வலி வடக்கு கட்சி அமைப்புப் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பல விடயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் வீ.பொன்னம்பலம் மணியம் தோழரிடம் ஒரு கேள்வி கேட்டார். நீர் எதற்காக வடமராட்சித் தோழருடன் சேர்ந்து வாலிபர் மாநாட்டில் பிரதேச சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டு வந்தீர். அதனை இங்கு பேசியிருக்கலாமே என்றார். பிரதேச மாநாட்டில் தீர்மானம் கொண்டுவருவதற்கு எல்லைகளோ குறிப்பிட்ட தொடர்புகளுடன் தான் கொண்டு வர வேண்டும் என்று இல்லை எனப் பதிலளித்தார். வி.பொன்னம்பலத்தின் கேள்வியில் குறுகிய எண்ணமும் குறிப்பிட்ட

## போராட்ட சந்தர்ப்பங்களில் தோழர் மணியத்தின் உணர்வும் உறுதியும் முன்நிற்கும்

தோழர்கள் மீதான குரோதமும் இருந்ததை அவதானிக்க முடிந்தது. அப்போது தோழர்கள் சீனிவாசகம், யோகேந்திர சர்மா ஆகியோர் தோழர் மணியத்தின் கருத்தை ஆதரித்து பேசினார்கள், அவ்வாறே சாதிப்பிரச்சினையிலும் வி. பொன்னம்பலம் சாதியை ஒழிக்க முடியாது என்று வாதாடினார். ஆனால் தோழர் மணியம் சரியான போராட்டங்களை முன்னெடுத்தால் சாதியை முறியடிக்க முடியும் என்று இடித்துரைத்தார். இது போன்ற கருத்துக்கள் விரிவடைந்து கட்சிக்குள் 63ல் பிரிவு ஏற்பட்ட போது தோழர் மணியம் புரட்சிகர நிலைப்பாட்டில் நிற்கவும் வி.பொன்னம்பலம் பாராளுமன்றப் பாதையை நாடிச் செல்லவும் இறுதியில் கூட்டணியுடன் இணைந்து கொண்டதையும் காணமுடிந்தது.

அவ்வாறே தொழிலாளி வர்க்கம் வடபகுதியில் எந்த நிலையில் உள்ளது விவசாயிகள் மத்தியில் எவ்வாறு வேலை செய்வது பற்றி மணியம் தோழரின் கருத்துக்களுக்கும் அ. வைத்தியலிங்கம் வி.பொன்னம்பலம் ஆகியோரது நிலைப்பாட்டிற்கு மிடையில் பெரிய இடைவெளி இருந்ததைக் காண முடிந்தது. காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை கூட்டுத்தாபனமாக மாறிய சூழலில் தொழிலாளர்களுக்கான பஞ்சப்படி 7.50 வழங்கப்படாமல் இருந்தது. இதை ஒரு முக்கிய விடயமாக கவனத்தில் எடுத்து அன்றைய தொழிற் சங்கத் தலைவர்களான எம்.ஜி மென்டிஸ் என். சண்முகதாசன் மூலமாக அதனைக் கிடைக்கச் செய்வதிலும் தோழர் மணியம் முழு முயற்சி எடுத்துக் கொண்டார். அவ்வாறே 1962ல் சீமெந்து தொழிற்சாலையில் ஒரு மாதகாலம் தொடர்ச்சியாக இடம் பெற்ற வேலை நிறுத்தத்தில் தோழர் மணியம் மிகவும் பயன் மிக்கப் பாத்திரத்தை வகித்தார். வெறுமனே அதனை ஒரு தொழிற்சங்க வேலை நிறுத்தம் என்று நோக்குவதற்குப் பதிலாக அதனை ஒரு போராட்டமாகவும் அப் போராட்டத்தில் வர்க்க குணாம்சங் களை வெளிக்கொணரச் செயற்பட்டார். அத்துடன் முழுக்கட்சி வாலிபர் இயக்கத்தையும் அவ்வேலை நிறுத்தத்துடன் இணைப் பதில் முன்னணிப் பாத்திரம் வகித்தார். வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்ட தொழிலாளர்களுக்கு நிதி, உணவுப் பொருட்கள் சேகரிப்பதிலும் தொழிலாளர்களது கோரிக்கைகளில் நியாயங்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதிலும் வாலிபர் இயக்கத்தை வழிநடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். முப்பது நாட்கள் நீடித்த அவ்வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவருதில் சில புரட்சிகரமான செயல்பாடுகளைச் செய்வதற்கும் மணியம் தோழர் குறிப்பிட்ட தொழிற்சங்கத் தலைமைத் தோழர்களுக்கு ஆலோசனை வழங்கி பக்கபலமாக இருந்தார். இறுதியில் நிர்வாகம் இறங்கி வந்து தொழிலாளர்களின் பல முக்கிய கோரிக்கைகளை வழங்கியது. சீமெந்துச் தொழிற்சாலை 1990ம் ஆண்டு ராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்படும் வரை தொழிலாளர்கள் அனுபவித்த உரிமைகள் பல அன்றைய விட்டுக் கொடுக்காத போராட்டங்களால் பெறப்பட்டவை என்பதைப் பின்னாளில் பலர் மறந்து விட்டமை கவலைக் குரியதாகும்.

1958ம் ஆண்டில் தோழர் மணியத்தை முதல் முதலாகச் சந்தித்த நாள் முதல் 1989ல் அவர் மறையும் வரை முப்பத்தியொரு ஆண்டுகள் தோழர் மணியத்துடன் இணைந்து நின்று பல்வேறு நிலைகளில் தத்துவார்த்த அரசியல் வெகுஜனப் போராட்டங்களில் பங்கு கொண்டு வந்திருக்கிறேன். அவ்வேளையில் தோழர் மணியத்திடமிருந்து அநேக விடயங்களை அவதானிக்கவும் படிக்கவும் முடிந்தது. அவர் ஒரு மேடை பேச்சாளர் அல்ல. அதே போன்று விடயங்களை நீட்டிக் கூறுபவரும் அல்ல. ஆனால் அவரது ஒவ்வொரு வார்த்தைகளிலும் ஆழமான அர்த்தங்களும் தூரநோக்குச் சிந்தனைகளும் அடங்கியிருக்கும். அவர் என்றும் எச் சந்தர்ப்பத்திலும் தனது சொந்த வாழ்வுக்கான சுயநலத்தை துளியளவும் முன்வைத்தது கிடையாது. ஒரு முன்னுதாரணம் மிக்க கம்யூனிஸ்ட் ஊழியராக, போராளியாக, தலைவராக வாழ்ந்து மறைந்தார். அவரது சொல்லும் செயலும் வாழ்வும் நமது செயல்களின் வழிகாட்டிகளாக இருந்து வருவதுடன் புதிய த்லைமுறையைச் சேர்ந்த கம்யூனிடஸ்டுகளுக்கு வெளிச்ச வீடாக என்றும் இருக்கும் என நம்புகிறேன்.

---

**தோழர் மணியம்.....**

1ம் பக்க தொடர்ச்ச...

இன்றைய சமுதாயத்தின் ஒடுக்குமுறைகளால் அடக்கப்படும் ஒருவர் கம்யூனிஸ்டாகி நிற்பது என முடிவு செய்து விட்டால் அதற்கான வாழ்க்கை முறையை அமைத்து விட்டால் எத்தகைய முதாலாளித்துவ நச்சுச் சூழலாலும் அத்தகைய ஒருவரை எதுவும் செய்து விட முடியாது. "ஆயிரம் வெட்டுக் காயங்கள் பட்டும் இறக்க அஞ்சாதவன் சக்கரவர்த்தியை குதிரையில் இருந்து வீழ்த்தத் துணிவான்" என்பதை தோழர் மாஓ சீனப் புரட்சியின் போது சுட்டிக் காட்டி சீனக் கம்யூனிஸ்டுக்களை புரட்சிகர சாதனைகள் செய்ய வழி காட்டியவர். எனவே இன்றைய கேடுகெட்ட சுரண்டல் சமூக அமைப்பை மாற்றுவதைத் தவிர அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராடுவ்தைத் தவிர வேறு வழி இல்லை. இதனை உணர்ந்து ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வொவரும் மாக்சிஸ்ட் லெனினிஸ்டாக வளர முடியும். இதனையே தோழர் மணியம் தனது அர்ப்பணிப்புமிக்க அரசியல் வாழ்வு முறையால் நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார். அவரது உயர்ந்த புரட்சிகர எண்ணங்களையும் சிந்தனைகளையும் நமது கட்சியின் ஊடாக முன்னெடுப்பதே தோழர் மணியத்தை நினைவு கூர்வதற்கான எமக்குரிய அடிப்படையாகும். அவரது புரட்சிகர நினைவுகள் என்றும் காலத்தால் அழிக்கப்பட முடியாதவைகளாகும். • •

---

தொடர்ச்சியின் தொடக்கம்...

## மணியத்தார் குறிக்கோள் வீரர்

*இந்திய மேலாதிக்கம்*
*இலங்கையை விழுங்க வந்தால்,*
*அந்த ஓர் நிலைமை தன்னை*
*அனுமதித்திடுதல் நன்றோ?*
*இந்த நாட்டவர்கள் எல்லாம்*
*இசைந்தொன்றாய் எதிர்க்க வேண்டும்:*
*சொந்த நாட்டன்பு பூண்டு*
*தொழிற்படல் வேண்டும் என்றார்.*

*அரசியல்வாதியாக மாத்திரம்*
*நின்றார் அல்வர்.*
*கலைகளை விரும்பிப் போற்றும்*
*சுவைஞாய், அறிவே எங்கும்*
*பரவிட, நூல்கள், ஏடு*
*பாட்டுகள், கூத்து யாவும்*
*பொலிவொடு பெருக வைக்கும்*
*புது நல ஆர்வம் கொண்டார்.*

*தேசிய இலக்கியங்கள்,*
*செந்தமிழ்ப் பதிப்பு வேலை,*
*ஆசியப் பண்பாடென்ற*
*அமைவுகள் பற்றி எல்லாம்*
*பேசிடல் மட்டும் அன்றிப்*
*பிரசுர முயல்வின் மீதும்*
*ஆசை கொண்டு, ஊக்கம் நல்கி*
*ஆதரவளித்து நின்றார்.*

*பொருளியல் ஏற்றத் தாழ்வுப்*
*பூசல்கள், சுரண்டல், நாசக்*
*கிருமிகள் முழுதும் போக்கி,*
*கீழ்நிலை ஒழித்து நீக்கும்*
*பெரியதோர் இலட்சியத்தைப்*
*பேணவும், இந்த நாட்டின்*
*உரிமையும் வளமும் பண்பும்*
*ஓங்கவும் உழைத்தார், தோழர்.*

* * *

*மணியத்தார் வளர்த்த அந்த*
*மாண்புசால் இலட்சியங்கள்,*
*உணர்வுக்கே ஊட்டம் தந்த*
*உள்ளொளித் தேர்ச்சி ஞானம்,*
*துணிவுக்கும், சித்த நேர்மைத்*
*தூய்மைக்கும், மக்கள் சக்திப்*
*பணிவுக்கும் வாழ்வைத் தந்த*
*பண்பாட்டைப் போற்றுகின்றோம்.*

*புது ஜனநாயகத்தை,*
*புதுக்கலாசாரம் தன்னை,*
*புதிய நாகரிகம் என்ற*
*பொதுமியம் பயிரை நாடி,*
*விதையிட்டுத் தண்ணீர் பாய்ச்சி*
*விட்டவர் மணியர் என்போம்:*
*எதிர்வரும் காலத்துக்காய்*
*இயற்றினார் தவங்கள் என்போம்.*

*பாடுபட் டுழைப்போருக்கே*
*பாரெலாம் சொந்தம் என்றும்*
*கேடுகெட் டுழுத்த புன்மைக்*
*கீழ் நிலை அமைப்பை மோதிச்*
*சாடுவம் என்றும் உந்தும்*
*சமதர்மப் போர்க் குணத்தின்*
*பீடுகள் முடுக்க வந்த*
*பெரியவர், கே.ஏ. என்போம்.*

* * *

*மணியத்தார் கொள்கை வாழ்க:*
*வாழ்க்கையின் நோக்கம் வாழ்க:*
*மணியத்தார் பேணிக் காத்த*
*விழுமிய மாட்சி வாழ்க:*
*மணியத்தார் குறிக்கோள் வாழ்க:*
*மனுக்குலம் முழுதும் வாழ்க,*
*மணியத்தார் பணியால் நேர்ந்த*
*மலர்ச்சியின் மணங்கள் நீள்க.*

**சி.கா. செந்திவேல்** அவர்களின் உரையொன்றைப் பின்பற்றி இயற்றப்பட்டது. செய்யுள் 7 இல் குறிக்கப்படும் அறிஞர்கள் :

**மு. கார்த்திகேசன்,**
**டாக்டர் சு.வே. சீனிவாசகம்,**
**பொன். கந்தையா,**
**அ. வைத்தியலிங்கம்,**
**எம். சீ. சுப்பிரமணியம்.**

நன்றி - நூலகத்திட்டம்



## தோழர் மணியம் மறைவின் 10வது ஆண்டு நினைவாக

# அரசியல் வேலைகளுக்கு ஆற்றல்களை அடையாளம் காண்பதில் வல்லவர்.

தோழர் மணியம் மறைந்து பத்து வருடங்கள் பூர்த்தியாகின்றது. அவரது நினைவானது எம் மத்தியில் இன்றும் பசுமையாக நிலைத்திருக்கின்றது என்றால் அவரது வேலை முறையின் தன்மை என்றே கூறுதல் வேண்டும். மனிதர்கள் என்போரிடம் ஆற்றல்களும் திறமைகளும் நிறையவே உண்டு. ஆனால் அவை ஒரே மாதிரியானவை அல்ல. வெவ்வேறு வகை பட்ட திறமைகள் ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய தளங்களில் ஊக்கு விக்கப்பட்டு வெளிக் கொணரப்படும் போது அது சமூகத்தின் முன் னோக்கிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

அவ்வாறே ஒரு கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கட்சியின் வளர்ச்சிக்கும் அதன் தலைமையிலான போராட்டங்களுக்கும் மனிதர்களின் திறமைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். அதில் கூட கட்சிக்கு உள்ளே இருப்பவர்களது திறமை மட்டுமன்றி கட்சிக்கு வெளியே உள்ளவர்களின் திறமைகளை பெற்று பயன் அடைவது ஒரு கட்சி தலைமைக்கு முக்கிய பொறுப்பாகும்.

அந்த வகையில் தோழர் மணியம் பலதரப்பட்டவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு அவற்றைக் கட்சிக்கும் அதன் போராட்டங்களுக்கும் நன்கு பயன்படுத்தினர். கட்சியில் உள்ளவர்கள், கட்சிக்கான நண்பர்கள், கட்சிக்கு அப்பால் உள்ள ஆனால் கட்சி விரோதமற்றவர்கள் என்ற மூன்று தரப்பினரை அடையாளப் படுத்தி தனது வேலை முறையை முன்னெடுத்தார்.

இந்த மூன்று தரப்பினரையும் அவர்களுக்கு உள்ள திறமைகள் ஆற்றல்கள் என்பனவற்றை அராய்ந்து பொறுமையாக அவர்களுடன் பழகி அவர்களது திறமைகளை ஊக்கு வித்துக் கொள்வார். பின்பு கட்சி அத்தகையவர்களிடமிருந்து பெறக்கூடிய வேலைகளை ஒழுங்குப் படுத்தி பெற்றுக் கொள்ளும் திறமை அவர்களிடமிருந்தது. மேலும் கூறினால் 'வேலை வாங்குவதில்' அவரின் ஆளுமை முக்கியமானதாகும். அந்த வேலை வாங்குதல் என்பது கட்சிக்கும் போராட்டங்களுக்கும் உரியதாகவே இருக்கும். எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று இருந்த பல தோழர்களை அவரவருக்குரிய வேலைகளின் மூலமாக முன்தள்ளி நெறிபடுத்திய பல சந்தர்ப்பங்களை அவரோடு வேலை செய்த காலங்களில் அவதானிக்க முடிந்தது.

இச் சந்தர்ப்பத்தில் கியூபப் புரட்சியின் போது ஒரு காலை இழந்த நபர் ஒருவர் ஆற்றிய பணியை நினைவு கூற முடியும். கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் தொலைவில் மலைப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த புரட்சித் தலைவர்களுக்குமிடையில் தகவல் பரிமாறுவதற்கு இந்த கால் இழந்த நபர் தனது ஆற்றலை துணிவுடன் செயலாக்கினார். பல இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டியே மலைப்பகுதியை அடைய முடியும். மேற்படி நபரின் ஊனமடைந்த காலுக்கு மறுபக்கத்தில் வைத்தியம் செய்ய வேண்டும் எனக் கூறி ஒரு டாக்டர் கடிதம் கொடுத்து விடுவார். அத்துடன் கட்சியின் தகவலை ஊனமுற்ற காலில் வைத்து பண்டேஜ் பண்ணியும் விடுவார். இந்த நபரால் எதுவும் செய்ய முடியாது எனக் கண்ட இராணுவத்தினர் எவ்வித சோதனையும் இன்றி அனுப்பிவிடு வார்கள். தகவல் உரிய இடத்திற்கு இந் நபரால் எடுத்துச் செல்லப் பட்டு விடும் பின் அவ்வாறே மலைப் பகுதிகளில் இருந்து ஊனமுற்ற காலில் வைத்து பண்டேஜ் செய்யப்பட்டு மறுபக்கத் திற்கு தகவல் கொண்டு சேர்க்கப்பட்டு விடும். இவ்வாறு ஒவ்வொருவரது திறமை என்பது மனிதகுல விடுதலைக்கான இலட்சியப் போராட்டங்களில் ஒவ்வொருவராலும் ஆற்றப்பட்டே வந்திருக்கிறது.

**- சிறீ -**

நான் தோழர் மணியத்துடன் பழகியதன் மூலம் என்னிடமிருந்து பெறக்கூடிய பணிகளை கட்சிக்குப் பெறுவதற்கு அவர் தனது ஆளுமையைப் பயன்படுத்தினார் என்றே கூற வேண்டும். எனக்குள்ள ஆங்கில அறிவை மேலும் விருத்தி பெறச் செய்வதற்கு பயன் உள்ள ஆங்கில சஞ்சிகைகள் நூல்களைத் தந்து உற்சாகமளித்ததுடன் மொழிப்பெயர்ப்பு வேலைகளை படிப்படியாக ஒப்படைத்து கொண்டார். அவ்வப்போது கட்டுரைகள், செய்திகள் விபரங்களை மொழிப் பெயர்ப்பு செய்விப்பார். வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் காலையில் கட்சி அலுவலகத்திற்கு சென்று அவற்றை ஒப்படைப்பதுடன் சர்வதேச நிகழ்வுகளின் முக்கிய விடயங்களைக் கலந்து பேசி மேலும் செய்ய வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வேன். மிகுந்த பொறுப்புணர்வுடன் தோழமை உணர்வுடன் நாம் மறுக்க இயலாத பண்புடன் 'வேலை வாங்குவதில்' தோழர் மணியத்தின் வேலைமுறை தனித்தன்மை கொண்டதாகும்.

வடபகுதியில் தமிழரசுக் கட்சியினரும் அதற்கு முன்பு தமிழ்க் காங்கிரஸ் காரர்கள் கம்யூனிச எதிர்ப்பில் முன்னணி வகித்து வந்தனர். அதிலும் சீன எதிர்ப்பு அவர்களது பிரதான பணியாகியது. அவர்களது சீன எதிர்ப்பின் அம்சங்கள் பல தடவைகள் வெளிப்படையாக இருந்து வந்ததைக் காணலாம். அக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி இச் சீன எதிர்ப்புக்கு முகம் கொடுத்து நின்றது. அதன் ஒரு அம்சமாக இலங்கை சீன நட்புறவுச் சங்கத்தை வடபகுதியில் ஆரம்பித்து அதனை பரந்த வெகுஜன அமைப்பாகவும் சோஷலிசத்தின் நடைமுறைகளை எடுத்துக் கூறுவதாகவும் நிலை நிறுத்துவதில் தோழர் மணியத்தின் பணி கனதியானதாகும். அவர் மூன்று தடவைகள் மக்கள் சீனத்திற்கு சென்றுவந்தவர். அதே வேளையில் சிறந்த சமூக அக்கறையாளரும் வாலிபர் காங்கிரசில் முக்கியமான வரும் சிறந்த கல்விமானுமாக விளங்கிய திரு.ஏ. எஸ். கனகபத்தினம் ஆசிரியர் சங்க தூதுக் குழுவின் சீனம் சென்று திரும்பியவர். சீனாவின் சோஷலிச வளர்ச்சி பற்றி பேசியும் எழுதியும் வந்தார். ஆதலால் சீன நட்புறவுச் சங்கத்திற்கு திரு. ஏ. எஸ் கனகரத்தினத்தை தலைவராக்கு வதில் மணியம் தோழர் கடும் பணியாற்றி அதனை நிலை நாட்டினார். அத்துடன் பல்வேறுபட்ட நிலைகளில் இருந்தவர் களை சீன நட்புறவுச் சங்கத்தில் இணைப்பதிலும் காத்திரமான பணிகளில் ஈடுபட வைத்ததிலும் தனது ஆளுமையைப் பயன்படுத்திக் கொண்டார். ஒரு கட்டத்தில் கொழும்பில் செயல்பட்ட சீன நட்புறவுச் சங்கத் தலைமை வடபிரதேச நட்புறவுச் சங்கத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டது. அங்கீகாரம் வெறும் எழுத்தில் அல்ல. சரியான செயற்பாட்டில் தான் தங்கியுள்ளது என்பதை சுட்டிக் காட்டி தொடர்ந்து அதனை இயங்கச் செய்ததன் மூலம் இறுதியில் தலைமையகம் வடபிரதேசக் கிளையை அங்கீகரித்தும் கொண்டது.

அவ்வாறே பேராசிரியர் க.கைலாசபதியுடன் தோழர் மணியத்திற்கு ஆரம்ப காலம் தொட்டு பிணைப்பு இருந்து வந்த போதிலும் 1974ம் ஆண்டின் பின்பு மிக நெருக்கமாக இருந்து பல்வேறு அரசியல் இலக்கியப் பணிகளை மேற்கொள்ள முடிந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அதில் குறிப்பிட்டகாலம் வெளிவந்த Red Banner ஆங்கில வெளியீட்டில் கைலாசின் கட்டுரைகளைக் காண முடிந்தமைக்கு மணியம் தோழரின் வேலை முறை ஒரு காரணம் எனலாம்.

மேலும் கட்சியின் நிலைப்பாட்டுடனும் போராட்டமார்க்கத்துடனும் முழுமையாக ஒத்துக் போகமுடியாது இருந்த ஒரு சில அறிஞர்களையும் கல்வியாளர்களையும் எவ்வாறு தோழர் மணியம் அணுகி வேலை செய்தார் என்பதற்கு சிறந்த உதாரணம் சிறந்த முற்போக்கு கல்விமானகிய ஏ.ஜே. கனகரத்தினாவுடனான நட்பாகும். அவரது நட்பைப் பேணிய அதே வேளை தனது நிலைப்பாட்டையும் விட்டுக் கொடுக்காது ஏ.ஜே.கே யின் திறமைகளின்மூலம் கட்சிக்குரிய பயன்களைப் பெற்றதாகும். தன்னுடன் மட்டும் அந்த நட்பு முடிந்து விடாது தொடர்ந்தும் கட்சித் தோழர்கள் சிலரை ஏ.ஜே.கே யுடன் தொடர்பு வைத்திருக்கும் படி கேட்டுக் கொண்டதையும் மறக்கமுடியாது.

மேலும் எண்பதுகளில் பேராசிரியர் சிவசேகரத்துடனான தொடர்புகளை வலுப்படுத்தி அவரது விசேச ஆற்றல்களை சமூகத்திற்கும் சமூக மாற்றத்திற்கான அரசியல் மார்க்கத்திற்கும் அறிமுகம் செய்து வைத்தார். அப் பணி தொடர தோழர் மணியம் நம்மிடையே விட்டுச் சென்ற ஆளுமை மிக்க வேலை முறை இவ் வேளை நினைவு கூரப் பட வேண்டியதாகும்.

# மனித நேயமிக்க மணியம் தோழர்

1964ல் கியூபாவில் அமெரிக்க தலையீடு. அதற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம். எனது மாணவப்பருவம். அன்று தான் முதன் முதலில் தோழர் மணியத்தைக் கண்டேன். கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபடாத காலம். சித்தாந்தப் போராட்டத்தின் உச்சக்கட்டம். பின்பு தலைவர் மாஓவின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட உலக அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களின் ஆதர்சமாக மக்கள் சீனம் எழுந்து நின்ற வேளை இலங்கையிலும் தோழர் சண்முகதாசன் தலைமையில் 'சீன சார்பு' கம்யூனிஸ்ட்டுகள் அணி திரண்டார்கள். யாழில் தோழர் மணியத்தின் தலைமையில் வாலிப இயக்கம் வளர்ச்சியடைந்தது.

'மணியம்' என்றால் மக்கள் கூட்டம் அங்கே வட்டமிடும். அப்படி ஒரு கவர்ச்சி! அவர் இளஞர்கள் மத்தியில் செல்வாக்கு பெற உணர்வுபூர்வமான செயல்பாடுகளை முன்னெடுத்துச் சென்றனர். வாலிபவர்களின் மாணவர்களின் பிரச்சினைகளில் கூடிய கரிசனை காட்டினார். அடக்கி ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஒன்றிணைந்து செயல்பட்டார். அவர்களின் பிரச்சினைகளின் சுகதுக்கங்களில் பங்குபற்றினார். அவரின் திருமணம் கூட ஒரு போராட்டம் என்றே சொல்லலாம். தான் விரும்பிய பெண்ணை தனது மேல்மட்ட சமூக சிந்தனைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கலப்பு திருமணமாக செயலில் காட்டி வாழ்ந்த வீரன். சொல்லும் செயலும் ஒன்று போல் வாழ்ந்தவர் தான் தலைவர். தூரதிருஷ்டி உள்ள சீரிய தலைமைக்கு மணியம் ஒரு எடுத்துக் காட்டு அவரின் தியாகம் எடுத்துக்காட்டானது. தனது கல்வி வேலைவாய்ப்பு வசதிகள் அனைத்தையும் துறந்து அரசியலுக்காக மக்களுக்காக முழுநேரமும் கட்சிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்த பெருந்தகை.

தோழர் சுப்பிரமணியம் என்றால் எதிரிகளுக்கும் சிம்ம சொப்பனம். அரசியலில் அவர் எடுக்கும் முடிவுகள் அவர் தலைமை தாங்கிய போராட்டங்களில் முன்னிலை வகுத்து நின்றே கருமமாற்றுவார். தடைகள் மீறிய 'சட்டவிரோத' மேதினத்தில் தோழர் மணியம் தலைமையில் வாலிபர்கள் பொலிஸ் அடக்குமுறையால் அடித்து துன்புறுத்தப்பட்டனர். ஆஸ்பத்திரியில் அட்மிட்டாகும் அளவு அவருக்கு பலத்த காயங்கள். தொழிலாளர் தினத்தில் இரத்தம் சிந்திய ஞாபக அலைகள் அன்று நடந்ததை இன்றும் மனக்கண்ணுக்குள் கொண்டு வந்தது. எந்த இயக்கங்களிலும் குடும்பத்துடன் கலந்து கொள்ளும் உன்னதமான உறவுகளை குழந்தைகளுக்கு எற்படுத்திய முறைகள் இன்று அந்த செல்வங்கள் கூட அந்த வழியிலேயே சிந்திக்கின்றதற்கு தலைமைத்துவம் வழிக்காட்டி நிற்கின்றது.

**- எஸ். ரபீக் -**

என்னைப் பொறுத்தவரை எவரும் எதையும் லேசாக் பேசிவிடலாம் செயலில் செய்வதுதான் கடினம். அந்த சொல்லும் செயலும் கொள்கை பாடுள்ள தலைவனை நான் வாழ்ந்த காலத்தில் தோழர் மணியத்திடம் தான் கண்டேன். தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களின் அவர் தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஒன்றிணைந்து போராடிய தலைவராக மதிக்கப்பட்டவர். மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்து சீரழித்த போது மாணவர்களுக்காக அரசியல் கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து போராடினார். பேரினவாத சிந்தனைகளுக்கு எதிரான போராட்டங்களிலும் தேசிய சர்வதேச போராட்டங்களிலும் ஆதரவு தந்து உறுதுணையாயிருந்தவர். பாலஸ்தீன அரபு மக்களுக்கு ஆதரவான ஆர்ப் பாட்ட ஊர்வலங்களையும் கூட்டங்களையும் முன்னின்று நடத்தினார்.

முஸ்லிம் வட்டாரத்தில் அவருக்கு தனி அபிமானமும் செல்வாக்கும் இருந்தது.அவின் ஊருக்கு போகும் வழி பஸ் எமது பகுதி ஊடாக செல்வதால் அடிக்கடி இறங்கி (ஐந்து சந்தி) தோழர்களது சுகதுக்கங்களில் பங்களிப்பு செய்வது வழக்கம். கிளைக் கூட்டங்களில் அரசியல் வகுப்புகளிலும் கலந்து கொள்வார். அவரின் புரட்சிகரமான சிந்தனைகளும் முன்வைத்த காலை பின்வைக்காத அரசியல் முடிவுகளும் அவருக்கு இருந்த தனி சிறப்பாகும்.

60 களில் 70களின் முற்பகுதியில் அவரின் தொடர்பு எனக்கிருந்தது. பின்பு கொழும்பு வாழ்க்கையில் குடும்பம் அமைத்தல் தொடர்பு விடுப்பட்டிருந்தாலும் ஒரு நாள் பல வருடங்களுக்கு பின் கொழும்பில் அவரை கோட்டடியில் கண்டேன். அதுதான் நான் அவரை கண்ட கடைசி நாள். என்னுடன் சில நிமிட நேரம் பேசினார். அவரின் பேச்சை விட அவரின் புன்னகை எத்தனையோ கதை சொல்லும். மாமனிதர் என்று சொல்லிவிடுவார்கள் அதிகம் பேசமாட்டார். ஒரு புன்னகையால் உலகையே வென்று விடுவார். மண்ணின் மைந்தனாக வாழ்ந்த மணியம் என் வாழ்வில் மறக்க முடியாதவர்.

முஸ்லிம் வட்டாரத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டத்திற்கு அளித்த ஆதரவு நிதி நன்கொடைகள் வேலைநிறுத்த போராட்டங்களில் தொழிலாளருக்கு வழங்கிய நிதி உதவி ஆகிய வற்றுக்கும் அவரின் தலைமையில் இயங்கிய வாலிபர் சங்க நடவடிக்கைகள் வழிகாட்டின. வாலிபர்களின் உணர்வுகளை விளங்கி அதற்காக முஸ்லிம் வாலிபர் மத்தியில் புரட்சிகர சிந்தனைகளை வளர்க்க தோழர் கீரன் போன்றவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்து செயல்பட்டார்.

71ல் ஏற்பட்ட உள் நாட்டு கலவரங்களில் முஸ்லிம் வாலிபர்கள் அடக்குமுறை ராணுவத்தால் தேடப்பட்ட வேளையில் அவர்களையும் பாதுகாத்து அயல் கிராமங்களில் தமிழ் மக்கள் வீடுகளில் அடைக்கலம் கொடுத்து ஆதரித்தார். இப்படியான புரட்சிகர சிந்தனை மனிதநேயம் சர்வதேச உணர்வுகளை 'மணியம்' என்ற பெயரில் மணி ஓசையாக இன்றும் மக்கள் மத்தியில் ஒலித்து நிற்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI புதிய பூமி

S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## கைதுகளும் காரணங்களும்

கொழும்பில் நிதமும் தமிழர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து விரக்தியடைந்த நிலைமையில் சில தமிழ் எம்.பி.க்கள். இருக்கின்றனர். கொழும்பில் அடையாள அட்டைகளை காண்பித்தபோது பொலிஸ் பதிவுகளை காட்டவில்லை என்பதால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதனை ஆட்சேபித்து தமிழ் எம்.பி ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக டி.ஐ.ஜீ கொட்டதெனிய கூறியிருக்கிறார்.

அந்த குறிப்பிட்ட தமிழ் எம்.பி. பொலிசாரை பிழையாக வழிநடத்தி ஆறு புலிகளை விடுவித்ததனால் அவரை தடுத்துவைத்து பொலிசார் விசாரிப்பதாக சில சிங்கள பத்திரிகைகளிலும், ஒரு ஆங்கிலப் பத்திரிகையும் தலைச் செய்தி வெளியிட்டிருந்தது. அவர் இராணுவ அதிகாரி ஒருவருடன் வாக்குவாதப்பட்டதை பெரிதுபடுத்தி மேற்படி செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஒருவரின் அடையாளத்தை உறுதிப்படுத்த பொலிஸ் பதிவை கட்டாயப்படுத்தி கேட்கக்கூடாது என்று அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடியின் தலைமையில் இயங்கும் தொல்லை தவிர்ப்புக் குழு பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் பணித்திருந்தது. அந்த அடிப்படையிலேயே அந்த தமிழ் எம்.பி இராணுவ அதிகாரியுடன் பேசியுள்ளார். யார் என்ன சொன்னாலும் பொலிஸ் பதிவை கட்டாயமாகக் கேட்போம் என்று அந்த எம்.பியை அவமதிக்கும் வகையில் பேசியுள்ளார். அந்த எம்.பியும் தொல்லை தவிர்ப்பு கூட்டங்களில் கலந்து கொள்பவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அச்சம்பவத்திற்கு பிறகு அந்த எம்.பிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறியுள்ள குறிப்பிட்ட அந்த டி.ஐ.ஜீ அடையாள அட்டைகளை காண்பித்தாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்ய பொலிசாருக்கு இராணுவத்தினருக்கும் அதிகாரம் இருப்பதாக கூறியிருக்கிறார்.

டி.ஐ.ஜீயினது, இராணுவ அதிகாரியினது நிலைப்பாடு தொல்லை தவிர்ப்பு குழுவின் முடிவுக்கு எதிரானது மட்டுமின்றி உயர்நீதிமன்ற தீர்ப்புகளினூடாக ஸ்தாபிதமாயுள்ள நீதிக்கும் எதிரானதாகும். ஒருவரை சந்தேகம் என்று கூறி சும்மா கைதுசெய்ய முடியாது. நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய சாட்சியங்கள் இருக்க வேண்டும் என்பதே நிலைநிறுத்தப்பட்ட நீதியாக இருந்து வருகிறது.

அராஜக கைதுகளையும், துன்புறுத்தல்களையும் தடுக்கப்போவதாக நியமிக்கப்பட்ட தொல்லை தவிர்ப்புக் குழு பாதுகாப்பு படையினரின் ஏதேச்சதிகார நடவடிக்கைகள் முன்னால் செயலிழந்த, இயலாத குழுவாக இருக்கிறது. அவர்களுக்கு முன்னால் நிலைநிறுத்தப்பட்ட உயர் நீதிமன்ற நீதிகளும் செய்வதறியாது இருக்கின்றன.

''தமிழர்கள் யாவரும் பயங்கரவாதிகள்'' என்ற அடிப்படையில் தேடுதல்களும், கைதுகளும் நடைபெறும் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒத்தடம் கொடுக்க கூட இயலாத தொல்லை தவிர்ப்புக் குழு போன்ற பம்மாத்துக்களால் பிரயோசனம் இல்லை. இருப்புகளை நிலைநிறுத்திக் கொள்ள அறிக்கைவிடும் அரசியல்வாதிகளாலும் எதனையும் செய்ய முடியாது. தொடர்ந்து 22 வருடங்களாக சாதாரண சட்ட நடைமுறையே இல்லாத நிலையிலேயே இந்நாட்டின் சட்டங்கள், பொலிஸ், இராணுவப்படைகள், நீதிமன்றங்கள் என்பன கட்டியெழுப்பப்பட்டுள்ளன. தொடர்ச்சியான யுத்தம் காரணமாக அவர்களின் ஏதேச்சதிகார நடவடிக்கைகள் யாவும் இனவாத ரீதியாக தமிழ் மக்களை நோக்கி மையப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே ஏதேச்சதிகார கைதுகளை எதிர்த்து சட்டப் பிரமாணங்களுக்கு உட்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் போதுமானவை அல்ல. அவற்றுக்கு அப்பால் அடக்குமுறை சட்டங்களுக்கு, அவசரகால சட்டத்திற்கு எதிராக, இனரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆதாரமாகவுள்ள யுத்தத்திற்கும் எதிராக உறுதியாக தொடர்ச்சியான மக்கள் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

அதேவேளை மேற்படி கைதுகள் பற்றியும் தமிழ் எம்.பி.ஒருவர் ராணுவ அதிகாரியுடனும் பொலிசாருடனும் முரண்பட்டமை பற்றியும் சிங்கள ஆங்கில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் மிகவும் விஷமத்தனமானவையாகும். அவை வெறுமனே சம்பவத்தை செய்தியாக்கியிருந்தால் அதில் தவறில்லை. ஆனால் இனவாத அடிப்படையில் மக்களிடையே துவேஷத்தை ஏற்படுத்தக் கூடியதாக எழுதிக் கொண்டன. இது எரிகிற இனவாதத்திற்கு எண்ணெய் வார்க்கும் வேலையாகவே உள்ளது. இவ்வாறான பத்திரிகைகள் ஒரு புறத்தில் தமது பணப்பைகளை நிரப்பிக் கொள்கின்றன. மறுபுறத்தில் பேரினவாதத்தை நியாயப்படுத்தி ராணுவ ஒடுக்குமுறையை வலுப்படுத்த துணை போகின்றன. இத்தகைய போக்கு எத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இப்பத்திரிகைகள் உணர மறுக்கின்றன. ராணுவ ஒடுக்கு முறை முழு மக்களையும் நசுக்கும் போது இவர்கள் கூறுவதற்கு எதுவுமே இருக்க மாட்டாது என்பதை இவர்கள் எப்போது உணர்வார்கள்?

**- ஆசிரியர் குழு -**

# வறுமையை ஒழிக்கக் கூடியது முதலாளித்துவமா? சோஷலிசமா?

**வெகுஜனன்**

உலகம் புதிய நூற்றாண்டிற்குள் பிரவேசிக்கப் போகின்றது. இந்த நூற்றாண்டில் உலகின் பெரும் பாலான நாடுகள் அனுபவித்துக் கொண்ட பாரிய பிரச்சினையான வறுமையின் கொடுமையைத் தான் அடுத்த நூற்றாண்டிலும் இந் நாடுகள் எதிர் கொள்ளப் போகின்றன. வறுமையின் அளவுகள் பல மட்டங் களில் காணப்படுகின்றன. வறுமைக் கோட்டின் கீழ் அதன் மேல் என்பதாக புள்ளி விபரங்கள் திரட்டப்படுகின்றன. இன்றைய உலகில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை சுமார் நூறு கோடி பேராகும். இவர்களில் 80 கோடி பேர் மூன்றாம் உலக நாடுகளிலும் 20 கோடி பேர் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனா.

வறுமை என்பதன் அர்த்தம் தான் என்ன? மனிதர்களுக்கு வேலை இன்மையால், வேலை இருப்பினும் தமக்குத் தேவையான உணவைப் பெற முடியாது உள்ளனர். உணவின்மை, வேலையின்மை, உடையின்மை, இருப்பிடமின்மை, சுகாதாரமின்மை, கல்வியின்மை, அறிவின்மை, பண்பாட்டு வளர்ச்சியின்மை என ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாக வறுமைத் தொடர் காணப்படுகிறது. இவ் வறுமை பெருமளவிற்கு மூன்றாம் உலக நாடுகள் எனப்படும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் தான் இருந்து வருகின்றது. இன்றைய உலகை பொருளாதார வளர்ச்சி அடிப்படையில் வடக்குத் தெற்காகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. வடக்கு வளர்ச்சிபெற்ற கைத்தொழில் நாடுகளாகவும் தெற்கு வளர்ச்சி குன்றிய நாடுகளாகவும் குறித்துக் காட்டப்படுகிறது. வளர்ச்சி பெற்ற நாடுகளாக பதினேழு நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மிகுதியான நூற்றி எழுபது நாடுகள் வரை பின்தங்கிய நாடுகளாகவே இருந்து வருகின்றன. இவ்வாறான மூன்றாம் உலக நாடுகள் வரலாற்றில் என்றென்றைக்கும் வறுமையடைந்த நாடுகளாக இருந்ததில்லை. அவை அனைத்தும் தமக்குரிய சுய பொருளாதாரத்தைக் கொண்டவையாக இருந்தே வந்துள்ளன. நிலவுடமைக் கால சமூக அமைப்பில் வறுமை இருந்திருப்பினும் இன்றைய கால அளவுக்குப் பாரியதாக இருந்ததில்லை. கொலனி ஆதிக்கம் புகுந்து கொண்டதன் மூலமே ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் இயற்கை வளங்களும் மனித உழைப்பும் சூறையாடப் பட்டன. மேற்குலகில் இடம் பெற்ற விஞ்ஞான தொழில் நுட்ப கண்டு பிடிப்புகளும் வளர்ச்சிகளும் முதலாளித்துவ உற்பத்தி முறையைத் தோற்றுவித்து வளர்த்தெடுத்தது. இத்தகைய வளர்ச்சிதான் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக உலகம் பூராவும் வியாபித்தது. முதலாளித்துவ உற்பத்தி முறையும் அதன் விநியோகமும் சமூகத்தின் அனைத்து மக்களின் அடிப்படைத் தேவையை நோக்கியவை அல்ல. தனி நபர்களது மூலதனத்தைக் கொண்டு சுரண்டலை நடாத்தி லாபத்தைப் பெருக்கி மேலும் மேலும் தனிச்சொத்தைப் பெருக்கிக் கொள்வதாகும்.

விரல் விட்டு எண்ணக் கூடிய முதலாளிகளான கோடீஸ்வரர்களை லட்சாதிபதிகளை முதலாளித்துவ அமைப்பு முறை உருவாக்கி பாதுகாத்து முதன்மைப் படுத்து கிறது. அதே வேளை லட்சோப லட்சம் மக்கள் அடிப்படைத் தேவைகளைப் பெற்று வாழ முடியாது அவலப்படுவதையிட்டு அது என்றுமே அக்கறை கொண்டது கிடையாது. உதாரணத் திற்கு, அமெரிக்காவின் 400 மிகப் பெரும் கோடீஸ்வரர்களின் மொத்த சொத்தின் பெறுமதி ஒரு ட்ரில்லியன் (Trillion) ஆகும். ஒரு ட்ரில்லியன் என்பது பத்து லட்சத்தை மும்முறை தன் பெருக்கம் செய்யக் கிடைக்கும் எண்ணாகும். (1,000,000,000,000,000,000). அதே போன்று அமெரிக்க மைக்ரோ ஷெப்ட் கணனி நிறுவனத்தின் தலைவரான பீல்கேட்ஸ் என்பவரின் தனிப்பட்ட சொத்தின் பெறுமதி 85 பில்லியன் அ.டொலர்களாகும். இத்தொகை பிலிப்பீன்ஸ் நாட்டின் மொத்த வருடாந்த தேசிய உற்பத்தியை விட அதிகமானதாகும். அதேவேளை அமெரிக்காவின் வறுமையில் வாடுவோரின் தொகை சனத்தொகையில் 16.5 வீதமாகக் காணப்படுகின்றது. இது அமெரிக்காவில் காணப்படும் பிரத்தியேகமான நிலையாகும்.

**உணவு, உடை, இருப்பிடம், வேலை, கல்வி, சுகாதாரம், ஆகிய அடிப்படைத் தேவைகளை முதலாளித்துவத்தால் பெற்றுக் கொடுக்க முடியாது.**

ஆனால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் யப்பானும் சேர்ந்து வளர்ச்சி பெற்ற நாடுகள் என்னும் பெயரில் முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல் முறைமையை உலகின் மூன்றாம் உலக நாடுகள் மீது திணித்து அவற்றின் செல்வம் அனைத்தையும் பலநூறு வழிகளில் உறுஞ்சிச் செல்கிறார்கள். இத்தகைய செயல் முறைகளைக் காலத்திற்குக் காலம் தமக்குரிய வசதிமிக்க வழிகளில் நடைமுறைப் படுத்துகிறார்கள். அதன் இன்றைய வடிவமாகவே உலகமயமாதல் திட்டம் ஏகாதிபத்தியத்தால் முன்தள்ளப்பட்டு தாராளமயம்-தனியார் மயம் என்ற பெயர்களில் ஒவ்வொரு மூன்றாம் உலக நாடுகள் மீதும் திணிக்கப்பட்டு வருகிறது. தங்களது திட்டத்திற்கு அமைவாக உலக நாடுகள் ஒவ்வொன்றும் அடங்கி ஆலோசனை பெற்று செயல்பட நிர்பந்தம் செய்யப்படுகிறது. இதனை அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு முனைகள் மூலம் நடைமுறைப்படுத்துகின்றன. உலகின் என்றென்றும் நிலைத் திருக்கக் கூடிய கேள்விகள் எழுப்ப முடியாத அமைப்பாக முதலாளித்துவத்தை நிலை நிறுத்துவதற்கு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் முழு மூச்சுடன் செயல்பட்டு வருகின்றன.

ஆனால் நிலவுடமை சமூக அமைப்பும் அதன் பின் தோற்றம் பெற்ற முதலாளித்துவமும் வளர்த்து நிலைப்படுத்திய பெரும் தனிச் சொத்துடமையும் அதன் அடிப்படையிலான சுரண்டல் வழிமுறைகளும் தான் உலக வறுமையின் அடிப்படை. இவ் வறுமையை ஒழிக்கக் கூடிய ஆற்றல் மாற்று அமைப்பான சோஷலிச அமைப்புக்கு மட்டுமே உரியதொன்றாகும். தனிச் சொத்தடமையை அதன் அத்திவாரத்தில் இருந்து ஒழித்து அந்த உழைப்பை உற்பத்தியை விநியோகத்தை சமூகமயப்படுத்திக் கொள்ள சோஷலிசத்தினால் மட்டுமே இயலக் கூடியதாகும்.

வறுமையும் அதனோடு இணைந்த மனிதத் துன்பங்களும் பெரும் தனிச் சொத்துடமை என்னும் அத்திவாரத்தில் எழுப்பப்பட்ட முதலாளித்துவ அமைப்பின் விளைவானதாகும். பொருளாதார ரீதியில் சுரண்டி அரசியல் ரீதியில் அடக்கி கலாசார கருத்தியல்கள் மூலம் ஏமாற்றி முதலாளித்துவம் தன்னைப் பாதுகாத்து வருகின்றது. அத்தகைய முதலாளித்துவ அமைப்பை முழுமையாகப் புரிந்து கொண்டு அதனை உடைத்து நொருக்கித் தள்ளி விட்டு அந்த இடத்திலே தான் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியும். அதனைச் சாதிக்கக் கூடியவர்கள் முதலாளித்து வத்தின் கீழ் வறுமையால் ஏனைய துன்பங்கள், ஒடுக்கு முறைகளால் அவதியுறும் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களேயாவர்.

உலகின் சோஷலிச அமைப்பைப் பெற்ற நாடுகள் அனைத்தும் வறுமையை ஒழித்து சாதனை புரிந்த வரலாறு இந்த நூற்றாண்டின் வரலாறாகும். வறுமைக்குள் வீழ்த்தப்பட்ட மக்கள் மாக்சிசம் காட்டிய வழியினில் போராடி முதலாளித்துவத்தை முறியடித்து சோஷலிஷ அமைப்பைத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நிலை நாட்டினர். அதன் மூலம் முதலாளித்துவத்தின் கீழ் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்த வறுமை சோஷலிசத்தின் அமைப்பு முறையால் ஒழித்துக் கட்டப்பட்டது. உண்பதற்கு ஒவ்வொருவரும் உழைப்பில் ஈடுபடவேண்டும். அந்த உழைப்பானது சக்திக்கேற்ற உழைப்பும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் என்னும் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டது. உழைப்புச் செல்வம் பெருகியது. உபரி லாபம் யாவும் முழுச் சமூகத்திற்குமானது. அவை அனைத்தும் மக்களது நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் புதிய நிர்மாண வளர்ச்சிகளுக்கும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப் பட்டன. அதன் மொத்த விளைவு சோஷலிசம் வறுமையை ஒழித்து மனிதர்களை புதிய வாழ்வினுள் இட்டுச் செல்ல வழி ஏற்படுத்தியது. எனவே சோஷலிசம் தான் சகல வகையான வறுமைத் தொடர் துன்பங்களுக்குக் காரணமான முதலாளித்துவத்திற்கு உரிய மாற்றுச் சமூக அமைப்பாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மூன்றாவது மத்தியஸ்தம் யார்?

புதுக்குடியிருப்பில் விமானக்குண்டுத் தாக்குதலினால் தமிழ்மக்கள் கொல்லப்பட்டதையும், அம்பாறை கோணகலையில் சிங்கள மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டதையும் அடுத்து இலங்கையின் இனப்பிரச்சினையில் மூன்றாம் தரப்பின் தலையீடு அவசியம் என்ற கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆசிய பிராந்திய மனித உரிமை அமைப்பும், இலங்கையில் இருக்கும் சில மனித உரிமைகளுக்கான அரசசார்பற்ற இயக்கங்களும் மூன்றாம் தரப்பு தலையீடின்றி அரசாங்கத்தையும் புலிகளையும் இணங்கவைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று கூறியுள்ளன.

இக் கருத்துக்கள் வெளிவருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கொழும்பு வாழ் தமிழர்களின் பணிக்குழு என்ற அமைப்பு இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட வேண்டு மென ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் என்பனவற்றிடம் முறையிடும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்தீர்மானத்தை இலங்கையின் இடதுசாரி கட்சிகளில் ஒன்றான நவசமசமாஜக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான திருநாவுக்கரசு சமர்ப்பித்துள்ளார். பணிக் குழுவின் தலைவரான விஜயசிங்கம் மேற்கு நாடுகளுடன் நெருக்கமான தொடர்படையவர் ஆவார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேச வர்த்தக சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணியுமான லக்ஷ்மன் கதிர்காமர் மூன்றாம் தரப்பு தலையீடு பற்றி அவரது திருவாய் மலர்ந்தருளியதால் இப்பிரச்சினை மேலும் சூடு பிடித்துள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினையில் எந்தவொரு மூன்றாம் தரப்பும் தலையிடத்தேவையில்லை என்று கூறியது மட்டுமல்லாமல் ஐ.நா.சபையை மிகவும் அவமதிக்கும் விதத்திலும் கருத்துக்களை கூறியுள்ளார். ஐ.நா.சபையை அவமதிப்பதில் எமக்கு அக்கறை இல்லாவிட்டாலும் அவரின் கருத்துக்கள் இலங்கை அரசின் பேரினவாத நிலைப்பாட்டை பாதுகாக்கும் அடிப்படையை கொண்டவைகளாகும்.

வெளிவிவகார அமைச்சரின் மேற்படி கருத்துக்கு பதில் கூறுவதுபோல் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், மற்றும் மாஜி தமிழ் தீவிரவாத இயக்கங்களும், தத்தமது கருத்துக்களை கூறியுள்ளன. அவையாவும் ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன், வெளிநாட்டு மத்தியஸ்துவத்தை விரும்புவதாக விடுதலை புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

**கதிர்காமருக்கு அமெரிக்கா வேண்டும். தமிழ் கட்சிகளுக்கு இந்தியா தேவை.**

மூன்றாம் தரப்பின் தலையீடின்றி பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்கு தேவையெனின் அதனைப் பெறலாம் என்பது அரசாங்கம் கூறிவருகின்ற விடயமாகும். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அதே நிலைப்பாட்டிலேயே இருப்பதாக தெரிகிறது.

இலங்கையின் பத்திரிகைகளை பொறுத்தவரை மூன்றாம் தரப்பு தலையீடு தொடர்பாக அரசின் நிலைப்பாட்டையும், அதற்கு எதிரான தமிழ்த் தலைவர்களின் நிலைப்பாட்டையுமே எடுத்துக்காட்டுகின்றன. இந்த இரண்டு போக்கிற்கும் மாறான எத்தவொரு நிலைப்பாட்டையும் கவனிப்பதாக கூட தெரியவில்லை.

மூன்றாம் தரப்பு தலையீடு வேண்டும் என்போர் எத்தகைய தலையீடு அவசியம் என்பதுபற்றியோ எந்தெந்த தரப்பு தலையிட வேண்டும் என்றோ திட்டவட்டமாக எதையும் கூறுவதாக இல்லை. அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நிலைப்பாடு யாதெனில் ஐ.நா.தலையிடக்கூடாது பேச்சுவார்த்தைக்கு உதவியளிப்பதற்கு யாராவது ஒரு தரப்பின் உதவி தேவைப்படின் பெறப்படலாம் என்று கூறுவது மட்டுமின்றி அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா, நேட்டோ ஆகியவற்றின் ஒத்துழைப்பு பெறப்படலாம் என்றும் கூறுவதாக இருக்கிறது.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் நாடப்படுமாயின் அது மூன்றாம் தரப்பு தலையீட்டை கொண்டு வராமல் பார்த்துக்கொள்ள முடியுமா என்று கேள்வி எழுப்பி இராணுவ தலையீடு விடுதலை போராட்டங்களுக்கு ஆதரவாக ஒரு போதும் இருந்ததில்லை, என்று புதிய ஜனநாயக கட்சி வெளியிட்டிருந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயுத முரண்பாடுகளை அல்லது இனப்பிரச்சினையை தீர்ப்பதாக கூறிக்கொண்டு தலையீடுகளை செய்யும் சக்திகள் அவற்றின் ஏகாதிபத்திய, மேலாதிக்க உள்நோக்கங்களையும். அக்கறைகளையும் கைவிட்ட நிலையில் தலையீடுகளை செய்ததில்லை, செய்யப்போவதும் இல்லை என்று புதிய இடதுசாரி முன்னணி வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

ஐ.நாடுகள் சபையின் கருத்துக்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்தை வலியுறுத்துவதாகவே இருக்கிறது. ஐ.நா.வின் தலையீட்டினை கோரும் தமிழ் தலைவர்கள் ஐ.நா.சபை உண்மையாக எவ்வாறான சக்திகளுக்கு அனுசரணையாக நடந்துகொள்கிறது என்பது பற்றி தெளிவில்லாமல் இருக்கிறார்கள் என்று கூறமுடியாது. "ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய அமெரிக்காவிற் கானதேயன்றி எமக்கானதல்ல" என்று இந்திய உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரும், அனைத்து இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவருமான கிருஷ்ண ஐயர் அடிக்கடி கூறுவது ஞாபகப் படுத்தப்பட வேண்டியதாகும். (UN is not for us But for U.S) மேலும் இந்தியாவின் தலையீட்டை கேட்டு இறுதியில் இந்திய இராணுவத் தலையீட்டால் தமிழ்மக்கள் அடைந்த வேதனைகளை மீட்டுப்பார்த்தும், அத்தலையீட்டிற்கு பின்னால் தமிழ்மக்கள் போராட்டத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகள் பற்றி மதிப்பிடுவதும் இன்றியமையாததாகும்.

இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய தீவிர பேரினவாத சக்திகளினதும் வக்கிரமான போக்கு வெளிநாட்டுத் தலையீட்டை நோக்கி நிலைமையை தள்ளுவதாக அமைகிறது. அவை மட்டுமன்றி ஏகாதிபத்திய சூழ்ச்சிகளும் வெளிநாட்டு தலையீட்டினை நிர்ணயிப்பதில் பிரதான இடத்தை வகிக்கின்றன. பாலஸ்தீனம் தொட்டு கிழக்கு திமோர் வரை பேரினவாதிகளுக்கு பாடம் புகட்டுவதுபோல் தலையீடுகள் அமைவதாக மேலோட்டமாக கூறினாலும் அங்கெல்லாம் விடுதலை போராட்ட நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைகள் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. காஷ்மீர் பிரச்சினையை இந்தியா ஐ.நா.சபைக்கு கொண்டு சென்றதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் அறிவோம். நடுநிலையான நாடுகள் என்று கூறுவதற்கு மேற்குலகில் எதனையும் அடையாளம் காட்ட முடியாது. ஆதலால் யார் தலையிட்டாலும் அதற்கு பின்னால் 'உள்நோக்கங்கள் இல்லாமல் இருக்க முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச மட்டத்திலான பிரசாரத்துக்கும் ஒத்துழைப்பிற்கும் தந்திரோபாய ரீதியாக 'மூன்றாம் தரப்பு தலையீட்டை' கோருவதில் தவறிருக்க முடியாது. அடிபணியாத பேரினவாத அரசாங்கத்திற்கு அழுத்தங்களையும் கொடுக்க 'மூன்றாம் தரப்பு தலையீடு' என்ற கோரிக்கை உதவியிருக்கலாம்.

அதேவேளை இன்றைய உலக ஒழுங்கு அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களை சுற்றியும், ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களை சுற்றியும். குவிந்ததாகவே காணப்படுகிறது. எனவே எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே போராட்ட தந்திரோபாயங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் மூன்றாவது மத்தியஸ்த்தின் மூலம் ஏற்படக் கூடிய அபாயங்களை உணர்ந்து கொள்ள மறுக்கின்றன. வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் கூறுவது போன்று மூன்றாவது மத்தியஸ்தம் தேவையில்லை எனக் கூறும் ஒற்றைப் பதிலின் மூலம் தலையீட்டு அபாயத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைத்து புலிகளுடன் பேசுவதன் மூலமே அதனைத் தடுக் முடியும். ●

# அனுராதபுரம்

## 'புனித நகரத்திலிருந்து கிடைத்த புதினங்கள்'

எங்களுக்குத் தெரிந்தளவில் அனுராதபுரம் ஆன்மிகரீதியிலும், புராதனமானது என்பதிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆனால் இன்று அனுராதபுரம் வேறு கதை சொல்கின்றது.

அனுராதபுரத்தில் "புனிதமற்ற" நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் இளம் பெண்கள் பணத்திற்காக இளம் ஆண்களுக்கு பெரும்பாலும் இராணுவத்தினருக்கு – தமது "சேவையை" வழங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்புபோல் அல்லாமல் தற்போது இந்த நடவடிக்கைகள் சீராக்கப் பட்டுள்ளன. இளம் இராணுவத்தினருக்கு பெண்களை கொடுப்பது ஹோட்டல்களுக்கும், விடுதிகளுக்கு முரிய தொழிலாகிவிட்டது. ஆட்டோ சாரதிகள் இருதரப்பாருக்குமிடையே தொடர்புக்கு ஏற்பாடுசெய்கின்றனர். இவ்வாறான இடங்களை அவ்வப்போது அனுராதபுரப் பொலீசார் முற்றுகை இடுகின்றனர். அங்குமிங்கும் திரியும் பெண்களைப் பிடித்து றிமான்ட் சிறைக்குள் தள்ளுகின்றனர். நீதி மன்றத்தில் பின்பு அஜராக்கப்பட்டதும் அனேகமானோர் ரூபா 500 பிணையில் விடுதலை செய்யப்படுகின்றனர். ஹோட்டல் உரிமையாளர்களே இந்தப் பிணைப் பணத்தைச் செலுத்தி அந்தப் பெண்களை விடுவிக்கின்றனர்.

சென்ற வருடம் 219 பெண்கள் பிடிபட்டனர். அதற்கு முன்னைய ஆண்டில் 198பேர் கைதுசெய்யப் பட்டனர். இந்த வருடம் மே மாதம் 31ம் திகதிவரை 106 பெண்கள் கைது செய்யப்பட்டதாக அனுராதபுரம் குற்றத்தடுப்பு பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்தப் பெண்கள் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. பெரும்பாலானோர் குளியாப்பிட்டி, குருநாகல், புத்தளம், சிலாபத்தைச் சேர்ந்தவர்கள், சிலர் யுத்தித்தில் இறந்த இராணுவம் பொலீசாரினதும் விதவைகள்.

"இந்த அவலம் கடந்த 5–6 வருடங்களாக உள்ளது. பெண்களைக் கைது செய்து உள்ளே தள்ளுவதால் பிரச்சினை தீராது" என்கிறார் பெண்பகுதி பொறுப்பதிகாரி.

அனுராதபுரம் ஹொட்டேல்களுக்கு இது ஒரு சிறந்த வருமானம் தரும் தொழில். ஒரு அறை ஒரு இரவுக்கு 400 அல்லது 500 க்கு கூலிக்கு விடப்படுகிறது. பெண்களை வாடகைக்கு அமர்த்தி தமது வாடிக்கையாளருக்கு கொடுக்கிறார்கள்.

பலவருடங்களாக அனுராதபுரம் "காம்ப் நகரமாக" இருக்கிறது. வடக்கிற்கும் வடக்கிலிருந்து தெற்கிற்கும் வரும் இராணுவத்தினருக்கு இடைத் தங்குமிடமாக விளங்குகிறது. யுத்த முனைக்கு அடுத்த விமானம் கிடைக்கும் வரை இங்குள்ளவர்கள் நகரத்தைச் சுற்றித்திரிவர் அப்போது அவர்கள் இந்தப் பெண்களைச் சந்திக்கின்றனர்.

மாதம் முழுதும் சம்பாதித்த தொகையைச் சிலர் இந்தத் தொழிலில் கொடுத்து விடுகின்றனர். சில பெண்கள் 20 இலிருந்து 30 ஆயிரம்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# குமார் அண்ணன் பதில் கூற வேண்டும்

பெயர்போன சட்டத்தரணியான ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மகன் சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் அண்மைக்கால துணிவுகள் பற்றி தமிழ்ப்பத்திரிகைகளில் வாசித்து புல்லரித்துப் போனேன். சிங்களப் பேரினவாதத்திற்கும் அரசாங்கத்திற்கும் எதிராக என்னமாய் பேசியிருக்கிறார். யாழ்ப்பாணத்துக்கு செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை இல்லை என்று சவால்விட்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் தொடுத்திருக்கிறார். அதிபாதுகாப்பு வலயமாக கொள்ளப்படுகின்ற புள்ளர்ஸ் வீதியில் இருக்கும் வீதித்தடைகளையோ வீதித்தடைகளில் இருந்த இராணுவ வீரர்களையோ சட்டை செய்யாது அடிக்கடி அவரது பென்ஸ் கார்களில் சென்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் நடைபெற்ற பென்ஸ் கார் கண்காட்சியில் வெற்றிகரமாக கலந்து கொண்டதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

தீவிரவாத சிங்கள இனவாதிகளுக்கோ, அரசாங்கத்திற்கோ, பாதுகாப்பு படையினருக்கோ பயமில்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை ஏற்பதாகப் பகிரங்கமாகவே கூறிவருகிறார்.

இப்படிப்பட்ட குமார் அண்ணன் பற்றி ஒக்டோபர் 3ஆம் திகதி சண்டே டைம்ஸ் பத்திரிகையில் தற்போது கனடாவில் வாழும் டி.பி.எஸ்.ஜெயராஜ் என்ற பத்திரிகையாளர் எழுதியிருந்த விடயங்களைப் பார்த்து அதிர்ந்துபோனேன். அதில் சில விடயங்களை கீழே எழுதுவதுடன் தமிழ் வாசகர்களுக்கு புரியும்படி குமார் அண்ணன் பதில்களை சொல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

1. குமார் பொன்னம்பலம் நீலன் கொலை செய்யப்பட்டதை நியாயப்படுத்துகிறாரா? இப்போது அவரின் அரசியல் நிலைப்பாடு என்ன? புலிகள் பற்றி அவரின் நிலைப்பாடு என்ன?

2. தமிழீழத்தை குமார் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவரின் கட்சியின் பெயர் இன்னும் ஏன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்றிருக்கிறது. அவர் ஆயுதப்போராட்டத்தை நியாயப்படுத்துவாராயின் அவரின் பிள்ளைகளில் யாராவது புலிகள் இயக்கத்தில் சேர்ந்துள்ளனரா?

3. வாயாட்டம் கொண்ட தமிழ் அரசியல்வாதி ஒருவரின் மகளுக்கும் மகனுக்கும் மேற்கில் உயர்கல்வி கற்க நீலனும், ஜீ.எல்பீரிசும் எவ்வாறு உதவினார்கள்?

4. இலங்கை பல்கலைக்கழகங்களில் தமிழர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கூறி வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதிகேட்டு விண்ணப்பித்திருந்த அரசியல்வாதி பற்றி பேச வேண்டாமா?

5. சில்லரைக் காரணங்களுக்கெல்லாம் கொழும்பில் கைதுசெய்யப்படுகின்ற போது புலிகளுடன் தொடர்புள்ளதாக கூறிக்கொள்ளும் குமார்பொன்னம்பலம் என்ற தமிழர் மட்டும் கைதுசெய்யப்படாமல் இருப்பதன் மர்மம் என்ன?

6. தன்னை பகிரங்க அரசியல்வாதி என்று கூறிக்கொள்ளும் குமார் அவரின் சொத்து விபரங்களை வெளியிடுவாரா? அவை யாரது பெயரில் இருக்கின்றன என்பதை கூறுவாரா?

7. அடையாள அட்டையை எடுத்துச்செல்லாமல் திரியும் தமிழ் அரசியல்வாதியென்று புகழப்படும் ஒருவர் வீதி சோதனை இடங்களில் மறிக்கப்பட்டவுடன் அவரது மனைவிக்கு தொலை பேசியில் அறிவித்து இராணுவ கொமான்டருடன் கதைக்க சொல்வது பற்றியும், கதைத்த பின்னர் அந்த இராணுவ கொமான்டர் அந்த அரசியல்வாதியை விடுவிக்கும்படி கூறுவதை பற்றியும் கதைக்கக் கூடாதா?

கே. கனகரட்னம் - கொழும்பு 06.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தை இலக்கு வைக்கும் சிங்கள வீர விதான

சிங்கள வீரவிதான இயக்கம் பற்றி சிறுபான்மை தலைவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். மலையகத்தில் நுவரெலியா நகரில் கடந்த மே தின கூட்டத்தை இ.தொ.கா நடத்திய போது வீரவிதான இயக்கம் அதனுடைய இனவாத நடவடிக்கைகளை வெளிப்படையாக்கியது, பிறகு கொழும்பிலுள்ள இ.தொ.கா தலைமை காரியாலயத்தில் பறக்க விடப்பட்டிருந்த இ.தொ.கா கொடியை இறக்கி கிழித்தது. கண்டியிலிருந்து தமிழர்களை வெளியேறும்படி துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்துள்ளது. ஏனைய மலையக நகரங்களில் தமிழ்க் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாம் என்று துண்டு பிரசுரங்களை விநியோகித்துள்ளது.

மலையகத்தில் பல தமிழ் இளைஞர்கள் புலிகள் என்ற பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதற்கும் துன்புறுத்தப் படுவதற்கும் வீரவிதான இயக்கத்தினர் திரை மறைவில் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தற்போது அவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் ஊவா மாகாணத்தில் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பௌர்ணமி தினங்களில் வீடுகளுக்குள்ளே மாமிசம் உண்ட, மதுபானம் அருந்திய பௌத்தர்கள் அல்லாதவர்கள் சில இடங்களில் தாக்கப்பட்டுள்ளனர். தாக்கியவர்கள் பொலிஸ் நிலையங்களில் செல்வாக்குடையவர்களாக இருந்திருக்கின்றனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் இனவாதத்திற்கு எதிராக அட்டனில் நடத்தப்பட்ட பிக்கட்டிங்கில் கலந்து கொண்ட புதிய இடதுசாரி முன்னணியின் நடவடிக்கையாளர்களில் சிலருக்கு சிங்கள வீரவிதான இயக்கத்தினர். அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக அறியமுடிகிறது.

சமாதானத்திற்கான கலைஞர்கள் நுவரெலியாவில் நடத்திய நிகழ்ச்சியின் போது சிங்கள வீரவிதான இயக்கத்தினர் இடையூறு செய்துள்ளனர்.

இவ்வாறு பொதுவாகவே மலையகத்தில் மேற்படி இயக்கத்தினர் தீவிரமாக செயற்பட்டுவருகின்றனர். நுவரெலியா பொலிஸ் அதிகாரி ஒருவரின் இடமாற்றத்தை அடுத்து அவ்வியக்கத்தினர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர். மலையகத்தில் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதாக அம்மனுவில் குறிப்பிட்டுள்ளனர். மலையகத் தமிழ்மக்களின் நடவடிக்கைகளினால் தான் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதாக தேசியரீதியாக பிரசாரத்தை சிங்கள வீரவிதான முன்னெடுத்து வருகிறது.

சிங்கள வீரவிதான இயக்கமும் பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியும் வெவ்வேறு இயக்கங்கள் என்று காட்டப்பட்ட போதும் ஒரே கருத்தியலை கொண்டு ஒன்றுக்கொன்று அன்யோன்னியமாக இயங்குகின்றன. ஒரு வருடத்துக்கு முன்பு அமைச்சர் தொண்டமானின் வீட்டு மதிலில் அவரை நிந்தித்து போஸ்டர் ஒட்டியதும் மேற்படி இயக்கங்களே ஆகும்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர்களையும், முஸ்லீம்களையும் வெளியேறும்படி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்திருந்தனர்.

அரசாங்கம் சமர்பித்திருந்த ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத தீர்வு பொதியை நாட்டைப் பிரிக்கும் திட்டமென சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்துவருகிறது. அரசாங்கம் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்த சமவாய்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக ஆனந்தா, நாலந்தா போன்ற பௌத்த பாடசாலை மாணவர்களும், ஆர்ப்பாட்டம் செய்ததற்கும் பெற்றோர்கள் ஊர்வலம் சென்றதற்கும் பின்னணியில் சிங்கள வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி ஆகியவை இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

இலங்கையின் பல்லினத்தேசியத்தை எதிர்த்து சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக சிங்கள வீரவிதான இயக்கம் பிரசாரம் செய்து வருகிறது. இதனால் ஊசலாடிக் கொண்டிருந்த இனவாத சக்திகள் அப்பிரசாரங்களுக்கு பின்னால் எடுபடக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் விசமப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி இரண்டு இயக்கங்களினதும் நடவடிக்கைகள் திட்டமிட்டப்படி மிகவும் சிராக முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றின் நடவடிக்கைகளால் உடனடியாக தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் மக்களுக்கு பாதிப்பாக இருந்தாலும் அந்த நடவடிக்கைகள் நீண்ட காலத்தில் இந்நாட்டின் இனஒற்றுமையை முற்றாக சீரழிக்கும் அடிப்படையையே கொண்டிருப்பதால் சிங்கள மக்களுக்கும் பாரியளவில் பாதிப்புகள் ஏற்படலாம்.

இவ்வாறான பேரினவாத இயக்கங்களின் வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாட்டிற்கான மக்கள் தளமாகவே கொள்ளப்பட வேண்டும் அதனால் அரசாங்கத்தில் அவ்வியக்கங்களும் ஒன்றொன்றுக்கு உதவும்வகையில் அவற்றின் நடவடிக்கைகள் அமைந்து விடுவதை பார்க்க முடியும்.

எனவே இனவாதத்திற்கு எதிரானவை என்ற ரீதியில் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கின்ற முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஐக்கியப்பட்டு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது வரலாற்று கடமையாகிறது.

குறிப்பாக மலையகத்தில் வீரவிதான பரப்பி வரும் · விஷக் கருத்துக்களுக்கு எதிரான சரியான கருத்துக்கள் பரப்பப்பட வேண்டும். தத்தமது சொந்த அரசியல் லாபங்களுக்காக குறுந்தேசியவாத நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவாதமற்ற நேர்மையான சக்திகள் அடையாளம் கண்டு அவர்களுடன் நேச உறவுபூண்டு ஒரே அணியாக நின்று பேரினவாதத்தை எதிர்த்தால் வீரவிதான இயக்கத்தால் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நகர முடியாத நிலை தோன்றும். அந்த நிலையைத் தோற்றுவிப்பதே இன்றைய தேவை.

# சிலரின் பிறழ்வும் பலரின் முன்னுதாரணமும்

மலையக மக்கள் கவிஞர் இராகலை பன்னீரின் புதிய தலைமுறை கவிதை நூல் அறிமுக விழா கடந்த 3ம் திகதி கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் கவிதா நிகழ்வில்.

'சித்தா தோட்டத்து செல்லம்மாவின் அடிப்படி மட்டும் எங்கள் அரசியல் செல்லும்' என்ற வரிகள் பாடப்பட்ட போது எனக்கு அருகில் இருந்த அன்பர் ஒருவர் இப்படித்தான் சமதர்மம் பேசுவார்கள், ஒரு பதவி கிடைத்தவுடன் எல்லாம் பறந்து போய்விடும் என்றார்.

பதவி கிடைத்தவுடன் சிலர் அந்த அன்பர் கூறியதுபோன்று அவர்களது சமதர்மத்தை பறக்க விட்டுவிட்டனர். விக்கிரமபாகுவை நான் சமதர்ம வாதியென்று ஏற்றுக்கொள்ளா விட்டாலும் அவருக்கு பதவி கிடைத்தவுடன் அவர் அணியும் சிவப்பு சட்டைக்கு கூட நேர்மையாக நடக்காதது போன்று சிலர் நடந்து கொள்ளலாம். நான் எந்தவொரு சமதர்ம நாட்டிற்கும் விஜயம் செய்ததில்லை. ஆனால் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நடக்கும் சில மாநிலங்களில் எனக்கு கிடைத்த அனுபவங்களை மீட்டிப் பார்த்தேன்.

பொதுவாக தமிழ் நாட்டில் முச்சக்கரவண்டியை (ஓட்டோ) வாடகைக்கு அமர்த்த கதைக்கும் போது மீட்டருக்கு மேல் ரூபாய் ஏழு போட்டுக் கொடுக்கும்படி முச்சக்கர ஓட்டுனர்கள் கேட்பது வழக்கம். அதாவது நாம் பயணம் செய்து முடித்ததும் மீட்டர் எவ்வளவு காட்டுகிறதோ அத்தொகையை விடவும் நாம் ஏழு ரூபாயை மேலதிகமாக கொடுக்க வேண்டும்.

நான் கேரளாவிற்கு சென்றிருந்த போது வங்கி ஒன்றுக்கு செல்ல வேண்டியிருந்தது. எனக்கு அவ்வங்கி இருக்கும் இடம் தெரியாததால் முக்சக்கர ஓட்டுனரிடம் நான் போக வேண்டிய வங்கி குறிப்பிட்ட எவ்வளவு கட்டணம் என்று கேட்டேன். அவர் அவ்வங்கி இருக்கும் இடத்தை சுட்டிக்காட்டி நீங்கள் நடந்தே போகலாம். ஒட்டோவில் செல்வதனால் ரூபாய் ஐந்து தரவேண்டும் என்றார். அவருடைய ஒட்டோவிலேயே அவ் வங்கிக்கு சென்றேன். அங்கிருந்து திரும்பி வரும்போது இன்னொரு முக்சக்கர வண்டிகாரரிடம் கேட்க அவரும் முன்னவரைப் போன்றே வரவேண்டிய இடத்தை சுட்டிக் காட்டி நீங்கள் நடந்தே போகலாம் ஒட்டோவில் செல்வதானால் ரூபாய் ஐந்து தரவேண்டும் என்றார்.

ஒரு முக்சக்கரவண்டி பிரயாண விவகாரத்திலேயே அருகருகே இருக்கும் மாநிலங்களிடையே நிலவிய வித்தியாசத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. அதைப் பற்றி சிந்தித்த வேளையில் 1998 மார்ச் மாதம் காலஞ்சென்ற இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் நம்பூதிரிபாத் அவர்கள் எனது நினைவு பொறியில் தட்டுப்பட்டார். அவர் கேரளா என்ற மாநிலத்தை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த ஒருவர் கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர். மானுட மேம்பாட்டிற்காக உழைத்து அதற்கான பண்பாட்டை கட்டி வளர்ப்பதில் ஒரளவாவது வெற்றி பெற்றார். கேரளாவில் கம்யூனிஸ்ட்டுகளும் அவர்களின் மாநில ஆட்சியாளர்களும் பொதுவான தனி மனித பண்பாட்டு அம்சங்களையும் முடிந்தளவிற்கு வளர்த்துள்ளனர். பதவிகள் வந்த போதும் நம்பூதிரிபாத் போன்றோர் எப்படி வாழந்திருக்கிறார் என்பதும் பிறரை எப்படி வாழத் தூண்டியிருக்கிறார் என்பதும் எனக்கு விளங்கியது.

அது போலவே திருவனந்தபுரம் எட்டனூர், குருவாயூர், போன்ற இடங்களிலுள்ள கோவில்களிலும் ஒரேமாதிரியான ஒழுக்கமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கோயிலுக்கு வெளியில் பாதணிகளை கழற்றி விட்டு உள்ளே சென்று வழிபாடுகளை முடித்துக்கொண்டு வெளியே வந்து பாதணிகளை பொறுப்பெடுக்கும்வரை அவை பொறுப்பாக பாதுகாக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றன. அதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. கோயில் பூஜைகளிலும், வழிபாடுகளிலும் ஏற்றத்தாழ்வுகளை என்னால் காண முடியவில்லை. ஆனால் தமிழ்நாட்டுக் கோயில்கள் பணம் கறக்கும் மையங்களாக இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

கேரளாவில் ஒரு புத்தகம் வெளியிடப் படுகிறது சில வணிக திரைப் படங்களில் ஆபாசம் மிகுதியாக இருந்தபோதும் பண்பாட்டு ரீதியான வளர்ச்சியை எடுத்துக்காட்டும் திரைப்படங்கள் அதிகம் வெளி வருகின்றன. மக்கள் மிகுந்த அக்கறையோடு அவற்றைப் பார்த்து ரசிக்கின்றனர்.

சில விதிவிலக்குகள் இருந்தபோதும் மேற்கு வங்காளத்தில் பண்பாட்டு வளர்ச்சியை ஒப்பீட்டு ரீதியில் மெச்சத்தான் வேண்டும். அங்குள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் மக்களுக்கு முடிந்தளவுக்கு முன்மாதிரியாக நடந்துக்கொள்கிறார்கள்.

இவ்வாறான அனுபவங்களிலிருந்து சமதர்ம கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களிடம் பின்பற்றிக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது சில விமர்சனங்கள் இருந்தபோதும் பொதுவுடமை கட்சிகளின் கட்டுப் பாட்டில் இருக்கும் கேரளா மேற்கு வங்காளம் திரிபுரா என்பவற்றில் வரவேற்கத்தக்க வளர்ச்சிகள் இருக்கின்றன. இந்தியாவின் ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடும் போது இது தெளிவாகிறது.

எனவே சமதர்மத்தை, பொதுவுடமையை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் என்று கூறப்படும் சிலர் பிறழ்வாக நடப்பதால் அக்கொள்கைகளும் பிழையல்ல. அவற்றை ஏற்றுக்கொண்ட எல்லோரும் பிறழ்வாக நடப்பார்கள் என்றுமில்லை.

**தி. கருப்பையா**
கொட்டாஞ்சேனை

# பதுளை பாடசாலை விவகாரத்தில்
## சமயச் சார்பின்மையை கடைப்பிடிக்க முடியாததேன்?

'பர்தா' பிரச்சினையினால் பதுளை மாவட்ட தமிழ்மொழிமூலம் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி கடந்த சில மாதங்களாக பாழடிக்கப் பட்டுள்ளது. பதுளை தமிழ் மகளிர் பாடசாலைக்கு புதிதாக இடமாற்றலாகி வந்த இரண்டு முஸ்லிம் ஆசிரியைகள் 'பர்தா' என்ற முஸ்லிம் பெண்கள் தலையை மூடி அணியும் துணியை அணிந்து கொண்டு பாடசாலை வகுப்புகளுக்கு செல்வதற்கு அக்கல்லூரி அதிபர் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து முஸ்லிம் ஆசிரியைகளின் சமய உரிமை மறுக்கப்படுவதாக முஸ்லிம் மக்கள் மத்தியில் கருத்துக்கள் திட்டமிட்டு பரப்பப் பட்டன. அந்த அதிபர் தான் எதிர்ப்பு தெரிவித்ததற்கு நியாயம் இருப்ப தாகவும், ஏற்கனவே அப் பாடசாலையில் கற்பிக்கும் இரண்டு முஸ்லிம் ஆசிரியைகள் பர்தா அணிந்து கொண்டு வகுப்புகளுக்கு செல்வதில்லை என்றும் தெரிவித்துள்ளார். குறித்த பாடசாலையில் பெரும்பான்மையான மாணவிகள் இந்து மாணவிகளாகையால் பர்தா அணிவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பதும் அவரின் கருத்தாக இருந்தது. பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கும்போது அப்பாடசாலை ஒரு இந்து பாடசாலையாக்கப்பட வேண்டும் என்று பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி மாகாண, மத்திய கல்வியமைச்சுகளுக்கும் அறிவித்திருந்தது.

குறிப்பிட்ட அந்த ஆசிரியைகள் பர்தா அணிந்துகொண்டு பாடசாலை வகுப்புக்களுக்கு செல்லக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தவர்கள் அதிதீவிர இந்துத்துவ செல்வாக்கிற்குட்பட்டதனாலும் பர்தா அணிந்து கொண்டுதான் முஸ்லிம் ஆசிரியைகள் வகுப்பகளுக்கு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தவர்கள் அதிதீவிர முஸ்லிம் அடிப்படைவாத செல்வாக்கிற்குட்பட்டதனாலும் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடலாயிற்று அதேவேளை தீவிர சிங்கள பௌத நிலைப்பாட்டுடன் இருப்பவர்கள் மேற்படி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரண்டு பகுதியினரையும் தூண்டியிருக்கின்றனர் என்பதற்கு ஆதாரமாக சில தகவல்கள் இருக்கின்றன. சிங்கள வீரவிதான இயக்கம் போன்ற தமிழ் வீரவிதான இயக்கம் பதுளை பாடசாலை விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக எவ்வித அடிப்படையுமில்லாத அறிக்கையொன்றை முற்போக்கு போன்று காட்சியளிக்கின்ற முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிக்கை வெளியிட்டிருந்தது. அத்துடன் அமைச்சர் தொண்டமானுக்கு எதிரான சுலோகங்களை கோஷத்த வண்ணம் கொழும்பில் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளது. இ.தொ.காவை சேர்ந்தவரான ஊவா மாகாண கல்வி அமைச்சரான சச்சிதானந்தனின் தவறான அனுகுமுறைகள் பதுளை பாடசாலைப் பிரச்சினை இரண்டு சமூகங்களுக்கிடையேயான பிரச்சினையாக வளர்க்கப்படுவதற்கு அதிகம் உதவியுள்ளன என்பது மறுக்க முடியாது. பொறுப்புள்ள கட்சியாக இருக்க வேண்டிய மு.ஐ.வி.மு பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் சமரசம் செய்து வைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காது அப்பாடசாலைப் பிரச்சினையை ஆளும்

(தொடர்ச்சி 11ம் பக்கம்..)

நன்றி - நூலகத்திட்டம்



# சீன விடுதலையின் 50 வருடங்கள்

1999 ஒக்தோபர் முதற் திகதியன்று சீன மக்கள் குடியரசின் 50 வருட நிறைவு கொண்டாடப்படும். மக்களது வாழ்க்கைத் தரம், அடிப்படைத் தேவைகள், கல்வி, தொழில் வளர்ச்சி, விவசாயம் போன்ற ஒவ்வொரு துறையிலும் சீனாவின் சாதனைகள் பெரியன. அதிலும் 1947ல் சுதந்திரம் பெற்ற இந்தியாவுடனும் அக்காலத்தில் சனத்தொகையிலும் சமூக விருத்தியிலும் சீனாவுடன் ஒப்பிடத்தக்க நிலையில் இருந்த எந்த நாட்டுடனும் ஒப்பிட்டால் சீனாவின் முக்கியத்துவம் என்ன?

ரஷ்யப் புரட்சிக்கு அடுத்ததாக உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகுந்த உற்சாகமூட்டிய நிகழ்ச்சி சீனப்புரட்சியே. சோவியத் யூனியனில் குருஷ்சொவ் செய்த துரோகத்தின் பின்பு உலகின் புரட்சிகர சக்திகளது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு புரட்சிகர முன்னோடியாகக் சீனாவே விளங்கியது. ஆனால் அந்த நிலை இன்று இல்லை. கடந்த 20 வருடங்களாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இன்று பலவாறாக நோக்கப்படுகின்றன. இங்கு சீனாவின் 50 வருடச் சாதனை பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. சீனாவின் அரசியல், சமூக, பொருளாதார பங்களிப்புக்கள் பற்றியும் சீனாவின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமான பாதிப்புக்கள் பற்றியும் மதிப்பீடுகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன. சீனா பற்றி மாக்ஸியவாதிகளும் முற்போக்குச் சக்திகளும் எடுக்கக் கூடிய நிலைப்பாடுகள் பற்றியும் சில கருத்துக்கள் கட்டுரையின் முடிவில் தரப்படுகின்றன.



சீனாவின் அரசியற் பொருளாதாரக் கொள்கைகள் மூன்றாமுலகின் மக்களது தேவை கட்குப் பல வகைகளிலும் முன் மாதிரியானவையாக இருந்தன. இன்றும் சீனாவின் விடுதலைக்குப் பின்னான கால் நூற்றாண்டுக் காலப் பாடங்கள் மூன்றாமுலக நாடுகட்கு மிகப்பயனுள்ளவை. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் சீனாவின் வழிகாட்டல் நிக்கராகுவாவின் ஸன்டினிஸ்றா விடுதலை இயக்கத்தால் வெற்றிகரமாக கடைப்பிடிக்கப்பட்டது. ஒரு சிறுபான்மைத் தேசிய இனமோ இனப்பிரிவோ தனது அடையாளத்தையும் நலன்களையும் பேணுவதற்கான உரிமையைச் சீனா அங்கீகரித்து அதை நடைமுறைப்படுத்துவதற்கான சுயாட்சி அமைப்புக்களை ஒவ்வொரு தேசிய இனத்தினதும் இனப்பிரிவினதும் தேவைகட்கும் சூழ்நிலைகட்கும் அமைய ஏற்படுத்தியது. இரண்டாயிரம் பேரைக் கொண்ட ஒரு சமூகம் கூட தேசிய சிறுபான்மை இனம் என்ற அங்கீகாரத்தைப் பெற முடிந்தது.

விடுதலைபெற்ற சீனாவின் முதலாவது சட்டச் சீர்திருத்தங்களில் ஒன்று, பெண்களின் உரிமை தொடர்பானது. சட்டரீதியாகப் பெண்களை ஒவ்வொரு வகையிலும் ஆண்களுக்குச் சமமானவர்களாக அங்கீகரித்துச் சட்டமியற்றியதன் மூலம் நிலவுடமைச் சமூதாயத்தின் ஆணாதிக்கச் சமூகவிதிகள் சட்டவிரோதமாக்கப்பட்டன. பழமைவாதச் சிந்தனையின் மிச்ச சொச்சங்கள் எளிதில் அழிவதில்லை. எனினும் சீன அரசு ஆண் பெண் சமத்துவத்திற்கு வழங்கிய ஆதரவின் மூலம் பெண்களின் நிலை மிகவும் வேகமாகவே முன்னேறியது.

சீனாவில் மதங்களுக்குச் சுதந்திர மில்லை என்ற கருத்து பரவலாக பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. ஆயினும் உண்மை என்ன? எவருமே தனது மத நம்பிக்கைக்காகத் தண்டிக்கப் பட்டதில்லை. ஆயினும் மதத்தின் பேரால் எவரும் சமூக நலன்கட்கு விரோதமாகச் செயற்படுவதைச் சீன அரசு தண்டனைக்குரியதாகவே கருதியது. சீன மக்களது நலன்கட்கு விரோதமாகவே பல மத நிறுவனங்கள் நீண்டகாலமாகச் செயற்பட்டன. அந்த மத நிறுவனங்களது ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது தனிமனிதர்களது சமய நம்பிக்கையையோ வழிபாட்டுச் சுதந்திரத்தையோ கட்டுப்படுத்துகிற காரியமல்ல. சீனாவில் சமய நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் அளவுக்கு நம்பாதிருப்பதற்கான சுதந்திரமும் வழங்கப்பட்டது. கலாசாரப் புரட்சிக் காலத்தில் சில இடது தீவிரவாதிகள் மத விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது உண்மை. எனினும் இது சீன அரசினதோ கம்யூனிஸ்ட் கட்சியினதோ கொள்கை அல்ல. இத் தவறுகள் விரைவாகவே திருத்தப்பட்டன. பிற மதங்களுக்கு எதிரான செயல்கள் ஒரு மதச்சார்பான அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாங்கள் காண்கிறோம். இவற்றுடன் ஒப்பிட்டால் சீனாவின் மதச்சார்பற்ற அரசாங்க நிலைப்பாட்டின் சிறப்பை நாம் உணரலாம்.

சுயசார்பு, தன்னிறைவு ஆகிய விடயங்களின் முக்கியத்துவம் சீனாவின் நடைமுறை அனுபவத்தின் மூலம் விருத்தி பெற்றனவை. சீனா தனது விடுதலைக்குப் பின்னர் தனது தொழில் வளர்ச்சிக்கு சோவியத் யூனியனையே மிகவும் சார்ந்து இருந்தது. ஸ்தாலினின் காலத்தில் சீனாவுக்குப் சோவியத் யூனியனுக்கும் பல வேறு விடயங்களில் கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் இரு நாட்டு அரசுகளிடையிலும் கட்சிகளிடையிலும் மக்களிடையிலும் நல்லுறவு பேணப்பட்டது. குருஷ்ச்சொவ் ஆட்சி சோவியத் யூனியனை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஒரு புறம் போட்டியாகவும் மறுபுறம் உலக ஆதிக்கத்தில் பங்காளியாகவும் நோக்கியது. இதன் விளைவாக உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் பிளவு பட்டதும். அதற்கு முன்னமே சீனாவுடன் சோவியத் யூனியன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீறி சோவியத் யூனியன் சீனாவுக்கு வழங்கிய உதவிகளை 1959ல் நிறுத்தியது. அது மட்டுமன்றி அரைகுறையான நிலையிலிருந்து தொழிற்சாலை கட்குரிய நிர்மான வரைப்படங்களையும் சோவியத் நிபுணர்கள் தம்முடன் கொண்டு போய்விட்டனர். இந்தச் சூழ்நிலையில் சீனாவுக்குக் கைகொடுத்தது அதன் மக்களைச் சார்ந்திருத்தல், மக்களிடமிருந்து கற்றல், மக்களுக்குச் சேவை செய்தல் என்னும் வெகுஜன மார்க்கமும் சுயசார்புக் கொள்கையுமே.

சோவியத் யூனியனின் தவறுகளிலிருந்து கற்றபாடங்களின் விளைவாகவே சீனா பல தவறுகளைத் தவிர்த்தது. கட்சி மக்களிடமிருந்து தனிமைப்படுவதன் மூலம் கட்சிக்குள் இருந்து ஒரு புதிய அதிகார வர்க்கம் உருவாகும் என்ற படிப்பினையின் விளைவாகவும் சீனப் புரட்சியின் முக்கிய படிப்பினையான வெகுஜன மார்க்கத்தின் ஒரு தொடர்ச்சியாகவும் 1957ல் "நூறு பூக்கள் மலரட்டும்" என்ற வெகுஜன ஜனநாயக இயக்கம் தொடக்கப்பட்டது. கட்சிமீதான ஆக்க பூர்வமான வெகுஜன விமர்சனங்கள் எதிர்பார்த்த இடத்தில் சோஷலிஸ விரோத சக்திகள் நாசகாரச் கருத்துக்களைப் பரப்ப அந்த வாய்ப்பைப் பயன்படுத்தியதால் அந்த இயக்கம் கை விடப்பட்டது. எனினும் வெகுஜன மார்க்கம் கைவிடப் படவில்லை 1958–59ல் நடந்த முன்நோக்கிய பெரும் பாய்ச்சல் வெகுஜனங்களது ஆற்றலை முழுமுழுமையாகப் பயன்படுத்தச் சீனாவின் கிராமங்களில் தொழில் விருத்தியை முன்னெடுக்கும் நோக்கத்தையும் பொதுப்படச் சீன மக்களின் உற்பத்தி திறன்களை உயர்த்தவுமே மேற் கொள்ளப்பட்டது. இக்கால கட்டத்திலேயே சீனாவின் பல கிராமங்களில் மக்கள் கம்யூன்கள் என்ற கூட்டுறவு முறையிலான சமூக உற்பத்தி முறை அறிமுகப்படுத்தப் பட்டது.

**இன்றைய சீனாவின் பாதை சரியான சோஷலிசப் பாதை என்பது வலது சந்தர்ப்பவாதம் சீனாவை எதிரியாக நோக்குவது இடது தீவிரவாதம். சீனா பற்றிய ஒரு நிதானமான நிலைப்பாடும் பிரதான எதிரி ஏகாதிபத்தியமே என்ற தெளிவும் இல்லாது போனால் நாம் பெரும் தவறு செய்தோராவோம்.**

1958–59 கால கட்டத்தில் சோவியத் ஆட்சியாளர்களின் குழி பறிப்பு வேலைகள் ஒரு புறமும் இயற்கையின் சீற்றம் மறுபுறமுமாகச் சீனாவின் வளர்ச்சியைத் தடுக்க முனைந்தன. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் அரசியற் சாதனை மக்களின் சமூக உணர்வை முதன்மைப் படுத்தியதன் காரணமாகச் சீனா இந்த நெருக்கடி மிக்க சூழலிலும் பொருளாதார வளர்ச்சி கண்டது. இங்கு சுயசார்புக் கொள்ளை ஒரு நாட்டின் மக்களது இறைமையைக் காப்பதில் எவ்வளவு பெரிய பங்கு வகித்தது என்பதைக் கவனித்தால் சீனப்புரட்சி வழங்கிய ஒரு முக்கிய பாடமாக நாம் சுயசார்பையும் கொள்ளமுடியும்.

சீனாவின் கலாச்சாரப் புரட்சி பற்றி மிகவும் மோசமான கருத்துக்கள் திட்டமிட்டே பிரசாரம் செய்யப்பட்டு வந்துள்ளன. எனினும் கலாசாரப் புரட்சியின் சாதனைகள் வரலாற்று முக்கியமும் அரசியல் முக்கியமும் வாய்ந்தவை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வலதுசாரிப் போக்குக்கள் ஓங்கிச் சீனச் கம்யூனிஸ்ட் கட்சியை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி சீனாவை முதலாளியப் பாதையில் தள்ளும் அபாயம் காரணமாகவே கலாசாரப் புரட்சி தொடங்கப்பட்டது. கலாசாரப் புரட்சிக்குக் காரணமாக இருந்த ஒரு முக்கியமான விடயம் சீனாவின் மருத்துவ சேவையின் விருத்தி நகரங்களையே கருத்திற் கொண்டு, அமைந்ததன் காரணமாக கிராமங்கள் போதிய கவனிப்பைப் பெறாமையாகும். கலாசாரபப் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட முக்கிய மாற்றமொன்று 'வெறுங்கால் மருத்துவர்கள்' பலபேர். உருவானமை எனலாம். மக்களுடைய அடிப்படையான மருத்துவத் தேவைகட்காகப் பயிற்றப்பட்ட இவர்கள், குறுகிய காலப்பயிற்சியுடன் நோய்த்தடுப்புக்கு மிகுந்த முக்கியம் வழங்கினார்கள். இவர்களது சேவை மனப்பான் மையும் மக்களால் போற்றப்பட்டது. கலாச்சாரப் புரட்சி மூலம் சீனாவின் பாரம்பரிய மருத்துவ முறை விஞ்ஞான ரீதியான விருத்திபெற்று மேனாட்டு மருத்துவத்துடன் இணைத்துப் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாரம்பரிய மருத்துவ அறிவு மக்களுக்கு மேலும் முழுமையான முறையிற் பயன்பட்டது.

கலாசாரப் புரட்சிக்குப் பின்னரே சீனாவின் தொழிலாளர், விவசாயிகள் ஆகியோருக்கு மேற்படிப்பிற்கான வசதிகள் பரவலான அளவிற் கிடைத்தன. அரசியல் சமூக நோக்குக்களைப் பொறுத்தவரை. கலாசாரப்புரட்சி உடல் உழைப்பையும் அறிவு சார்ந்த உழைப்பையும் சமன் படுத்தியதும், எல்லாவற்றையும் வெளிவெளியாகவே சொல்வதையும் செய்வதையும் வலியுறுத்தியது, மக்களிடமிருந்து கற்பதை பரவலாக நடைமுறைப்படுத்தியது. மக்களுக்குச் சேவை செய்தலை முதன்மைப்படுத்தியது, பொருளாதார ஊக்குவிப்பின் இடத்தில் சமூக அற உணர்வு சார்ந்த ஊக்குவிப்பை வற்புறுத்தியது.

கலாசாரப் புரட்சியின் நோக்கங்கள் அதன் எதிரிகளால் ஒரு புறம் வெளிவெளியாகவும் மறுபுறம் மறைவாக இடது தீவிரவாதப் போக்காலும் பாதிப்புக்குள்ளாயின. இதனால் பல வீண் தவறுகள் நேர்ந்தன. நல்லவர்கள் பலர் தவறாக மதிப்பிடப்பட்டனர். கணிசமானோர் மிகையாகத் தண்டிக்கப்பட்டனர். பழமையை முற்றாகவே நிராகரிக்கும் தவறான போக்கால் மத உணர்வுகளும் மரபுசார்ந்த விழுமியங்களும் அவசியமின்றிக் கீழ்மைப்படுத்தப்பட்டன. இவ்வாறான தவறுகள் உடனடியாகவே திருத்தப்பட்டாலும், அவற்றின் பாதிப்பு நீண்டகாலத்திற்குத் தொடர்ந்தது.

சுயசார்பு, சுற்றுச் சூழல் பற்றிய அக்கறை, சமூக நலன்களின் அடிப்படையில் சகலவற்றையும் நோக்குதல், தன்லமற்ற சேவை போன்ற விழுமியங்கள் கலாசாரப் புரட்சியின் போது வலியுறுத்தப்பட்ட விடயங்களுள் அடங்கும். கலாசாரப் பரட்சியில் தவறான போக்குக்கள் ஓங்கிய போது அதைக் கட்டுக்குள் கொண்டுவரும் தேவை ஏற்பட்டத. மாஓவின் மரணத்தின் பின்பு முதலில் 'நால்வர் கும்பல்' என அழைக்கப்பட்டவர்கள் பதவி நீக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டனர். பின்னர் மெல்ல மெல்லக் கட்சியின் அதிகாரம் கலாசாரப் புரட்சியை நிராகரித்தவர்களது வசமாயிற்று.

கலாசாரப் புரட்சியின் நிராகரிப்பு மக்களுக்குச் சேவை செய்தல், வெகுஜன மார்க்கம், சுய சார்பு போன்ற பல உயரிய நிலைப்பாடுகளது நிராகரிப்புமாகியது. கலாசாரப் புரட்சியின் தவறுகளைத் திருத்துகிற ஒரு காரியமாகத் தொடங்கிய ஒரு போக்கு சீனாவின் விடுதலைக்குப் பின்னான வரலாற்று அனுபவத்தையே மாற்றி எழுதும் காரியமாகியது என்றே கூற வேண்டும்.

சீனாவின் அயற் கொள்கை பற்றி நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான சில விடயங்கள் உள்ளன. நாடுகளிடையே பஞ்ச சீலம் என்ற, சமத்துவ அடிப்படையிலான உறவு சீனாவால் உறுதியாகக் கடைப்பிடிகப்பட்டுவந்துள்ளது. பிற நாடுகளின் உள் விவகாரங்களில் குறுக்கிடாமை நாட்டின் அளவு, சனத்தொகை, வலிமை போன்றவற்றைக் கணிப்பில் எடாத சமத்துவம் என்பன சீனாவின் அந்நிய உதவியிலும் காணப்பட்ட ஒரு முக்கிய பண்பாகும். உதவி பெறும் நாட்டின் தேவைகளை மதித்து நடப்பது பற்றிய சீன அரசின் கொள்கை சீன நிபுணர்கள் உட்பட்ட அயல் உதவி ஊழியர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டது. போகும் நாட்டின் வாழ்க்கைமுறைக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் ஏற்ப வாழ்வதும் எளிமையும் அனைத்தையும் வெளிவெளியாகத் கலந்து பேசுவதும் மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. இதனாலேயே சீன உதவியும் சீன நிபுணர்களும் கியூபா தவிர்ந்த பிற நாட்டு உதவியினின்றும் நிபுணர்களினின்றும் வேறுபட்டோராகக் காணப்பட்டனர்.



நீண்டபடை நடப்பின் போது விடுதலைப் படையுடன் மா.ஓ

காலஞ்சென்ற பிரதமர் ஜோ என் லாய் "நட்புமுதலில், போட்டி பிறகு" என்று கூறிய சொற்கள் சீன விளையாட்டுக் குழுக்களாலும் கலைக் குழுக்களாலும் 1960–70களில் கடைப்பிடிக்கப்பட்டன. தம் ஆற்றலையும் அறிவையும் அனுபவத்தையும் பகிர்வதில் சீன அணியினர் தயக்கம் காட்டவில்லை. இன்று மேனாட்டு நிறுவனங்கள் விஷமாகச் சொல்வது போல பெருமளவில் இல்லாவிடினும் சீன மெய்வல்லுனர்கள் சிலர் தடைசெய்யப்பட்ட மருந்துகளைப் பாவிப்பது போட்டி மனப்பான்மை ஓங்கி விட்டதையே காட்டுகிறது. சமூகரீதியான ஒரு போக்கின் பிரதிபலிப்பாகவே இதை நாம் கொள்ள வேண்டும்.

சீனாவின் எல்லைத் தகராறுகளில் ரஷ்யாவுடனானதும் இந்தியாவுடனானதும் போக மற்றவை சுமூகமாகவே

தொடர்ச்சி 8ம் பக்கம்...

நன்றி - நூலகத்திட்டம்




# தந்தை சொல் மிக்க மந்திரம்

## தந்தையும் மைந்தரும் 17







1972ன் புதிய அரசியல் யாப்புப் பற்றிய கலந்தாலோசனைகளினின்று ஒதுங்கியதன் மூலம் தமிழரசுக் கட்சி தலைமை சாதித்தது என்ன என்பது ஒரு புறமிருக்க இவ்வாறு ஒதுங்கும் போது மாற்று வேலைத்திட்டம் எதையும் கைவசம் வைத்திராமலே செய்தது என்று எண்ண நிறைய இடம் உண்டு. தன் தொகுதி மக்களால் நிராகரிக்கப்பட்ட அமிர்தலிங்கம் பாராளுமன்றத்திற்கு வெளியில் தனக்கான ஒரு அரசியற் தனத்தைக் கட்டியெழுப்பக் கடும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார் என்பதை விட, இந்தப் பகிஷ்கரிப்புக்கான அவசியம் வேறு எவருக்கும் இருந்ததா என்பது ஒரு விடயம். மறுபுறம், புதிய அரசியல் யாப்பினுள் தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பாக ஆக்கமான யோசனைகளை முன்வைத்துப் போராடி விட்டு, முடியாத பட்சத்தில் எல்லா எம்.பிமாரும் பதவி விலகியிருக்க முடியும். இவ்வாறான போராட்டத்தின் ஆபத்துக்கள் பற்றி ஒரு வேளை தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் நன்கு அறிந்து இருக்கக்கூடும்.

பழைய அரசியல் யாப்பில் சிறுபான்மையினரது உரிமைகட்கு உத்தரவாதமளிக்கும் நோக்கில் இருந்த 29வது ஷரத்து புதியதில் இல்லை என்பது ஒரு முக்கியமான ஆட்சேபனையாக இருந்தது. எனினும் இந்த உத்தரவாதத்தால் மலையக மக்களின் குடியுரிமை பற்றியோ தமிழையும் அரசகரும மொழியாக்குவது பற்றியோ எதுவுமே செய்ய முடியவில்லை என்பது சட்ட மறிந்தவர்களான தமிழரசுக்கட்சித் தலைவர்கள் அறியாத ஒன்றல்ல.

இன்னொரு ஆட்சேபனை பௌத்தத்திற்கு அளிக்கப்பட்ட சிறப்பான இடம் பற்றியது. இதில் பிரபல ட்ரொட்ஸ்கிவாதியான அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வாவுடைய அரசியற் சீரழிவு புலனானது ஒரு முக்கிய விடயம் 1972ல் கண்டிக்கு வந்த அமைச்சர் தலதா மாளிகைக்கு மலர்கள் கொண்டு வழிபடப் போனது பற்றி அதன் அளவிலேயே கண்டிக்க அவசியமில்லை என்றாலும் அதற்கு இருபது வருடங்கட்கு முன்பு அதே பிரமுகர் பௌத்த கோயில்களை விடப் பொதுமலசலகூடங்கள் நாட்டுக்கு முக்கியமானவை என்று கூறியதை நினைவுகூரும் போது சில தீவிர இடது சாரிகள் எவ்வளவு தூரம் சீரழிய முடியும் என்பதை எண்ணாமல் இருக்க முடியாது. அதே வேளை, பௌத்தத்தின் சிறப்பான இடம் பற்றிச் சினக்கின்ற தமிழரசுக்கட்சியைக் கூட்டாளியாகக் கொண்ட அரசாங்கம் பதவியில் இருந்த போதே 'போயா' தினங்கள் பொது விடுமுறை தினங்களாக்கப் படும் விதமாக ஞாயிறு வார விடுமுறையை அடிப்படையாகக் கொண்ட வாரத்திற்குப் பதிலாக, பூரணை, அட்டமி, அமாவாசை விடுமுறை நாட்களாகும் அடிப்படையில் வேலை நாட்கள் மாற்றியமைக்கப்பட்டன. இச் சிக்கல் 1971க்குப் பின்பு பெரிய ஸ்ரீ.ல.சு.கட்சி ஆட்சியின் கீழ் தீர்க்கப்பட்டாலும் பெரிய போயா (பூரணை) விடுமுறையை பௌத்த மத பீடங்கள் விட்டுக் கொடுக்க மறுத்து விட்டன.

தமிழரசுக் கட்சி ஆட்சியில் பங்காளியாக இருந்த காலத்திற்தான், வெசாக் தினமும் மே தினமும் அபூர்வமாக ஒரே நாளில் அமைந்தன. வெசாக் நாளன்று மே தின ஊர்வலங்கட்கும் பொதுக் கூட்டங்கட்கும் தடை விதிக்கப்பட்டது. தமிழரசுக்கட்சி இதற்கும் உடந்தையாகவே இருந்தது. பௌத்த மேலாதிக்கத்திற் கான சட்டரீதியான எந்த நடவடிக்கையும் 1965 முதல் 1970 வரை எதிர்க்காத இத் தமிழ்த் தேசியவாதிகளது பௌத்த மேலாதிக்க எதிர்ப்புணர்வு 1970க்குப் பிறகு எப்படிப் புத்துயிர் பெற்றது என்பது விளங்கிக் கொள்ளக் கடினமான ஒன்றல்ல. வெகு சராசரியான ஒரு பாராளுமன்ற எதிர்க் கட்சியின் முரட்டு எதிர்ப்புக்கும் தமிழரசுக்கட்சி 1970–77 காலகட்டத்தில் கடைப்பிடித்த போக்குக்கும் அதிக வேறுபாடில்லை. இந்த மனோபாவம் எவ்வாறு 1977க்குப் பிறகு மாறியது என்பது வேண்டுமானால் தமிழரசுக் கட்சியின் வர்க்க நிலைப்பாட்டை மேலும் தெளிவாக விளக்கக் கூடும்.

ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பல தவறுகளைச் செய்திருக்கிறது என்பது பற்றியோ தேசிய இனப் பிரச்சினையில் தமிழ் மக்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பது பற்றியோ ஐயமில்லை. தோட்டங்களின் தேசியமயமாக்கலின் முற்போக்கான பக்கத்தையே தோட்டத் தொழிலாளர் காண இயலாத விதமாக மலையகத் தமிழ் மக்களுக்கு விரோதமான பல காரியங்களைச் செய்துள்ளது. ஆயினும் அந்த அரசாங்கம் எடுத்த சில நல்ல நடவடிக்கைகளுள் சில உணவுப் பொருட்கள் மீதான கட்டுப்பாடு ஒன்று. இதன் விளைவாக. வடக்கில் விவசாயிகளது உற்பத்தியும் வருமானமும் வாழ்க்கைத் தரமும் வேகமாக உயர்ந்தன. இதனையொட்டிக் குடா நாட்டு மக்களில் கணசமானோர் வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் குடியேறி விவசாயத்தில் ஈடுபடவும் நேர்ந்தது. தமிழரசுக்கட்சி சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் பற்றி 1949 முதலாகப் பேசி வந்தாலும், அதனால் என்றுமே யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களையோ காணியற்ற எந்தத் தமிழ் மக்களையோ வடக்குக் கிழக்கு மாகாணங்களின் குடியேற்றத் திட்டப் பகுதிகளிலோ விவசாயத்திற் கேற்ற வேறு காணிகளிளோ குடியேற்ற எதுவுமே செய்ய இயலவில்லை.

தமிழ்த் தேசிய உணர்வு செய்யத் தவறிய ஒன்றைப் பொருளாதார வாய்ப்புக்கள் செய்தன. இந்த விதமான மீள் குடியேற்றத்தின் விளைவாகவே வடக்கின் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்களது பாரம்பரியப் பிரதேசம் என்பதன் பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் உணரப்பட்டது. ஆயினும் சரியான ஒரு அரசியல் வழிகாட்டலைத் தமிழ்த் தேசிய வாதிகளான தமிழ்த் காங்கிரஸோ தமிழரசுக்கட்சியோ இவ்விடயத்தில் வழங்கவில்லை. எனவே, மலையக மக்கள் 1973க்குப் பின்பு வன்னிக்கு குடிபெயர்ந்து அங்கே தமது வாழ்வை மீள அமைக்க முனைந்த போது தமிழரசுத் தலைமையால் தனக்குப் பழக்கப்பட்ட சாதிய, நிலவுடமைச் சமூக மனோபாவத்தை முறியடிக்கும் விதமான ஒரு புதிய பாதையைக் காட்ட முடியவில்லை. மலையக மக்கள், வன்னியிற் பெருங்காணியுடைமையாளர்களாக வளர்ந்தவர்களால் குரூரமாகச் சுரண்டப்பட்டு அடிமைகள் போல நடத்தப்பட்டதையிட்டுத் தமிழரசுக் கட்சித் தலைமை எதுவிதமான அக்கறையும் காட்டவில்லை. எனவே தான் தமிழரசுக்கட்சிக்கு வெளியிலும் அதன் ஆதரவின் மீது தங்காமலுமே காந்தியம் போன்ற சமூக சேவை அமைப்புக்கள் விருத்திபெற்றன.

தமிழரசுக் கட்சியின் தலைமைக்கும் யூ.என்.பி.க்கும் இருந்து வந்த நெருக்கம் 1970க்குப் பின்பும் தொடர்ந்தது என்பதற்கான சாட்சியங்கள் பாராளுமன்ற வாக்கெடுப்புக்களிலும் விவாதங் களிலும் மட்டுமன்றி முக்கியமான அரசியல் நடவடிக்கைகளிலும் தெளிவாகவே தெரிந்தன. 1972ல் உருவான தமிழர் ஐக்கிய முன்னணிக்கு யூ.என்.பியின் ஆசி இருந்தது என்பதற்கும் 1976ல் அது தனி நாடு கோரும் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகிய பின்பும் அந்த நல்லுறவு தொடர்ந்தது என்பதற்கும் யூ.என்.பி. இந்தப் புதிய தமிழ்த் தேசியவாதப் போக்கையும் பிரிவினை வாதத்தையும் கண்டுகொள்ளமாலே இருந்தது ஒரு வலுவான சான்று. எனினும் யூ.என்.பியின் தலைமை தமிழரசுக் கட்சித் தலைமையின் இந்தப் போக்கைத் தனது வசதிக்காகவே மறைமுகமாக ஊக்குவித்தது என்பதைத் தமிழரசுக் கட்சியின் தீர்க்கதரிசி அறியவில்லை என்றால் அதன் பொருள் என்ன? 1977ல் தேர்தலில் வென்ற பிறகு யூ.என்.பியின் சுயரூபம் வெளிப்பட்ட பின்பும் தமிழரசுக் கட்சித் தலைவர்களது மயக்கம் தெளிய வெகு காலம் எடுத்தது என்பதை நோக்கும் போது, தந்தையின் தீர்க்கதரிசன மகிமை எப்போதோ மங்கிப் போய்விட்டது என்றுதான் தோன்றுகிறது.

வடக்கில் தேசிய இனப்பிரச்சினை மோசமடைந்து வந்த அதே வேளை, அரசில் தமது கூட்டாளியாக இருந்த ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் உண்மை நிலைமைகளை விளக்கி நிலவரம் மேலும் மோசமாகாமல் தடுப்பதற்கும் இன உறவுகளைச் சீர்திருத்து வதற்குமான நடவடிக்கை களை எடுக்குமாறும் நிர்ப்பந்திக்க வேண்டிய கடமை இரண்டு பாராளு மன்ற இடதுசாரிக் கட்சிகளுக்கும் இருந்தது. ஆயினும் அவர்கள் அப்படி எதையுமே செய்யவில்லை. மறுபுறம் புண்ணுக்குப் புனுகுபூசுகிற விதமான காரியங்களையே செய்து வந்தனர். 1975ல் கூட்டப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு இத்தகைய ஒரு முயற்சியே அல்லாமல் வேறல்ல. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த மாநாட்டை நடத்துவதில் முன்னின்ற 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்கிற ஒரு அமைப்பும் அதன் வழிகாட்டியான பாராளு மன்றவாத கம்யூனிஸ்ட் கட்சியும் இது போன்ற ஒரு மாநாட்டை சிங்கள மக்கள் மத்தியில் நடத்த எது வித அக்கறையும் காட்டாததுதான். போதக்குறைக்கு அம் மாநாட்டிற்கு வருகைதந்த அக் கட்சி அமைச்சரும் பிற பிரமுகர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதுவித அக்கறையுங் காட்டிப் பேசாதது ஒரு புறமிருக்க அவர்களுள் ஒருவர் தமிழ் மக்கள் நடுவில் தான் இனவாதம் உள்ளது என்று குற்றஞ்சாட்டிப் பேசியதை யாருமே தட்டிக் கேட்கவில்லை. இவர்களை நம்பி மாநாட்டுக்கு ஆதரவளித்த சில தமிழ் முற்போக்குச் சிந்தனை யாளர்கள் முகத்தில் இம் மாநாடு கரி பூசியது.

அரசாங்கத்தில் சிங்கள இனவாதி களது கை ஓங்குவதற்கு அதிற் பங்கு பற்றிய இடதுசாரிகள் எனப்படும் இரு கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களது அசட்டையான போக்கும் ஒரு காரணமே. சிங்களப் பேரினவாதத்தின் வலிமையை மிகையாக மதிப்பிட்டதன் விளைவாக இந்த இரு கட்சிகளும் தமிழ் மக்களிடையே பூரணமாகவே செல்வாக்கிழந்தன. தமிழரசுக் கட்சியின் இடதுசாரி எதிர்ப்புக்கு வலுவும் நம்பகமும் வழங்கியது இந்தப் பாராளுமன்ற இடதுசாரிகளது நடத்தையேதான். இதை வைத்தே மாக்ஸிய–லெனினியவாதிகட்கு எதிரான அவதூற்றை வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசுத் தலைமையால் ஆழ விதைக்க முடிந்தது. அந்த விஷப் பூண்டுகள் இன்றும் தமிழ்த் தேசிய வாதத்தால் திசை திருப்பப்பட்ட பலரது தெளிவான சிந்தனைக்கு ஒரு தடையாகவே இருந்து வருகின்றன.

மாக்சிய–லெனினியவாதிகளிடையே 1972க்குப் பிற்பாடு ஏற்பட்ட பிளவுகளும் வடக்கில் தமிழரசுக் கட்சியின் அரசியலின் வீழ்ச்சியைத் தாமதிக்க உதவின. தேசிய இனப்பிரச்சினையில் மாக்சியவாதிகள் முன்வைத்த சமூக நீதி தொடர்பான நியாயங்களைப் புறமொதுக்கி தமிழ்–சிங்கள முரண்பாட்டை அடிப்படை முரண்பாடாகக் காட்டும் போக்கின் தர்க்க ரீதியான தொடர்ச்சியாக, பிரிவினைவாதக் கோரிக்கை தமிழரசுக் கட்சியின் பின் திரண்ட புதிய இளைஞர் பரம்பரையினர் நடுவே வலுப்பெற்றது. 1974அளவில் இது வெளிவெளியாகவே அடையாளங் காணப்பட்டாலும், 1976ல் த.ஐ.வி. கூட்டணியின் தோற்றத்தோடு தான் தமிழீழப் பிரிவினை முறையாக ஒரு கொள்ளையாக முன்வைக்கப்பட்டது.

அமிர்தலிங்கத்தையோ தமிழரசுக் கட்சி எம்.பி.மாரினதோ கூட்டணிக்காரப் பிரமுகர்களதோ அன்றைய தேவை தமிழீழமல்ல. அவர்களது தேவை, 1977 தேர்தலில் எப்படியாவது தமது பாராளுமன்ற ஆசானங்களை வெல்வதும் மேலும் சில காலத்திற்கு தமிழ்–சிங்கள முரண்பாட்டைக் காட்டித் தமது வர்க்க நலன்களைப் பேணுவதுமே தான். எவ்வாறு ஒரு வேலைத்திட்டமும் இல்லாமல் சமஷ்டி கேட்டுக் கால் நூற்றாண்டுக்காலமாக அரசியல் நடத்தினார்களோ அவ்வாறே தமிழீழம் கேட்டு ஒரு பத்து வருடங் களையாவது கடத்தலாம் என்ற கணக்கு தேர்தல் முடிந்து சில மாதங்களிலேயே தப்பாகிப் போய்விட்டது.

செல்வநாயகத்தால் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியை வழி நடத்த இயலாது என்பது தெட்டத் தெளிவான விடயம். ஆயினும் மக்கள் மத்தியில் அவர் பற்றிக் கட்டியெழுப்பப்பட்ட படிமத்தின் வலு அவரையே தலைவராகக் காட்டும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. 1970க்குப் பின்பு படிப்படியாக தன்னம்பிக்கை தளர்ந்து போன செல்வநாயத்தால் அமிர்தலிங்கம் திரைக்குப் பின்னால் நடத்திய நாடகங்களைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. தமிழரசுக் கட்சியினதோ பிற தமிழ்த் தேசியக் கட்சிகளை அது தன் கீழ்க் கொண்டுவர உருவாக்கிய த.ஐ.முன்னிணியினதோ த.ஐ.வி. கூட்டணியினதோ திசை தெரியாத பயணத்தில் வழிகாட்டவும் அவருக்குத் திராணியில்லை.

1976ல் திருகோணமலையில் நடந்த கூட்டணி மாநாடு தமிழ் மக்களிடையே எதிர்ப்பார்ப்புக்களைக் கிளறிவிட்ட அளவில் அதே நகரில் 20 வருடங்கள் முன்னர் நடந்தேறிய தமிழரசுக் கட்சி மாநாட்டை ஒத்திருந்தது. ஒரு தீர்க்கதரிசியால் ஒரு வேளை, இந்த மாநாடு முன்னையது போல் எதிர்பார்ப்புக்களை மிஞ்சிய ஏமாற்றங்கட்கே வழி காட்டும் என்று கூறியிருக்க முடிந்திருக்கும். 1956ம் ஆண்டின் நம்பிக்கைகள் தகரத் தொடங்க ஐந்து ஆண்டுகளாயின. 1976ம் ஆண்டின் நம்பிக்கைகள் தகர ஒரு ஆண்டு கூட எடுக்கவில்லை. எனினும் செல்வநாயகம் அதிர்ஷ்ட சாலி எனலாம். அவருக்குப் பின் அவரது வாரிசுகளாக எஞ்சிய ஒவ்வொருவரது பேரும் தமிழ்த் தேசியவாத வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களிற் பொறிக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தமிழ் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டனர். மரணம், செல்வநாயகத்தை அந்த அவலத்தினின்றுங் காப்பாற்றியது. ●

(அடுத்த இதழில் முடிவுறும்)

நன்றி - நூலகத்திட்டம்



# படுகொலைகளும் நியாயங்களும்

கடந்த செப்டம்பர் மாதம் 15ம் திகதி முல்லைத் தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியின் ஒரு முக்கிய சந்தி. குடியிருப்புகள் சிறிய பெட்டிக்கடைகள் வாசிகசாலை மற்றும் தெருவோர மீன் விற்போர் என மக்கள் நடமாட்டம் கூடிய இடம். அங்குள்ள வாசிகசாலையில் சிறுவர்களுக்கு போஷாக்கு உணவாக பால் வழங்கப்பட்டு முடிந்த கையோடு சுமார் 10–30 மணி இருக்கும். திடீரெனப் பேரிரச்சலுடன் தாளப்பதிந்த குண்டு வீச்சு விமானம் குண்டுகள் பொழிந்தன. ஏழு குண்டுகள் ஒரே நேரத்தில் போடப்பட்டன. மக்களின் உடல்கள் சிதறின. எங்கும் இரத்த வெள்ளம். தனது பிள்ளைக்கு பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு தாயின் தலை நூறு மீற்றருக்கு அப்பால் துண்டித்து எறியப்பட்டது. பலரது உடல்கள் சிதறியதால் உருப்படியாக்க முடியவில்லை. உருக்குலைந்த ஒருவரது உடல் சேறு மூடிய கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது. வயது வேறுபாடின்றி பச்சிளம் பாலகர்கள் முதல் வயோதிபர் வரை 22 பேர் கோரமாகக் கொல்லப் பட்டனர். 43பேர் படுகாயங்கள் அடைந்தனர். இக்குண்டு வீச்சு பதினைந்து நிமிடங்கள் முந்தி நடந் திருந்தால் போஷாக்குணவான பால் வாங்க வந்திருந்த நூறு வரையான சிறுவர்ளகள் அவ் விடத்தில் கொல்லப்பட்டிருப்பார்கள். அவர்களில் பத்துச் சிறுவர்கள் வரை இத்தாக்குதலில் அகப்பட்டுக் கொண்டனர் ஏனையோர் வீடுகளுக்கு திரும்பி விட்டனர். விமானப்படை நடாத்திய இக்கோரக் கொலைகள் எவ்வகையிலும் மறுக்கப்பட முடியாதவை. நியாயப்படுத்தப்பட இயலாதவை.

இப்படுகொலைகள் இடம் பெற்ற மூன்று நாட்களுக்குப் பின் 18–09–99 அம்பாறை மாவட்டம் கோணவல கிராமத்தில் மற்றொரு படுபாதகப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றது. அன்று நடு நிசியைத் தாண்டி அதிகாலை 2.30 மணியளவில் அக் கிராமத்திற்குள் புகுந்த ஆயுதபாணிகள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மக்களை வாள் கத்தி கிறிஸ் போன்ற கூர் ஆயுதங்களால் வெட்டியும் குத்தியும் குதறிக் கொண்டனர். சிறுவர்கள் வயோதிபர் பெண்கள் என்ற வேறுபாடே பார்க்கப்படவில்லை. ஒரு கர்ப்பிணித் தாய் கூட வெட்டிச் சரிக்கப்பட்டாள். மொத்தம் 54பேர் இவ்வாறு கொன்று இரத்த வெள்ளத்தில் மிதக்க விடப்பட்டனர். இந்தக் கொலைக்கு எவரும் உரிமை கோரவில்லை. அரசாங்கம் புலிகளே செய்தனர் எனக் கூறிக் கொண்டது. புலிகள் இதனை மறுத்த போதிலும் அந்த மறுப்பை விட அவர்கள் மீதான சந்தேகமும் குற்றச்சாட்டும் மேவியே காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பிலும் அம்பாறையிலும் படுகொலைகளுக்கு ஆளானவர்கள் மிகச் சாதாரண பொது மக்களான தமிழர்களும் சிங்களவர்களுமாவர். அவர்கள் இனம் மொழி மதத்தால் வேறுபட்டவர்களே தவிர உடலால் உயிரால் உதிரத்தால் உழைப்பால் அன்றாட வாழ்வால் மனிதர்கள். மனிதர்களுக்குரிய இயல்பான நெருக்கடிகளை, எதிர்ப்புகளை, வாழ்க்கை அவலங்களை எதிர்த்து நின்று வாழ்க்கையை வாழ்வதற்காக வாழ்ந்து வந்தவர்கள். அத்தகைய மனிதர்களைத்தான் அண்மைய படுகொலைகள் காவு கொண்டுள்ளன. இத்தகைய படுகொலைகள் கடந்த இரண்டு தசாப்த இலங்கையில் பலதடவைகள் மீண்டும் மீண்டும் இடம் பெற்று வந்துள்ளன.

ஆனால் இன்று வரை இப்படுகொலைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் தெரிந்திருந்தும் அவற்றை தீர்வுக்கு உள்ளாக்கி படுகொலைகளுக்கு உரிய முடிவினைக் கொண்டுவர எந்த ஆளும் வர்க்கக் கட்சிகளும் சக்திகளும் முன்வரவில்லை. அதே வேளை இப்படுகொலைகளை நியாயப்படுத்து வதற்கு முயன்று வந்துள்ளன.

புதுக்குடியிருப்பு விமானக்குண்டு வீச்சுக் கொலைகளைப் பற்றி அரசாங்கம் புலிகளின் மீதான தாக்குதல் எனக் காட்ட முழு முயற்சி செய்தது. அவர்களுக்கு ஒத்து ஊதிப் பெருப்பித்துக் காட்டுவது போன்று சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் பொதுமக்கள் கொல்லப்படவில்லை. என எழுதின. ஐ.சிஆர்.சி. அமைப்பு பொதுமக்கள் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்திய போது சில பத்திரிகைகள் அந்த அமைப்பின் மீது கணைகள் தொடுத்தன. இறுதியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தவறுதலாக இடம் பெற்ற சம்பவம் எனக் கூறிச் சமாளிக்க முன்வந்தார். ஆனால் இன்றுவரை அவர்களது 'விசாரணை' முடிய வில்லையாம். அதனால் நஷ்டஈடு என்ற பேச்சுகே இடமில்லை.

அதேவேளை அம்பாறை கோணவில படுகொலைச் சம்பவத்தை அரசாங்கம் சிங்கள–ஆங்கிலப் பத்திரிகைகள் உட்பட தொடர்பூடகங்கள் யாவும் பெரும் பிரச்சாரத்திற்கு எடுத்துக் கொண்டன. அரசாங்கம் அனுதாபம் தெரிவித்ததுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் அங்கு சென்று நேரில் ஆறுதல் கூறினர். புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரஃப் அங்கு சென்று உடன் செலவுக்காக ரூபா பத்தாயிரம் வீதம் கொலையுண்ட குடும்பத்தவர் களுக்கு வழங்கினார்.

கொலையுண்டவர்களது குடும்பங்களுக்கு ஆறுதல் கூறுவது உதவித் தோகை வழங்குவதும் பாதுகாப்பு வழங்குவதும் செய்யபட வேண்டியவை என்பதில் எவருக்கும் முரண்பாடு கிடையாது. ஆனால் மனிதர்களை சிங்களவர் தமிழர் எனப்பிரித்து சிங்களவருக்கு ஒரு நியாயமும் தமிழருக்கு வேறொரு நியாயமும் காட்டப்படுவது தான் கேவலமான நடைமுறையாகும்.

யுத்தங்ளும் உயிர்இழப்புகளும் இன்று நேற்று உருவாகியவை அல்ல. ஆரம்பகால மனிதர் தொட்டு இன்றைய நவீன மனிதர்கள் வரை போராட்டங்களின் ஊடாகத் தான் வளர்ச்சி பெற்று வந்துள்ளனர். முரண்பாடுகள் மனிதர்களிடையே தோற்றம் பெற்று அவை தீர்வின்றி வளர்ச்சி உச்சகட்டத்தை அடையும் போது யுத்தம் ஏற்படுகிறது. அவ்வேளை உயிர் இழப்புகள் தவிர்க்கவியலாத ஒன்றாகி விடுகிறது. ஆனால் யுத்தத்தில் வெவ்வேறு வகை உண்டு. தேவைப்படும் யுத்தம் தேவையற்ற யுத்தம் எனவும், நீதியான யுத்தம் அநீதியான யுத்தம் எனவும் பிரித்து யுத்தத்தை நோக்குதல் வேண்டும். நீதியான யுத்தத்தில் எதிரியார் என்பது சரியான வரையறுப்புக்கு உட்பட வேண்டும். மக்கள் எவரும் எதிரி என்ற நிலையில் வைத்து நோக்கப்படக் கூடாது. ஆளும் வர்க்கம் மக்கள் மீது யுத்தம் தொடுக்கும் போது அதனை எதிர்த்துப் போராடுவது மக்கள் சார்பான எந்தவொரு விடுதலை இயக்கத்தினதும் மறுக்க முடியாத கடமை. ஆனால் ஆளும் வர்க்கப் படைகள் நடந்துகொள்வது போன்று மக்கள் மீது அவர்கள் எவராக இருந்தாலும் தாக்குதல் தொடுக்கக் கூடாது. கொரில்லாப் போராட்டத்தில் இவை யாவும் தவிர்க்கப்பட முடியாதவை என்னும் நியாயபடுத்தல் மிகவும் பிற்போக்குத் தனமாகும். பழிக்குப் பழி என்பது ஆளும் படைக் குரியதாகும். அதனை விடுதலைப் போராளிகள் ஒருபோதும் தமது கரங்களுக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் எந்தவோரு இயக்கமும் ஏனைய இனங்களைக் கையாள்வதில் மிகவும் கவனமாக நடந்து கொள்வதன் மூலமே போராட்டத்தின் நியாய எல்லைகளை விரிவாக்கி தமது வெற்றி நோக்கிய இலக்கை அடைந்து கொள்ள இயலும்.

இன்றைய யுத்தம் உடன் நிறுத்தப்படல் வேண்டம் என்பதும் ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ் முஸ்லிம் மலையக தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகள் சுயநிர்ணயத்தின் அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும் என்பதுமே மக்களின் விருப்பமாகும். அதனைச் செயல்படுத்தாது ராணுவ ஒடுக்குமுறையையும் அதன் படுகொலைகளையும் நியாயப் படுத்துவது பாசிசப்போக்கேயாகும். மக்கள் மீதான படுகொலைகள் எங்கிருந்து நிகழ்த்தப்பட்டாலும் அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்து நிற்பது இன வக்கிரப் போக்கு அற்ற மனித நேயம் படைத்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

• • • •

---

**சீன விடுதலையின்..**

6ம் பக்க தொடர்ச்சி.

தீர்க்கப்பட்டுள்ளன. சீன–இந்திய எல்லைப்பிரச்சினை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப் பட்டது. அதைச் சுமுகமாகப் பேசித் திர்க்கச் சீனா எடுத்த முயற்சிகளை நேரு அரசாங்கம் அலட்சியம் செய்த தோடு சீனாவுக்குப் பகைமையான முறையிலும் நடந்துகொண்ட காரணத்தாலேயே போர் மூண்டது. இந்தியப் படைகளை முறியடித்த சீனப்படைகள் தாம் கைப்பற்றிய பகுதிகளில் ஒரு சிறுபகுதி போக மிகுதியின்று தாமாகவே பின்வாங்கிய தோடு இன்று வரை பேச்சுவார்த்தைகளையே வலியுறுத்தி வந்துள்ளனர். அண்மை வரை இந்திய அரசுகள் இதற்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்தன.

15லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு பிரதேசம் சீனாவிடமிருந்து சென்ற நூற்றாண்டில் ரஷ்ய முடியாட்சியால் பறிக்கப்பட்டது. இவற்றை மீளவும் சுதந்திர சீனாவிடம் கையளிக்க வேண்டும் என்ற லெனினின் எண்ணம் பிரெஷ்னேவ் ஆட்சியின் போது முற்றாக நிராகரிக்கப் பட்டதோடு மேலும் எல்லைப் பிரச்சினைகள் கிளறிவிடப்பட்டன. 1969ல் நடந்த மோதலின் பின்னணியில் 1968ல் செக்கொஸ்லவாக்கியா மீது சோவியத் ஆக்கிகரமிப்பிற்கு எதிராகச் சீனா வன்மையாகக் கண்டித்ததும் உள்ளடங்கும். சோவியத் தூண்டுதலாலேயே வியற்னாம் காம்போஜத்தில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டது என்பதும் சீன வம்சாவழியினர் மீது அடக்குமுறையை ஏவி அகதிகளாக்கியது என்பதும் அரசியல் அவதானிகள் சிலரது கருத்து. லேதுவான் வியற்னாமில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு சீனா–வியற்னாம் உறவுகளைச் சீர்குலைக்கச் செய்த முயற்சிகள் 1975ல் தென் வியற்னாம் விடுதலைக்குப் பின்பு மேலும் மும்முரமானதும் குறிப்பிடத்தக்கது. இச்சூழ்நிலையில் நடந்த சீன–வியற்னாம் மோதல் மிகவும் வருந்தத்தக்கது. வியற்னாம் போரின போது அமெரிக்க எகாதிபத்தித்துக்கு எதிராக சீனாவே தென் வியற்னாம் மக்களுக்கு ஆயுதம் வழங்கியதும் சோவியத் யூனியன் வழங்க மறுத்ததும் ஒரு புறமிருக்க பழைய சீனக் சக்கரவர்த்திகளின் காலத்தில் வியற்னாமிய மக்களுக்கு இழைக்கபட்ட தவறுகள் பற்றிச் சீனக் கம்யூனிஸ்டுகள் தவறாது மனவருத்தம் தெரிவித்து வந்ததோடு வியற்னாமின் பூரண விடுதலையைத் தமது கடமையாகவும் கருதி வந்தனர்.

அயல் உறவுகளில் அரசு கட்சிகளுக்கிடையிலான உறவு விடயத்தில் சீனாவின் நிலைப்பாடு இன்னமும் சரியான ஒன்றாகவே இருந்த போதும் கட்சிகளிடையிலான உறவும் மக்களிடையிலான உறவும் 1976க்குப் பிறகு படிப்படியாகத் தரமிறங்கி விட்டன. அரசுகளிடை யிலான உறவு ராஜதந்திர மட்டத்தில் உள்ள அதே வேளை கட்சிகளுக்கிடையிலான உறவு அரசியல் மட்டத்தில் பேணப்பட்டது. அதை விட தேசிய விடுதலை முதலாக சமூக நீதிக்கான சகல போராட்டங்களையும் ஆதரிப்பதைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது கடமையாகக் கருதிவந்தது. பர்மிய, தாய்லாந்து, மலேசிய கம்யூனிஸ்ட் விடுதலைப் போராளிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நேரடி ஆதரவைப் பெற்றன. திமோரின் விடுதலை இயக்கம் சீன அரசாலும் 1975முதல் ஆதரிக்கப்பட்டது. (அப்போது சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஆக்கிரமிப்பாளனான இந்தோனீசிய ஆட்சியை கண்டிக்கத் தயங்கியதும் குறிப்பிடத்தக்கது). ஆபிரிக்க விடுதலை இயக்கங்கட்கு சீனா நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதும் பலஸ்தீன் விடுதலை இயக்கத்திற்கும் அமெரிக்க நீக்ரோக்களின் உரிமைப் போராட்டத்துக்கும் சீனாவின் ஆதரவு வரலாற்று முக்கியம் வாய்ந்தது.

எனினும் இன்றைய நிலை என்ன?

சீனா எந்த விடுதலை இயக்கத்திற்கும் நேரடி ஆதரவு தருவதில்லை. மாக்கிய லெனினியக் கட்சிகளுடன் இருந்த உறவு கைவிடப்பட்டுள்ளது. திரிபுவாதிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் புதிய தோழர்களாகி வருவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர வரலாற்றுக்கே பெரும் இழுக்கு.

'நான்கு சீர்திருத்தங்கள்' என்ற பேரில் நடைமுறையாகும் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் 'சீனப் பண்புகளையுடைய சோஷலிஸம்' என்றால் அந்த சோஷலிஸம் எந்த வகையில் சமூக ஜனநாயக வாதிகளின் சோஷலிஸத்திலிருந்து வேறுபட்டது என்பது ஒரு பயனுள்ள கேள்வி.

லாப நோக்குக்காக தொழிற்சாலைகள் முடப்படுகின்றன, ஆட்குறைப்பு நடக்கிறது. கிராமங்களில் லாப நோக்கு தனியார் உற்பத்தியை ஊக்குவித்து கூட்டு உழைப்பைப் பாழ்படுத்தியுள்ளது. பெண்கள் மீண்டும் பணம் படைத்த ஆண்களின் நுகர் பொருளாக மாற்றப்படுகின்றனர். லஞ்சம், களவு, பிற குற்றச் செயல்கள், விபசாரம், பாலியல் நோய்கள் ஆகியன பெருகுகின்றன. இது தான் அபிவிருத்திக்கான விலையா?

இன்றைய நவகொலனியத்தில் சீனாவையும் சீனப் பொருளாதாரத்தையும் கொடுமையான தாக்குதலிலிருந்து காக்க வேண்டிய தேவை மறுக்க இயலாதது. அதற்காகக் கொடுக்க வேண்டிய விலை சோஷலிஸம் என்றால் சீனாவை யாருக்காகக் காக்கிறோம் என்ற கேள்வி எழுகிறது.

இன்றைய சீனா நாங்கள் 25 ஆண்டுகள் முன்பு வரை அறிந்திருந்த நாடல்ல. அது புரட்சியின் நண்பனல்ல. அது பல சோஷலிஸ சாதனைகளை மறுதலித்துவிட்டது. ஆயினும் இன்னமும் சீனப் பொருளாதாரம் அரச உடைமையாகவும் மக்கள் உடைமையாகவுமே பெரும்பாலும் உள்ளது. அந்நிய முதலீட்டின் ஆதிக்கம் இன்னமும் வளரவில்லை. ஆயினும் சீன அரசின் இன்றைய போக்கு தொடர்ந்து வருமாயின் ஊழலும் சுயலாபமும் பெருகிக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சீன அரசினதும் அதிகாரத்தை அர்த்தமற்றதாக்க இடமுண்டு.

சீனா ஏகாதிபத்திய நெருக்குவாரங்கட்கு உட்படும் ஒரு நாடு என்பதால் அதன் ஏகாதிபத்திய விரோத நிலைப்பாடு இன்னும் நீண்ட காலத்துக்குத் தொடர இடமுண்டு. மறுபுறம் அண்மைக் காலத் தவறுகளின் காரணமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர வரலாற்றினதும் சோஷலிஸத்தினதும் சாதனைகளை மறுதலிக்க முடியாது. அதனினும் மேலாகச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருக்கிற மாக்ஸிய லெனினியச் சக்திகளை நாம் புறமொதுக்க முடியாது. உலகின் முற்போக்குச் சக்திகள், குறிப்பாக, மாக்ஸிய லெனினிய வாதிகள், சீனாவின் அண்மைக்காலத் தவறான போக்கைத் திருத்துவதற்கான முழுமையான ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

இன்றைய சீனாவின் பாதை சரியான சோஷலிஸப் பாதை என்பது வலது சந்தப்பவாதம். சீனாவை எதிரியாக நோக்குவது இடது தீவிரவாதம். சீனா பற்றிய ஒரு நிதானமான நிலைப்பாடும் பிரதான எதிரி ஏகாதிபத்தியமே என்ற தெளிவும் இல்லாது போனால் நாம் பெரும் தவறு செய்தோராவோம்.

சீனாவின் சாதனைகளினின்றும் தவறுகளினின்றும் நாம் கற்க வேண்டும். சீனாவின் விடுதலைப் போராட்ட வரலாறும், சோஷலிஸ நிர்மாணமும் வெகுஜன மார்க்கமும் திரிபு வாதத்துக்கு எதிரான போராட்டமும் மேலாதிக்கத்துக்கு எதிரான உறுதியான நிலைப்பாடும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்றென்றும் பெருமையுடன் நினைவுகூரத்தக்கன.

மக்கள் புரட்சியின் வரலாறு என்றென்றும் நேர்கோட்டில் போனதில்லை. ஆயினும் முடிவில் மக்கள் புரட்சியே வென்றுள்ளது. இந்த வரலாற்று உண்மையின் அடிப்படையில் சீனாவிலும் ஒடுக்கப்பட்ட உலக மக்கள் அனைவரதும் எதிர்காலத்தை உறுதியுடன் எதிர் நோக்குவோமாக.

**சி. ஜெகேந்திரன்**

---

**"ஒரு புரட்சி என்பது இராப்போசன விருந்தல்ல, ஒரு கட்டுரை எழுதுவது போலவல்ல அல்லது ஒரு படத்திற்கு வர்ணம் தீட்டுவதுமல்ல அல்லது ஒரு சேலைக்கு பூப்போடுவதுமல்ல. அது மிருதுவான, சாவகசமான, மென்மையான, பொறுமையான, காருண்யமான, மரியாதைக்குரிய, அடக்கமான, தயாள சிந்தையுடையதாக இருக்கவும் முடியாது.**

**ஒரு புரட்சி என்பது ஓர் ஆயுதக்கிளர்ச்சி. ஒரு வர்க்கம் வேறு ஒரு வர்க்கத்தை பலாத்காரமாய் தூக்கியெறிவதாகும்."**

*மா. ஓ-1927*

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கம் பக்கம்

ஐ.ஐ.ஒ

# சத்தங்களும் சகுனங்களும்

'இலங்கை மணித் திருநாட்டில்' நிலவுவது போன்ற சனநாயக பாணி ஆட்சி நடைபெறும் நாடுகளில், இடையிடையே மணியோசைகள் கேட்பது வழக்கம். மணியோசை கேட்டால், யானைகள் பின்னாலே வரத்தானே வேண்டும்? யானைகள் என்றதும் ஒன்றும் பிழையாக விளங்கிக்கொள்ள வேண்டாம். சிற்சில ஆண்டு இடைவெளிகளில் வரும் தேர்தல்களைத்தான் சொல்லுகிறோம்.

வரவுள்ள தேர்தல்களின் முன்னறிவிப் பாக, அந்த மணியோசைகளிடையே பல விதமான சத்தங்களும் எழுவதுண்டு. அப்படிப் பட்ட சத்தங்கள் இனிப்புப் பூசியவையாகவும், சனங்களின் மனத்தைத் தடவிக் கொடுப்பனவாகவும், மனமோகனமாக கனவுகளை எழுப்புவனவாகவும் இருப்பதில் புதுமை ஏதுமுண்டோ?

"இனி நமக்கொரு கவலையும் இல்லை என்றும் இன்பமே, என்றும் இன்பமே, என்றும் இன்பமே!" என்ற இராகத்திலும் மேற்படி சத்தங்கள் இருப்பது வழக்கம். "இன்றுடன் எங்கள் இன்னல்கள் தீர்ந்தன" என்று உறுதியுரைகளும் சத்தியங்களும் சபதங்களும் அறிக்கைகளும் ஆவணங்களும் இலங்கை எங்கும் தலை காட்ட ஆரம்பித்துவிட்டன. தீடீரென்று, எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் அன்பும் கருணையும் தாராள குணமும் பரிவும் பாசமும் மிகுதியாகப் பெருகிட ஆயத்தமாகின்றன – பாலும் தேனும் பாய்கின்றன என்பார்களே – அது போல!

எத்தனை நல்ல இனிய செய்திகள்! "நிவாரண நிறுத்தம் நீக்கப்பட்டது அரசுப் பிரதிநிதி அறிவிப்பு." "நாள் தோறும் மூன்று விமான சேவைகள்." "விரைவில் 24 மணி நேரமும் மின் வழங்க ஏற்பாடு" "வண்டிவாகனம் வருவிப்பதற்கு இனிப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை இல்லை"–நாள்தோறும் பத்திரிகைகள் புதுப்புதுத் தலைப்புகளுடன் விதம்விதமான புதினங்களை வெளியிடுகின்றன.

'ஓ! நிலைமைகள் நாளுக்கு நாள் திருந்தித் திருந்திக் கொண்டு வருகின்றன' என்று நினைத்து நாம் திருப்தி அடைய நினைக்கிறோம். நிவாரண நிறுத்தம் நீக்கப்படுகிறது என்று சந்தோசப்படும் நாம். நிவாரணம் ஏன் நிறுத்தப்பட்டது என்று கருதிப் பார்க்க முனைவதில்லை. முதலில் அந்த நிறுத்தத்தைச் செய்தவர்கள் யார்? என் நிறுத்தத்தைக் கொண்டு வந்தார்கள்? கொண்டு வந்த நிவாரண நிறுத்தத்தை விடாப்பிடியாக ஏன் தொடர்ந்தார்கள்? இவற்றைப் பற்றி எல்லாம் சிந்தித்தப் பார்ப்பதில்லை. இவை எல்லாவற்று க்கும் மேலாக, நிவாரணம் இங்குள்ள வர்களுக்கு ஏன் அவசியமாயிற்று? பிறர் கையை எதிர்பாராமல் தம் சொந்த உழைப்பினாலே தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் ஆற்றலை இந்தச் சமூகங்கள் ஏன் இழந்தன? எவ்வாறு இழந்தன? சுயமுயற்சிக்கு ஏற்ற வாய்ப்பு வசதிகளையும் சாதனங்களையும் வளங்களையும் வேண்டுமென்றே அழித்து நீர் மூலமாக்கியவர்கள் யார்? இப்படியெல்லாம் நம்மிற்பலர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. வாய்ச் சொற்களையும் வாக்குறுதி களையும் பொதிகளையும் பொட்டலங்களையும் எதிர்பார்த்து நாம் காலங்கடத்திக் கொண்டி ருக்கிறோம். எப்படியாவது காலந்தள்ளினால் சரி தான் என்ற மனப்பான்மை இறுகி மரத்துக் கட்டியாய்ப்போய்விட்டது, நம்மவரிடையே.

ஆள வருவோருக்கு, எங்களுடைய இந்த மனப்பான்மை நல்லாய் விளங்கும், அதனாலே தான் அவர்கள் பராக்குக் காட்டும் வித்தையை ஒரு தனிப்பெருங் கலையாகவே வளர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாராக்குக் காட்டுவதிலே தான் எத்தனை முறைகள். எத்தனை உபாயங்கள். எத்தனை தந்திர உத்திகள்!

முன்பெல்லாம் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மாத்திரம் தான் இருந்தன. இப்பொழுதும் இவை இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் விளம்பரங்கள், விழாக்கள் பாட்டுகள் கூத்துகள் என்று தொடர் பூடகங்கள் பல்கிப் பெருகியுள்ள காலம் அல்லவா இது? வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைச் செய்திகள், பரப்பளவாலும் 'பொருட்செறிவாலும்' தாக்கம் மிகுந்த பெரிய பெரிய விளம்பரங்கள் – எவற்றிலே தான் நாங்கள் குறை வைத்தோம்?

எங்கள் ஒலிப்பரப்புகளையே எடுத்துக்கொள்ளுங்கள். ஒலிபரப்பு நேரத்தில் செம்பாதிக்கு மேல், படப்பாட்டுகள், படப்பாட்டுகளைப் பயன்படுத்துவதிலே ஒரு பெரிய நன்மை உண்டு. அந்த நிகழ்ச்சியைத் திட்டமிடத் தேவையில்லை, அதற்கு அதிக முயற்சியும் தேவையில்லை. இதனாலே தயாரிப்பு வேலை இலகுவாகி விடுகிறது.

இனி, இந்த ஒலிபரப்பிலே இடம்பெறும் பாடல்கள் பல்வேறு நேயர்களின் சார்பிலே, பல்வேறு நேயர்கள் விரும்பிக்கேட்டுத்தான் ஒலிபரப்பாகின்றனவாம். இந்த நேயர் திருக்கூட்டம் தங்கள் பெயர்கள் வான் அலைகளிலே, மிதந்து வரவேண்டும் என்று விரும்பி. 'பயபக்தியுடன்' காத்திருந்து செவிமடுக்கும் தன்மை வாய்ந்தது. தனியாள் நிலைப்பட்ட தொடர்பொன்று தமக்கும் ஒலிபரப்பாளருக்கும் (அதாவது ஒலிபரப்பு நிலையத்துக்கும்) இடையே இருப்பதாக இந்தத் திருக்கூட்டம் காலகதியிலே நம்பத் தொடங்கிவிடுகிறது. அப்படி ஒரு நம்பிக்கை உண்டாகிவிட்டால், பிறகு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, எதை, வேண்டுமானாலும். எந்தத் துறையிலானாலும் 'நேயர்'களின் நெஞ்சங்களில் ஏற்றி விடலாம். இந்தப் பொதுசன உளவியல் மனோவசிய நுட்பங்களைச் செல்லுபடியாக்கக் கூடிய ஏற்புடைமையை – தயார் நிலையை–படிப்படியாக உண்டாக்கி விட்டால், தக்க தக்க தருணங்களில் அது கருத்துாட்டல்களுக்குப் பெரிதும் பயன்படுமல்லவா?

இவற்றை எல்லாம் நன்கறிந்த நிலையிலே தான், எங்கள் சனத்தொடர்பு ஊடகங்கள் செயற்படுகின்றன. உதாரணமாக ஒன்று: கோயிற் செய்திகளும் அறிவிப்புகளும். இப்பொழுதெல்லாம் குடாநாட்டிலே கோயில்கள் புதிதுபுதிதாகக் கட்டப்படுகின்றன. இராச கோபுரங்கள் வானளாவ எழுகின்றன. கும்பாபிசேகங்கள் நடக்கின்றன. குருக்கள்மார் கொடியேற்றுகிறார்கள். இந்த நிகழ்வுகளுக்கான அறிவிப்புகளை நிலையத்தாருக்குத் தெரிவித்து அவற்றை ஒலி பரப்பவிக்கலாம் ஒளிபரப்புவிக்கலாம். காட்சி வருணணைகளைக் செய்விக்கலாம். இந்த வாய்ப்புகள் எல்லாம் நம்மவர் சிலருக்கு 'ஆளுவோரின்' அன்பு வெளிப்பாடாகத் தோற்றுகின்றன. நம் மரபுகளுக்கும் பண்புகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் தனித் தன்மைகளுக்கும் ஆளுவோர் அருள் கனிந்து நீட்டும் சலுகைகளாக, ஒரு வகை போனசுகளாகவே, தெரிகின்றன என்று கருதவேண்டி உள்ளது.

நல்லூார்த் தீர்த்தக் கேணியிலே அவர்களின் 'ஹெலிக்கப்டர்' பதிந்து வந்து பூக்களை இறைக்கும் போது அதாவது பூமாரி பொழியும் போது பக்தகோடிகளின் அரோகரா முழக்கம் வானைப் பிளக்காவிட்டாலும், சில பத்து மீற்றர் உயரத்துக்காவது காற்றிலே எம்பி எழுகிறது. அந்தப் பூமாரியோடு புழுதியாகிய 'பூதுளியும்' கணிசமான அளவு கலந்திருப்பது பற்றி அன்பர்களும் அபிமானிகளும் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை.

அண்மையிலே மற்றுமொரு சுவாரசியமான சம்பவம், தென்மாரட்சிப் பகுதியிலிருந்து திவ்விய நாம சங்கீர்த்தனக் கூட்டமொன்று செம்மணிச் சந்தியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. 'யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கிறது' என்று ஒரு பிரபலமான வளைவு செம்மணிச் சந்தியருகில் இருக்கிறது. தெரியும் தானே! இந்த வளைவைக் கடந்து விட்டால். ஒன்றில் அரியாலை நோக்கிய தெருவழியே போக வேண்டும். 'அல்லது முத்திரைச் சந்தை நோக்கிய தெருவழியே போக வேண்டும். அந்தக் காலத்திலே அதாவது 1995 இற்கு முன்னர் இன்னும் சரியாய்ச் செல்லபோனால் 'இடம்பெயர்வுக்கு முன்' (இ.மு.) காலப்பகுதியிலெ நல்லூாக் கந்தசுவாமி கோயிலுக்குப் போக விரும்பும் எந்தத் திருக்கூட்டமும் முத்திரைச் சந்தை நோக்கிய தெருவழியே தான் போயிருக்கும் – ஆனால் இப்பொழுதெல்லாம் அந்தப் பிரதேசத்திற் காலடி எடுத்து வைப்பது பற்றி நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது. நாம் மேலே குறிப்பிட்ட அன்பர் திருக்கூட்டமும் செம்மணி – முத்திரைச் சந்தைப் பாதையாலே பயணிக்க நினைத்திருக்கவில்லை.

ஆனால், அன்று ஓர் அற்புதம் நடந்தது. அடைத்துக்கிடந்த பாதை வழிதிறந்து வரவேற்றது. ஒரு தடங்கலும் இல்லை. 'துாறாவாக' நல்லூர் செல்லும் பேறு கிடைத்தது. இது எவ்வாறு? வேறு ஒன்றும் இல்லை. இது தான் நடந்தது – நம்முடைய அன்பர் திருக்கூட்டம் செம்மணிச் சந்தியை அடைந்த போது அங்கு புதையல் தேடும் வேலை நடந்து கொண்டிருந்தது. அந்த அலுவலில் ஈடுபட்டிருந்த வர்களின் திருவுள்ளத்திலே – நல்ல வேளையாக பாடும் பணியே பணியாய்க் கொண்ட நமது திருக்கூட்டத்தினருக்குத் தடையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை.

காலம் எப்படி மாறிக்கொண்டு போகிறது! இனி எல்லாம் மெல்லமெல்லச் சரி வரும் என்ற எண்ணங்கூட நம்மவர் சிலரிடையே தோன்றக் கூடும். அது வெறும் ஆசையின் அடிப்படையில் எழுந்த ஏமாளித்தனமான எதிர்பார்ப்பாகத்தான் இருக்க முடியும். இந்தத் தெளிவு நமக்கு எப்போது உண்டாகுமோ!

தேர்தலுக்கு முந்திய மணியோசை களினிடையே இப்படிச் சில சத்தங்களும் சகுனங்களும் தோற்றப் பாடுகளும் தலைகாட்டுவது இயல்பு தான். அப்படி அல்லாமல் இருப்பதற்கு, நம் நாட்டில் இன்று நிலவுவது புதிய சனநாயகம் அல்லவே! ஏமாளித்தனமான எதிர்ப்பார்ப்புகளுக்குத் தீனி போடும் பழம் பாணித் தேர்தல்–சனநாயகம் தானே!

# நீலனைப் புனிதராக்கும் சேரன்

செப்டம்பர் மாத சரிநிகரில் வந்த இரங்கற் கட்டுரையில் நீலன் திருச்செல்வத்தை அரசியல் தரகர் என்ற மதிப்பிடுவது அவருடைய அரசியல் முக்கியத்தை மிகையாக எளிமைப்படுத்துவது என்று சேரன் எழுதியிருக்கிறார். நீலன் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குச் சட்டஅமைப்பின் அடிப்படையில் தீர்வைத் தேடியவர் என்பது முக்கியமானது என்றும் அவர் எழுதியிருக்கிறார். சரிநிகர் தன்னைத் தாக்கி எழுதியதை நிறுத்தும் படி நீலன் கேட்காததால் அவர் ஒரு ஜனநாயகவாதி என்றும் புகழப்பட்டிருக்கிறார்.

நீலன் எவ்வளவு பெரிய மேதை என்று எங்களுக்குத் தெரியாது போனாலும் சேரனுக்கும் செத்தபிறகு நீலன் புராணம் வாசிக்கிறவர் களுக்கும் தெரியும். என்றாலும் அவர் சட்ட ரீதியாக தீர்வு என்று தேடியது என்ன? தீர்வுப் பொதி என்ற பேரில் சந்திரிகா அரசாங்கத்தின் ஏமாற்று வேலைக்கு நியாயம் தேடுகிற காரியத்தை விட வேறென்னத்தை நீலன் செய்தார்? தமிழ் மக்களின் உரிமைகட்காகப் போராடுவதாக களத்தில் இறங்கி வீரமாகப் போராட வந்தவர்கள் இன்றைக்கு அரசாங்கத் தரப்பில் ஆயுதம் ஏந்துகிறார்கள். பாராளுமன்ற அரசியலில் இறங்கிய தமிழரசுக் கட்சிப் பரம்பரைக்காரர் 1977 முதல் 1983 வரை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடைய ஏமாற்றுக்களுக்குச் சப்பைக் கட்டுக் கட்டி வந்தார்கள். அந்தப் புத்தி இன்னமும் அவர்களை விட்டுப் போகவில்லை. இது தான் தமிழ்த் தேசிய அரசியலின் கதை.

சட்டப்புத்தகமும் கையுமாக அலைகிறதால் ஒரு அரசியல் தரகர் அரசியல் தரகராக இல்லாமல் போய் விடுவாரா? நீலனுடைய வேலைகளை ஆராய்ந்தால் அவருடைய அரசியலின். சாரம் தரகு வேலை ஒழிய வேறில்லை என்று தெளிவாகவே தெரியும். அதை 'ஆழமான பார்வை' என்ற பேரில் மூடிக்கட்டி நீலனுடைய சட்ட மேதாவித்தனத்தில் ஆறுதல் தேடுவது மலத்தில் சோறு பொறுக்குகிற வேலைதான்.

நீலன் கொலை மட்டுமில்லாமல் எல்லா அரசியல் கொலைகளும் கண்டிக்கப்பட வேண்டியவைகள் தான். துரோகிகளைத் தண்டிக்கிற பேரில் தண்டனையை வழங்கி நிறைவேற்றும் அதிகாரம் மக்களுடையது மட்டுமே. அரசியல் படுகொலைகள் மக்களின் நன்மைக்கு மாறானவை. மக்களால் ஏற்கப்படாதவை. நீலன் அரசியல் தரகர் என்பதால் அவருடைய கொலை சரியான ஒரு விசயமாகிவிடாது. படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் செய்கிற மோசடிகள் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. ஏனென்றால் மக்கள் அவர்களது அறிவை மதிக்கிறார்கள். அந்த அறிவு மக்களை ஏமாற்றவே பயன்படுகிறது என்றால் அந்த எமாற்று மிகவும் கொடுமையானது.

கதிர்காமர் போல நீலனும் இந்த அரசாங்கத்தின் இனவாத முகத்தை மூடிமறைக்க உதவிசெய்தவர். அரசாங்கப் படைகளின் பல்வேறு அட்டுழியங்கள் பற்றி நீலன் எப்போதாவது வாய்திறந்தாரா. செம்மணி விசயத்தில் அரசின் மெத்தனமான போக்குப் பற்றி என்ன செய்தார்? இப்படியான கேள்விகளின் பட்டியல் மிக நீளம்.

இந்தச் சட்டரீதியான காரியக்காரர் சந்திரிகா இனவாதமாக தென்னாபிரிக்காவில் பேசி இருக்கமாட்டார் என்று கடிதம் எழுதி இரா. சம்பந்தனின் பேரில் கள்ளக் கையொப்பமிட்ட கதையை இரண்டு வருடங்களுக்கு முன்பு பல பத்திரிகைகள் பிரசுரித்தன. அது அப்படியே அமுங்கிப் போய்விட்டது. இதுவும் அவருடைய சட்டரீதியான அணுகுமுறையில் அடங்குமா?

மக்களால் தெரிவு செய்யப்படாத மு.திருச்செல்வம் போலவே மகன் நீலனும் மக்களால் தெரிவு செய்யப் படாதவர், மக்கள் பற்றி அக்கறை மிகவும் குறைந்த தமிழ் அரசியல் வாதிகளில் ஒருவர் நீலன். அவருடைய அரசியல் உலகம் ஏ.சி அறைகளும் தொலைபேசிகளும் மின்மடல்களும் சூழ்ந்தது. அங்கு மக்களுக்கு இடம் இல்லை. மக்களை ஏய்க்கும் தலைவர்கட்கே அங்கே இடம் உண்டு.

நீலனுக்காகத் தமிழ் மக்கள் ஏன் அழவில்லை என்பது சேரனுக்கு விளங்கவில்லையா? தமிழ் மக்களுக்காக அவர் செய்தது என்ன என்ற கேள்விக்கு விடை தேடினால் ஒரு வேளை விளங்கும்.

நீலனின் கொலையைக் கண்டிக்க நீலனை ஒரு உயர்ந்த மனிதராகக் காட்ட வேண்டிய தேவை இல்லை. ஆழப் புதைக்கப்பட வேண்டியது நீலனின் அரசியலே ஒழிய நீலன் இல்லை. நீலனை உயர்த்துவதற்காகத் தமிழர்களை முட்டாள்களாக்கச் சேரன் முயற்சிக்க வேண்டாம்.

**க. துரைசாமி**

நன்றி - நூலகத்திட்டம்



# வடபுலத்து முஸ்லிம் மக்களின் துயர் மிகுந்த 9 ஆண்டுகள்

1990ம் ஆண்டு அக்டோபர் மாதக் கடைசி வாரம். வடபுலத்திற்கான பருவ மழைதொடங்கி கடுமையாகிக் கொண்டிருந்த நாட்கள். யாழ் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு செய்தி பரவிக் கொண்டிருந்தது. முஸ்லிம்களை புலிகள் குடா நாட்டை விட்டு வெளியேற்றப் போகிறார்களாம். அதனை நம்ப மறுத்து பலர் வெறும் வதந்தி என்றனர். புலிகள் அந்தளவுக்கு செல்லமாட்டார்கள் என்று சமாதானம் கூறிக் கொண்டவர்களும் இருந்தனர். ஆனால் இரண்டு நாட்களுக் கிடையில் அச் செய்தி உண்மை யாகி நடைமுறைப் படுத்தப்பட்டது. புலிகளின் ஒலிபெருக்கிகள் முஸ்லிம் மக்களின் உடனடி வெளியேற்றத்தை உறுதிப்படுத்திக் கொண்டன. முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஜின்னா மைதானத்திற்கு அனைவரும் வரவழைக்கப்பட்டனர். கடுமையான மிரட்டல் தொனியில் விரட்டப்படுவதற்கு ஆயத்தமாகு மாறு கேட்கப்பட்டனர். உடுப்புகள் சிலவும் சிறிதளவு பணமுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப் பட்டனர். அதனைத் தமது சோதனைகள் மூலம் உறுதி செய்து கொண்டபின் லொறிகள் பஸ்கள் மூலம் பெண்கள் வயோதிபர் நோயாளர்கள் சிறுவர்கள் உட்பட அனைவரும் ஏற்றி அனுப்பப்பட்டு வவுனியா எல்லையில் இறக்கிவிடப் பட்டனர். இவ்வாறு வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் பரந்து வாழ்ந்து வந்த எழுபத்தைந்து பகுதிகளில் இருந்து முஸ்லிம் மக்கள் ஒட்டுமொத்தமாக விரட்டப் பட்டனர். பலநூறு ஆண்டு களாக தமிழ் மக்களோடு பாரம்பரிய உறவுடன் வடக்கைத் தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் எந்தவொரு காரணமும் இன்றி வேரோடு பெயர்க்கப்பட்டது போன்று தூக்கி வீசப்பட்டனர்.

முஸ்லிம் மக்கள் தமக்குரிய பாரம்பரிய இருப்பிடங்கள் பொருளாதாரம் கல்வி மத கலாச்சார அடித்தளங்களுடன் தான் வடக்கில் பலநூறு வருடங்களால வாழ்ந்து வந்தவர்கள். அவர்களை இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் விரட்டித் தூக்கி வீசுவது என்பதை இதயமுள்ள எந்த மனிதராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வடக்கில் அவர்களுடன் ஒன்றிக் கலந்து வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் இந்த விரட்டலை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அன்றைய சூழலில் அந்த விரட்டலைத் தடுத்து நிறுத்தும் எத்தகைய ஆற்றலையும் வடபுலத்து மக்கள் கொண்டிருக்க வில்லை. யாவற்றையும் ஆயுதங்களே தீர்மானிப்வையாக இருந்தது. ஆனால் 1995 நவம்பரில் கடும் மழையிலும் குளிரிலும் தென்மராட்சி நோக்கி இரவும் பகலும் இடம் பெயர்ந்து நடந்த போது முஸ்லிம் சகோதரர்கள் எக்கதி பட்டிருப்பார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் மனிதரும் பட்டுணர்வாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இவ்வாறு வடபுலத்திலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட வரலாற்று நிகழ்வு மிகவும் கொடுமையானது. அதேவேளை இது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு என்றும் போக்கிக் கொள்ள முடியாத பாரிய கறையாகவும் பழிநிகழ்வாகவும் ஆகிக் கொண்டது. அவ்வாறு முஸ்லிம் மக்கள் துரத்தப் பட்டமைக்கு இன்றுவரை ஏற்றுக் கொள்ளக் கூடிய எந்தவொரு காரணத்தையும் புலிகள் இயக்கம் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முஸ்லிம் மக்கள் வட புலத்தின் சகல மாவட்டங்களில் இருந்தும் விரட்டப்பட்டதன் ஒன்பதாவது ஆண்டு நிறைவு இவ் ஒக்ரோபர் மாதத்தில் நிறைவு பெறுகிறது. இந்த ஒன்பது ஆண்டுகளில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வடபுலத்து



முஸ்லிம்கள் அகதி வாழ்வின் சகல கொடுமைகளையும் அனுபவித்த மக்களாகவே வாழ்ந்த வருகின்றனர். புத்தளம், வவுனியா, அனுராதபுரம், பொல்காவலை, கொழும்பு ஆகிய பகுதிகளில் பெரும்பாலான முஸ்லிம்கள் பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் வாழ்வைக் கழிக்கின்றனர். இருப்பிடம், தொழில், வருமானம், கல்வி, சுகாதாரம், கலாச்சாரத் தனித்துவம் போன்றவற்றில் அவர்கள் இரண்டாம் மூன்றாம் தர நிலையிலேயே வாழ வேண்டி யுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களது வாழ்க்கையில் மிகத் துயரமானது இடம் பெயர்ந்து பிறர் தயவில் வாழும் அகதி வாழ்க்கை தான். தமக்கு சொந்த இருப்பிடம் தொழில் வருமானம் கல்வி போன்ற சகல வற்றையும் இழந்து மற்றோர் பிரதேசத்தில் வாழ்வதைப் போன்ற கொடுமை வேறொன்றும் இல்லை.

~ அ. பூபதி ~

இவ்வளவிற்குப் பின்பும் வடபுலத்து முஸ்லிம் மக்கள் தமது தாயகம் வடக்கு என்ற உறுதியுடனேயே இருந்து வருகின்றனர். சில முஸ்லிம் தலைவர்களும் அவர்களது அமைப்புகளும் தத் தமது உள்நோக்க அடிப்படையில் வடக்கு முஸ்லிம்களை கிழக்கில் நிரந்தரப்படுத்தி விட முற்பட்டுள்ளமையை அவர்கள் நிராகரித்து நிற்கின்றனர். தமது வடபுலத்து சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்களோடு பலநூறு வருடங்களாக எவ்வித முரண்பாடும் இன்றி ஐக்கியமாக வாழ்ந்து வந்த கடந்த காலத்தை முஸ்லிம்கள் நினைவு கூர்கின்றார்கள். எதிர்காலத்திலும் அவ்வாறு வாழமுடியும் என நம்புகின்றார்கள்.

ஆனால் அவர்கள் அவ்வாறு தமது சொந்தப் பூமிக்குத் திரும்பிச் செல்வதை யுத்தம் தடுக்கின்றது. எவ்வித உத்தரவாதமும், பாதுகாப்பும், உரிய இழப்பீடுகளும், மீள வாழ்வதற்கான அடிப்படைகளும் அவர்களுக்குத் தேவைப் படுகின்றன. விடுதலைப் புலிகள் தாம் செய்த தவறுக்கு உரிய மன்னிப்பு சமிக்கையை ஏற்கனவே வடபுல முஸ்லிம்களுக்கு காட்டியுள்ளனர். ஆனால் அரசாங்கம் வடபுல முஸ்லிம்கள் பற்றி அக்கறைப் படுவதாக இல்லை. வழங்கி வந்த நிவாரணங்களைப் பறித்துக் கொள்வதில் இருக்கும் குறியும் அக்கறையும் அவர்களது மீளக் குடியமர்வில் காட்டத்தயாராக இல்லை. அரசியல் அங்கம் பெறும் முஸ்லிம் காங்கிரசும் வடபுலத்து முஸ்லிம்கள் மீது அக்கறை கொள்வதாக இல்லை. பிரதேச நலன்களையும் வாக்கு வங்கியையும் இவர்கள் முதன்மைப் படுத்துகிறார்களே தவிர பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் என்று பார்ப்பதற்கு முடியவில்லை. அழகான அறிக்கைகள் அவர்களால் விட்டுக்கொள்ள முடியும். ஆனால் நடைமுறைதான் காணப்படவில்லை.

எனவே அநியாயமாக விரட்டப்பட்ட வடபுலத்து முஸ்லிம் மக்களை தமது சொந்த மண்ணிற்கு திரும்பிச் சென்று இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள ஏற்ற சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். அதற்கான முயற்சியில் நிதானமாக ஈடுபட்டுவரும் நேர்மையான முஸ்லிம் அமைப்புகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

# யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றம் ஒரு ‘துரதிஷ்ட’ நிகழ்வா?

யாழ் குடாநாட்டு முஸ்லிம்கள் மொழியால் – தமிழைப் பேசியது மட்டுமன்றி தமிழ் கலாச்சார பாரம்பரியங்களுடனும் ஒன்றி இருந்தார்கள் என்ற உண்மை புறக் கணிக்கப்படமுடியாது. பாரம்பரிய பிரதேசம், தமிழ் பேசும் மக்களுக்கான வாழ்விடம் யாழ்ப்பாணமும் ஒன்று எனும்போது முஸ்லிம்கள் பிரித்துப் பார்க்கப் பட முடியாதவர்கள். யாழ் முஸ்லிம்கள் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த வியாபார நோக்குடை யோராகவும், படித்த புத்திஜீவி களாகவும், தொழிலாளர்வர்க்கத்துடன் கூடிய அன்றாட உழைப்பாளி களாகவும் வாழ்ந்து வந்தவர்களே. ஆண்களோடு பெண்களும் கல்வியில் சமமான கவனம் காட்டியவர்களே. அவர்களின் சிந்தனைகள் தாய் மொழியாம் தமிழில் கற்ற கல்வியின் அடிப்படையிலும், சமய அனுஷ் டானங்களை தமிழ் மொழியிலேயே கொண்டிருந்தனர்.

பெரும்பான்மை அரசு அதிகாரம் தமிழ் மொழியைப் புறக்கணித்தும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஒடுக்கியதும் அதன் பாதிப்பு முஸ்லிம்களை நாடு முழுவதிலும் பின்னுக்கு தள்ளியதை யாவரும் உணர்வர். குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். காரணம், அவர்களுக்கு சிங்கள மொழியில் சிறிதளவேனும் பரிச்சய மில்லாததே.

சைவ, கத்தோலிக்க பாடசாலைகளில் பயின்ற முஸ்லிம்கள் 70க்கு பின்தான் முஸ்லிம் பாடசாலைகளென உயர்தர வகுப்புகள் உள்ளடக்கிய இரு கல்லூரிகளைப் பெற்றனர். அங்கேயும் தமிழ் மொழியில் போதனாமொழி என்ற அடிப்படையிலேயே செயல்பட்டது. முஸ்லிம்கள் அவர்களின் சனத் செறிவுக்கேற்ப யாழ் மாநகர சபை எல்லைக்குள் இரு அங்கத்த வரை தெரிவு செய்யும் வாய்ப்புள்ள வட்டாரங்களை பெற்றிருந்தனர். அவர்களும் கட்சி சார்பின்றி சுயேச்சையாகவே செயல் பட்டனர். இருந்தாலும் பாராளுமன்ற தேர்தல் களில் பிரதேசக் கட்சிகளை ஆதரித்ததும் உண்டு. முதல் முஸ்லிம் மேயரை தெரிவு செய்ய உதவியமைக்காக கம்யூனிஸ்ட் கட்சியின் கார்த்திகேசன் மாஸ்டரை



முஸ்லிம்கள் 1956 பாராளுமன்றத் தேர்தலில் கணிசமாக ஆதரித்து வாக்குகளையும் பெற்றுக் கொடுத் தனர். முஸ்லிம்கள் அவருக்கு காட்டிய நன்றி உணர்வே. அதே போன்ற ஒரு தமிழ் அபிமான உணர்வுடன் பேரினவாத அரசின் தமிழ் விரோத போக்குக்கு எதிராக தமிழ் கட்சிகளுடன் ஒத்துழைத்த வரலாறும் உண்டு. உதாரணமாக. சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முழுமையான முஸ்லிம் மக்களும் பங்காற்றினர்.

~ எஸ். இர்பான் ~

முஸ்லிம்கள் சுதந்திர இலங்கைக்கு முன் யாழ் குடாநாட்டில் பரவலாக வாழ்ந்த காலமும் உண்டு. காலத்துக்கு காலம் இடம் பெயர்ந்த வரலாறுகளும் உண்டு. வியாபார நோக்கில் வசித்த பின் அவ்விடங் களை விட்டகர்ந்த நிகழ்வுகளும் உண்டு. இன்றும் பல பிரதேசங்களின் காணி உறுதிகள் (தாய்பிரதி) சோனகர் என அழைக்கபடும் முஸ்லிம்களின் பெயரில் உள்ளது.

முஸ்லிம்கள் ஏன் சந்தேகத்துக்கு உரியவர்களாக கணிக்கப்பட்டனர்? என்பதற்கு இதுநாள் வரை விளக்கம் இல்லை!

முஸ்லிம்களில் முற்போக்கான சிந்தனையாளர்களும், எழுத்தாளர், களும் புத்திஜீவிகளும் தொழிலாள வர்க்க ஆதரவுடையோரும் நிறைந்து காணப்பட்டனர். கண் மூடித்தனமாக எந்தத் கொள்கை களையும் ஆதரிக்காத போக்குடை யோராகவும் இருந்தனர். அரசியலிலும் தெளிவான சிந்தனைகள் இருந்தன. அடக்கி ஒடுக்கப்படும் எல்லாவித அடக்கு முறைகளுக்குமெதிராக குரல் கொடுத்தவர்கள். அவர்களின் குரல் பிற்போக்காளர்களுக்கு எதிராக இருந்தன. தேசிய மட்டத்தில் பேரினவாதத்துக்கு எதிராகவும் குடாநாட்டுக்குள் தமிழ் மக்களின் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த போராட்டத்திலும் தார்மிக ஆதரவு வழங்கப்பட்டது என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. சர்வதேச மட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், வியட்னாம் யுத்தத்தில் அமெரிக்காவின் அடாவடித்தனத்தை எதிர்த்த ஆர்ப் பாட்டங்களிலும், இஸ்ரேல் சியோனிச ஆக்கிரமிப்புக்கு எதிரான குரலாகவும் முஸ்லிம்கள் ஒலித்தனர். இந்த உணர்வுதான் தமிழ் பேசும் மக்களின் முற்போக்கான சிந்தனைகளுடன் ஒன்றினைத்தது. அடக்கி ஒடுக்கப் பட்ட ஒரு சமூகமாக இருந்த சிறுபான்மை இனம் முரண்பட்டுக் கொள்ள பிற்போக்கு சக்திகள் அமெரிக்க – சியோனிச சாயலுடைய சதிக்கு உட்பட்டு இந்த முஸ்லிம் களை பழிவாங்கினார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

சிங்கள பேரின வாதத்தடன் ஒத்துழைப்பார்கள் என சந்தேகம் இருந்திருக்குமாயின் சிங்கள மக்களுடன் மத நல்லிணக்கமுள்ள கத்தோலிக்க கிறிஸ்துவ மக்களுடனும் முரண்பட்டிருக்க வேண்டும். அவர்களும் சந்தேகத் துக்கு உரியவராக கருதப்பட் டிருப்பர்? முஸ்லிம்கள் தனித்துவமான எல்லாவித அடக்கு முறைக்கும் எதிராக ஒத்துழைப்பு நல்கியவர்கள் என்பதை மறந்து அவர்களை மட்டும் வெளியேற்றியது சரியா?

யாழ் முஸ்லிம்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்களே. அவர்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு அளப்பரியது. இன்றும் முஸ்லிம்களை தமிழ் நாட்டில் ‘இஸ்லாமியத் தமிழர்’ என்றுதான் அழைக்கிறார்கள். அவர்கள் தமிழ்பேசும் மக்களாக அன்யோன்யமாக வாழ்கிறார்கள். யாழ் முஸ்லிம்கள் கூட இந்துசமய கலாச்சார நிகழ்வுகளில் பாடசாலை மட்டத்திலும் அயலூர் திருவிழாக்களிலும் கலந்து கண்ணியப் படுத்துகின்றனர். திருமணங்களில் கலந்து கொள்கின்றனர். மத சடங்குகளை மதிக்கின்றனர். யாழில் ஐதுறூஸ் எனும் தர்மவான் இந்துக் கோயிலுக்கு மணி அன்பளிப்பு செய்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டலாம். முஸ்லிம்களின் திருமணத்தில் ‘சவடி’ என்ற சம்பிரதாய மாலை இந்துக்களின் ‘தாலி’ என்ற சொல்லையே குறிக்கின்றது. முஸ்லிம்களும் நேரம் பார்த்து அதை மணமகளின் கழுத்தில் மணமகன் அணிவிப்பார். இதுபோன்ற

தொடர்ச்சி 11ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் தேசிய வாதத்தை புதிய நோக்கில் பார்க்க வேண்டும்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தமிழ் தேசியவாத சக்திகளுக்கு மட்டுமே சொந்தமானது என்று மாக்சிஸ லெனினிஸ வாதிகளும் இடதுசாரிகளும் இனியும் ஒதுங்கி இருந்து விட முடியாது: அப்போராட்டத் துக்கு ஆதரவளிப்பதாகக் கூறிக்கொண்டு தொடர்ந்தும் பார்வையாளர்களாக இருக்க முடியாது. அதே போன்று மாக்சிஸ லெனினிஸ சக்திகளையும் நேர்மையான இடதுசாரி சக்திகளையும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிரானவர்களாகக் கொள்ளும் தமிழ் தேசியவாதிகளின் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். பேரினவாத ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டத்தில் நேர்மையான தமிழ் தேசியவாத சக்திகளும் மாக்சிஸ லெனினிஸ சக்திகளும் நேர்மையான இடதுசாரிகளும் சினேக பூர்வமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய வர்லாற்றுத் தேவையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா செந்திவேல் பேராசிரியர் சி.சிவசேகரத்தின் தேசியவாதமும் தமிழர் விடுதலையும் என்ற நூல் மீது ஆய்வுரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

புதிய பூமி வெளியீட்டகம் வெளியிட்டுள்ள இந்நூலை சமூக அரசியல் ஆய்வு நிலையம் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடந்த 16-10-96 சனிக் கிழமை வெளியீட்டு நிகழ்ச்சியை நடாத்தியது.

சமூக அரசியல் ஆய்வு நிலையத்தின் தலைவர்களில் ஒருவரான சிறீ மனோகரன் தலைமையில் நடை பெற்ற மேற்படி நூல் வெறியீட்டு நிகழ்ச்சியில் செந்திவேல் தொடர்ந்து ஆய்வுரையாற்றும் போது குறிப்பிட்டதாவது.

## நூல் வெளியீட்டு ஆய்வுரையில் தோழர் செந்தில்

மாக்சிஸத்தை வறட்டு சூத்திரமாக கொண்டவர்கள் சோஸலிஸ போராட்டம் வெற்றிகண்ட பிறகுதான் இனமுரண்பாடு உட்பட எல்லாம் தீர்க்கப்பட முடியும் என்று கூறிக் கொண்டு கண்ணெதிரே நடக்கும் ஒடுக்குமுறைகளை பார்த்துக் கொண்டு சும்மா இருப்பர். மறுபுறத்தில் தேசியவாதப் போராட்டம் வெற்றியடைந்தவுடன் எல்லா முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்று தேசியவாதிகள் கூறுவர். இந்த இரண்டு நிலைப்பாடுகளும் சமூகத்திலுள்ள அனைத்து முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கான அணுகுமுறைகளாக இருக்க முடியாது.

சமூகத்தில் காணப்படும் அனைத்து முரண்பாடுகளும் தேசியவாதத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட்ட முடியாது. அந்த வரையறையை முன்வைக்கும் அதேவேளை பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்தில் தமிழ் தேசியவாத சக்திகளே முதன்மைப் பாத்திரத்தை வகிக்கின்றன என்பதை மறுக்க முடியாது. மாக்சிஸ லெனினிஸ வாதிகள் கடந்த காலங்களில் போன்று தமிழ் தேசிய வாதத்திற்கு நேர் எதிரான நிலைப்பாட்டை தற்போதைய நிலையில் எடுக்க முடியாது. அவர்கள் அப்போராட்டத்தில் பங்காளிகளாவது பற்றிய நிலைப் பாட்டையே எடுத்தல் வேண்டும்.

தமிழ் தேசியவாதம் யாழ்ப்பாண மேட்டுக்குடியினரின் பிரசவமாகவே இருந்தது. அடக்கப்படுகின்ற ஒரு தேசிய இனத்தின் அடிப்படைகளிலிருந்தன்றி ஆளும்வர்க்க மனப்பான்மையிலேயே அது பிரசவமானது. அது முழுமையாக இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் அரவணைக்காதது மட்டுமன்றி மலையகத்தமிழ் மக்கள் முஸ்லிம் மக்கள் என்போரையும் அரைவணைக்கவில்லை. சிங்கள மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதில் எவ்வித அக்கறையும் கொள்ளவே இல்லை. அந்தச் சூழ்நிலையில் மாக்சிஸ லெனினிஸ வாதிகளால் தமிழ்த் தேசிய வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை: அதனை தெரிவிக்க வேண்டிய வர்க்கரீதியான நியாயம் அவர்களுக்கு இருந்ததை மறுக்க முடியாது.

சிங்கள தேசியவாதம், சிங்கள இனவாதமாக மாற்றப்பட்டு, பேரினவாதமாக நிறுவனப்படுத்தப் பட்டு தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக இன அழிப்பு யத்தம் புரியப் படுகின்ற சமகாலச் சூழ்நிலையில் தமிழ் தேசிய வாதத்தின் குறைபாடுகள், தவறுகள், இயலாமை என்பவற்றுக்கு அப்பால் அதனை புதிய நோக்கில் அணுகவேண்டிய சூழ்நிலை மாக்சிஸ லெனினிஸ வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. 1983 இற்கு பிறகு தமிழ் இளைஞர்களின் கைகளுக்கு தமிழ் தேசிய வாதம் சென்றடைந்த பிறகும் தவறுகள் இருந்த போதும் பழைய நிலையிலேயே தமிழ் தேசிய வாதத்தை அணுகுவது சரியான மாக்சிஸ அணுகுமுறையாக இருக்கமுடியாது. அடக்கு முறையாளர்களுக்கு எதிராக இருக்க வேண்டியதே மாக்சிஸ - லெனினிஸ வாதிகளின்

தொடர்ச்சி 12ம் பக்கம்...

## அமைச்சர் அஷ்ரப்பின் அரசியல்

அண்மைக்காலமாகத் தன்னை அதிக விளம்பரத்திற்கு உள்ளாக்கி வரும் ஒரு அரசியல் வாதியாக அமைச்சர் அஷ்ரப் தன்னை நிலை நாட்டி வருகிறார். ஐந்து ஆண்டுகளாக அமைச்சர் பதவி பெற்று அரசாங்கத்தின் பங்காளயாக இருந்து வருபவர். அதன் இறுதிக் காலத்தில் சலசலப்புக் காட்டுவதில் முனைப்பாக காணப்படுகின்றார். அண்மையில் அரசாங்க அமைச்சர்கள் சிலருடன் சொற்போர் மூலம் முரண்பட்டார். அதே வேளை ஜனாதிபதியைப் புகழ்ந்து தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி வருகிறார். முஸ்லிம் மக்களை மட்டுமன்றி சிங்கள தமிழ் மக்களையும் இணைத்து ஒரு அரசியல் சூழலை தோற்றுவிக்கலாம் எனக் கனவு கண்டுவருகின்றார். அந்தக் கனவை நனைவாக்க தேசிய ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி அதில் முஸ்லிம் - தமிழ் - சிங்களவர்கள் என இணைத்துக் காட்ட முற்பட்டுள்ளார். குறிப்பாகத் தனது நிகழ்ச்சிகளில் சர்வமதத் தலைவர்களையும் முன்னுக்கு இருத்தி ஐக்கியத்தை ஒட்டிக் காட்டுவார். அண்மையில் தனது கவிதை நூல் வெளியிட்டின் ஆரம்ப நிகழ்வாக திருக்குர் ஆன் ஓதி ஆரம்பிக்க சபையில் எல்லோரும் எழுந்து நின்றனர். ஆனால் பௌத்த மத பிக்குகள் மட்டும் எழும்பாது உட்காந்திருந்தனர். இத்தகைய பேரினவாதச் சூழலில் அமைச்சரின் அரசியல் எப்படி முன்னே செல்லமுடியும். அமைச்சர் எவ்வளவிற்கு ஐக்கியம் விமோசனம் பேசினாலும் வர்க்க நிலைப்பாடு என்று ஒன்று உண்டு. அதனை தெளிவாகக் காண இயலும். 'பொலிசாரின் துப்பாக்கிச் தேங்காய் துருவ அல்ல. என்று அக்கரைப் பற்று துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி ஒன்று முஸ்லிம் இளைஞர்களின் காயங்களை அலட்சியப் படுத்திய அமைச்சர் ஆளும் வர்க்கப் பிரதிநிதியே அன்றி அனைத்து முஸ்லிம்களின் தலைவராக இருக்க முடியாது. அமைச்சர் அஷ்ரப் மதத்தால் முஸ்லீமே தவிர வர்க்கத்தால் வசதி சொத்து சுகம் படைத்த முஸ்லீம்களின் பிரதிநிதி மட்டுமே. தொண்டமான் அடியொற்றி நிற்கும் அமைச்சர் அஷ்ரப் பல பத்தடி முன்னே பாய்ந்து அரசியல் செய்வதில் அக்கறையாக இருக்கிறார். சாதாரண உழைக்கும் முஸ்லீம் மக்கள் இவற்றை நன்கு உற்று அவதானித்து வருகின்றனர். அதன் விளைவு ஆங்காங்கே அதிருப்தி கண்டனம் எதிர்ப்புகள் எனக் கிளம்ப ஆரம்பித்துள்ளமையைக் காண முடிகிறது.

எஸ். எஸ்.

### அனுராதபுரம்....

4ம் பக்க தொடர்ச்சி...

ரூபாவை இரண்டு வாரங்களில் சம்பாதிப்பது உண்டு.

அனுராதபுரத்தில் சுமார் நாற்பது ஹொட்டல்கள் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளன. சகல வசதிகளுமுள்ள வீடுகள் மாதம் ஒன்றிற்கு 10 இருந்து 20 ஆயிரம் ரூபாய் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

ஒரு ஹொட்டேலுக்கு அருகில் உள்ள ஒரு இலைப்பாறிய அதிபர் திருமதி நந்தா குனத்திலகாவிடம் இதுபற்றிக் கேட்டபோது மிகுந்த கோபத்துடன் இது ஹோடேல் அல்ல விபசார விடுதி என்றார். இளம் தலைமுறையினரை பாதிக்கும் ஒரு சாபக்கேடு என்றும் சிறு பிள்ளைகளுக்கு முன்னாலேயே இவற்றையெல்லாம் பேச வேண்டி நிலையில் உள்ளதாக கூறிக் கவலைப்பட்டார்.

இந்த வியாபாரத்தின் தரகர்கள் ஓட்டோ சாரதிகள். இளைஞர்களுக்கு விடுதிகளை கண்டுபிடிக்க இவர்கள் உதவுவார்கள். ஒரு சோடியை ஒரு விடுதிக்கு கொண்டு வந்தால் விடுதிச் சொந்தக்காரர் அந்த ஓட்டோ சாரதிக்கு 150 ரூபா அளவில் கொடுப்பார். தூரத்தைப் பொறுத்து இந்தக் கொடுப்பனவு வேறுபடும். விடுதிக்கு வந்த சோடியிடமிருந்தும் ஆணிடமிருந்தும் ஏதோ கிடைக்கும்.

அனுராதபுரம் ஆஸ்பத்திரியின் 11ம் அறை என்றால் பாலியல் தொற்று நோய் சம்பந்தப்பட்டது என்று யாவருக்கும் தெரியும்.

இந்த கிளினிக்கிற்கு வருகிற ஆண்களில் 70லூமானவர்கள் இராணுவத்தின் கீழ்மட்டத்தினர் என்று இந்தப் பகுதியின் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இத்தகைய பாலியல் தொழிலில் ஈடுபட்டுவரும் பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியதாகும். அவர்களின் வறுமை வேலையின்மை என்ற காரணங்களே கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு துரத்துகின்றன. அதிலும் யுத்தத்தின் மூலம் முக்கிய ராணுவ நடமாட்டப் பகுதியாக விளங்கும் அனுராதபுரம் இத் தொழிலுக்கு மிகமிக வசதியான ஒரு மாறியுள்ளது. இங்கே ராணுவ உயர் அதிகாரிகள் உயர்ந்த இடங்களில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சாதாரண இராணுத்தினரே இதில் சம்பந்தப்படுகின்றனர். இந்த அவலத்தொழிலில் பாதிக்கப்படுவது சாராதண கிராமப்புற சிங்கள இளைஞர் யுவதிகளாகவே உள்ளனர். யுத்தம் எங்கெங்கே தமது கோரக் கரங்களை நீட்டி அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

### யாழ் முஸ்லிம்கள்.

10ம் பக்க தொடர்ச்சி...

எத்தனையோ சடங்குகளும் சம்பிரதாயங்களும் பொதுவாக உள்ளன.

இவையெல்லாம் 'திரதிஷ்டமாக' நடந்த வெளியேற்ற நிகழ்வுகளால் மறக்கடிக்கப்படமுடியுமா? காலங் கடந்து சொல்லப்பட்ட வார்த்தை முஸ்லிம்கள் வெளியேற்றம் 'துரதிஷ்டமாக' நிகழ்ந்து விட்டதென்பதே. துரதிஷ்டமாக நடந்ததென்று விடுதலைப் புலிகள் கூறினாலும் இது அரசியல் உள்நோக்கம் கொண்ட சதி என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் அந்த இயக்கம் அதிஷ்டத்தில் தங்கி இருக்க முடியாது. நியாயமான அடக்கு முறைக்கு எதிரான போாராட்டத்தில் எல்லாவித சிநேகபூர்வ முரண்பாடுகளையும் களைந்து நேச சக்திகளை ஒருங்கிணைக்க வேண்டும். அப்படியின்றி போராட்டத்தை, முன்னெடுப்பது கஷ்டமானகாரியம் என்பதை உணரவேண்டும். கீழ்மட்டம் செய்யும் தவறுகளை ஒரு ராணுவ அமைப்பு பேரினவாத ராணுவ அமைப்பு செய்வதுபோல் பூசிமெழுக முடியாது. ஆக தவறு எங்கிருந்து வந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு தசாப்த அகதிவாழ்வில் அரசியல் ஆதாயம் தேட பேரினவாதசக்திகளும் அவர்களுக்கு ஆலவட்டம் பிடிப்போரும் முனைந்து நிற்கின்றனர். பாராளுமன்ற ஆசனங்களுக்காக வாக்கு வங்கியை வளர்க்க பல முகாம்கள். இனப்பிரச்சினையின் ஆணிவேர் மொழிப்பிரச்சினைதான். அதன் பிறகு வந்தது ஏனையவை ஆகவே தமிழ்பேசும் மக்களை ஓரணிக்கு திரட்டுவது அவசியம்.

கலாச்சார மத ஒற்றுமைகளை பேணிக்காக்க இந்து, பௌத்த, கத்தோலிக்க மக்களுக்கிடையில் உடன்பாடு காண முடியும். ஏனெனில் அவர்கள் இன மத மொழி போன்றவற்றால் ஒருவருக்கொருவர் இணக்கம் காணக்கூடியயவர்களே. முஸ்லிம்கள் தனத்துவமானவராயினும் தமிழ், சிங்கள மொழி பிரச்சின எதுவுமே இல்லை. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற எண்ணம் பேரினவாதத்துக்கு அரசியல் சாயம் பூசப்பட்டு பிளவுபட்டு பாராளுமன்ற ஆசனங்களுக்காக அழிவு வேலையில் ஈடுபட்டுள்ளது. யுத்தம் அரசியலாக்கப்பட்டு இரத்தக் காடாக நாட்டை மாற்றியுள்ளது. மதவாதிகள் பிளவுபட்டு பேசி வருவதும் அவ்வப்போது அரசியல் மேடைகளில் ஐக்கியம் போன்று காட்சி அளிப்பதும் கேலிக்கூத்தாகி விட்டது. அவர்கள் தீர்வுக்கான வழி வகைகளில் ஆர்வம் காட்ட ஒன்றுபடுவதாக தெரியவில்லை. யுத்தம் நிறுத்தப்பட்டு உடனடியாக பேசவிளைய வேண்டும்.

### பதுளை பாட....

5ம் பக்க தொடர்ச்சி..

வர்க்கத்தினர் முஸ்லிம் மக்களை அடக்குவதற்கு சமமானதாக காட்டிக் கொண்டு, அவ்வாறான அடக்குமுறைப்பற்றி முஸ்லிம் மக்களுக்கு கல்வியூட்டுவது போன்று நடவடிக்கைகளை எடுத்ததை ஏற்றுக் கொள்ள முடியாது. பாடசாலை விவகாரத்தை இரண்டு சமூகங்களுக்கிடையேயான தீர்க்கப் படகூடிய சினேக முரண்பாடாக அனுகாமை தவறாகும்.

அப்பாடசாலை. அதிபரின் நிலைப்பாட்டை எடுத்தவர்களும் அப்பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் செல்வாக்குடையவர்களாக இருந்தவர்களும் இந்து அகங்காபைப் போக்கில் நடந்துள்ளதாக தெரிகிறது. முன்னர் தமிழ் பாடசாலையாக இருந்த முஸ்லிம் பாடசாலையாக மாற்றப்பட்ட ஹாலி எலவிலுள்ள ஒரு பாடசாலையில் இந்து மாணவிகள் பட்டியல் படுத்தப்பட்டு பர்தா அணிவிக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அப்பிரச்சினையையும் 'பதுளை பர்தா' விடயத்தை இனைத்து விளக்கமளிக்கப்பட்டமையால் இந்து மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. பர்தா அணியும் உரிமை மறுக்கப்பட்ட ஆசிரியைகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறலுக்கு எதிரான மனுக்களை தாக்கல் செய்ததை அடுத்து இந்து பெற்றோர்களிடம் மேலும் வக்கிரமான கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. அம்மனுக்கள் பின்னர் வாபஸ் பெறப்பட்டிந்த போதும் பரப்பப்பட்டிருந்த முஸ்லிம் விரோத கருத்துக்களில் மாற்றமடைய வில்லை.

இப்பிரச்சினைப் பற்றி ஆரம்பத்தில் தொண்டமானிடம் சச்சிதானந்தன் கூறியபோது கவனித்தில் எடுத்துக் கொள்ள தொண்டமான் பின்னர் அப்பிரச்சினை போலானது குறித்த நடந்து கொண்டதாக தெரிகிறது. எனவே தொண்டமான் மேற்படி பிரச்சினையில் இந்துத்துவ நிலைப்பாட்டை ஊக்குவித்தற் என்று கூறுவதற்கு ஆதாரங்கள் இருக்க வில்லை. ஆனால் அப்பிரச்சினையை சமரசமாக தீர்த்து வைப்பதற்கு உரிய வழிவகைகளை தொண்டமான் செய்யவில்லை என்பது விமர்சனத்திற் குரியதாகும். ஏனைய மலையக தொழிற் சங்கத்தலைமை களும் உரியவாறு அக்கறை செலுத்த வில்லை. அவர்களிடம் உள்ளூர 'இந்துப்பார்வை' இருந்ததால்தான் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற விமர்சனமும் இருக்கிறது.

அதே முஸ்லிம் அரசியல்வாதிகளும் சமயம்சார் உணர்ச்சிகளால் ஆட்பட்டிருந்ததால் தான் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் விமர்கனமும் இருக்கிறது. பதுளை உதவிமேயர் ஜாபீர் எடுத்ததாக கூறப்படும் முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமயத் தன்னடையாளங்களை பாதுகாப்பதாக கூறிக்கொண்டு மக்களை குழப்பத்திற்குள்ளாக்காமல். பல மதத்தவரும் சம்பந்தப்பட்ட விடயங்களில் சமயசார்பற்றத் தன்மையை கடைப்பிடிக்க முடியுமென்றால் இவ்வாறான பிரச்சினைகளை தவிர்க்க முடியும். பிரச்சினையை தீர்ப்பதற்கு மனத்தடைகள் இருக்கும் போது முழு ஆசிரியர்களையும் இடமாற்றி விடுவதால் பிரச்சினைக்கு தீர்வு வரப்போவதில்லை.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI புதிய பூமி

சுற்று 06 ஒக்டோபர்/நவம்பர் 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 31


## ஜே.வி.பியின் இனவாத "சோஷலிசம்"

- பல தேசிய இனங்கள் என்பதற்கு மறுப்பு.
- சுயநிர்ணய உரிமைக்கு எதிர்ப்பு.
- யுத்தத்தை எதிர்க்கவோ நிறுத்தவோ தேவையில்லை.
- வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு.
- தீர்வுப் பொதியை மரணப்பொறி என வர்ணிப்பு.
- சமவாய்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு.
- தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்திற்கு மறுப்பு.

# பொது இடதுசாரி வேட்பாளர் வேண்டும்

## புதிய – ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சி, பேரினவாதம், யுத்தம், பூகோளமயமாதல் தனியார் மயம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை என்பவற்றுக்கு எதிரான பொதுவேலைத்திட்டத்தை முன்வைக்கக் கூடிய ஒரு பொது இடது சாரி வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு புதிய ஜனநாயக கட்சி ஏனைய இடதுசாரி கட்சிகள் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது. யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சவார்த்தை நடாத்தி சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சித் தீர்வை கொண்டுவருவதற்கு முன்னுரிமை அளிக்காத வேலைத் திட்டத்தைக் கொண்ட எந்தவொரு அபேட்சகரையும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு நமது கட்சி ஆதரவு வழங்க மாட்டாது.

புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மேலும் அவ் அறிக்கையில் கூறுவதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால இருண்ட ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து அதற்குப் பதிலீடாகவே பொதுசன ஐக்கிய முன்னணியை மக்களும் இடதுசாரி சக்திகளும் பதவிக்கு கொண்டு வந்தனர். ஆனால் நாடும் மக்களும் எதிர்பார்த்த எதையும் பொதுசன முன்னணி அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி சென்ற அதே பாதையில் தான் கடந்த ஐந்து ஆண்டுகளில் பயணம் செய்து வந்துள்ளது. ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி யுத்தத்தையும் தனியார் மயத்தையும் விரிவாக்கி முன்னெடுத்து வந்துள்ளது. அதன் மூலம் வடக்கு கிழக்கு யுத்த பூமியாக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் சகல மக்களும் தாங்க முடியாத சுமைகளையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. அந்நிய பல் தேசியக் கம்பனிகளினதும் உள்நாட்டு முதலாளிகளினதும் இரும்புப் பிடிக்குள் தொழிலாளர்கள் இறுக்கப்பட்டுள்ள அதேவேளை தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சாசனம், சட்டமாக்கப்படவேஇல்லை. இவற்றினால் சகல தரப்பு மக்களது நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சி ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு பொதுசன முன்னணிக்கு முழுமையான ஆதரவை வழங்கி நின்றது. தேசிய இனப்பிரச்சினையை குறைந்த பட்சமாவது தீர்த்து வைப்பதற்கும், ஜனநாயக மனித உரிமைகளை மீட்டெடுத்து நிலை நிறுத்தவும் ஒரு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்குமாறு மக்களை வேண்டிக் கொண்டோம். அதன் மூலம் வெற்றி பெற்றுக் கொண்ட திருமதி சந்திரிகாவும் பொதுசன முன்னணியும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவில்லை. யுத்தத்தை விரிவாக்கி வேகப்படுத்தியதன் மூலம் மக்களையும் இடதுசாரி சக்திகளையும் ஏமாற்றியுள்ளனர். அதே வேளை பேரினவாதிகள், யுத்த வெறியர்கள், அந்நிய பல்தேசியக் கம்பனிகள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போன்றோரது விருப்பங்களை நிறைவேற்றி வந்துள்ளனர்.

எனவே தான் மேற்கூறிய அடிப்படையில் பொது இடதுசாரி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு எமது கட்சி ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. அதன் மூலம் உறுதியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஒரு மாற்று அரசியல் சக்தியையும் புதிய அரசியல் கலாச்சாரத்தையும் மக்கள் மத்தியில தோற்றுவிக்க முடியும் என்று புதிய ஜனநாயக கட்சி நம்புகின்றது. இன்றைய சூழலில் அதுவே நாட்டிற்கும் மக்களுக்கும் விமோசனம் தரக் கூடியதாகும். ■

## எங்கள் மண்ணும் புனிதமும்

இது மனித இரத்தத்தால்
சுத்திகரிக்கப்பட்ட மண்
இங்கு விதைகளுக்கு பதிலாக
மனித உடல்கள் விதைக்கப்படும்

இது கன்னிப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு
கொலை செய்யப்படும் போது சிதறி
தெறிக்கும் குருதியினால்
பசளையிடப்பட்ட மண்

விலை மதிக்க முடியாத
பாட்டாளிகளின் வியர்வையால்
புனிதப்படுத்தப்பட்ட மண்
இங்கு விளை நெல்லுக்கு பதில்
இவர்களின் உழைப்பே
அறுவடை செய்யப்படும்

சொகுசு என்று சொம்பேறிகளை உற்பத்தி
செய்து
சூன்ய நிலையை உருவாக்கும்
சுந்தர மண்

சுயமாக சிந்திப்பதை சுத்தமாக
நிறுத்தி விட்டு எவனையோ
பிம்பப்படுத்தும் எங்களின் புனித மண்

யானை தலை கொண்டும்
கதிரை கால் கொண்டும்
சேவல் மயில் என்று
தலை மாற்றும் இரட்சகர்களை
அடிக்கடி நிறம் மாற்றும் எங்கள் மண்

புறாக்களின் தலையோடும்
கழுகளின் நகங்களையும்
வெளவால்களின் இறக்கைகளையும்
நாகத்தின் நாக்கினையும்

ஓநாயின் இதயத்தையும் கொண்ட
சமாதானப் பறவை
எங்கள் மண்ணில் மட்டும் உண்டு

தாண்டவம் ஆடும் மயில்களும்
ஒப்பாரி பாடும் குயில்களும்
விஷம் பரப்பும் தென்றலும்
எங்கள் மண்ணில் உண்டு

வீடுகளை தீ வைத்து
ஊருக்கு வெளிச்சம் காட்டி
ஊருக்கு தீ வைத்து
நாட்டிற்கு வெளிச்சம் காட்டி
நாட்டிற்க தீ வைத்து
உலகிற்கு தானம் தரும்
பாரிகள் நிறையவே
இந்த மண்ணில் உண்டு

கை கால்களை விறகாக்கி
இரத்தத்தை எண்ணெயாக்கி
கூக்குரலில் இசைகேட்டு
டயர்களை கறி சமைத்த
மகா முனிவர்களும்
எங்களின் சுந்தர மண்ணில் உண்டு

கைகள் பிணைக்கப்பட்டும்
கால்கள் முறிக்கப்பட்டும்
பார்வைகள் மங்கியும்
வயிறுகள் சுருங்கியும் இன்னும் பல
லட்சம் தொழிலாளர்கள் தெளிந்த
சிந்தனையோடும் உறுதியான
ஒற்றுமையோடும் எந்தன் பொண்ணான
மண்ணில் இன்னும் உண்டு.

**சை. கிங்ஸ்லி கோமஸ்**

### ஜே.வி.பி.–விக்கிரம...

1ம் பக்க தொடர்ச்சி...

கட்சி கீழ் மட்டத்தினருக்குக் கூட இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

புரட்சிகர வசனங்கள் பேசும் விக்கிரமபாகுவிற்குத் தேவைப் படுவது பதவியும் புகழுமேயாகும். அதற்காக கொள்கை கோட்பாடு இடதுசாரி ஐக்கியம் யாவற்றையும் தூக்கி வீசிச் செல்வார். புதிய இடதுசாரி முன்னணி மூலம் மாகாணசபை உறுப்பினராகிய பின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மாகாணசபையின் சபாநாயகர் பதவி பெற முனைந்து இடதுசாரி முன்னணியை உடைத்துக் கொண்டவர். இப்போது அவரது நவசமசமாஜக் கட்சிக்குள் குமுறல் உடைவு வந்தாலும் பரவாயில்லை ஜே.வி.பி.யுடன் சேர்ந்து அடுத்த பாராளுமன்றப் பதவி கிடைத்தால் போதும் என்ற நிலைக்குச் சென்றுள்ளார். விக்கிரமபாகுவின் பாதை புதிய பாதை அல்ல. பழைய இடதுசாரிகள் சென்ற சந்தர்ப்பவாதப் பாதை தான். அனைத்து மக்களும் விக்கிரமபாகுவின் சிகப்புப் போர்வையைப் புரிந்து கொண்டால் போதும். ■

### தமிழ் தேசியவா..........

*11ம் பக்க தொடர்ச்சி....*

நிலைப்பாடாக எப்போதும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது தமிழ் தேசிய வாதத்தை வரையரை இன்றி எதிர்ப்பதென்பது அடக்கு முறையாளர்களுக்கு உதவுவதாகவே அமையும்.

தமிழ் தேசிய வாத சக்திகளின் ஆயுத நடவடிக்கைகளில் தவறுகள் நடை பெற்றுள்ளன. ஜனநாயக மறுப்பு, அராஜக நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள் ளனர். அதனால் அடக்கு முறையாளர்களும், ஏகாதிபத்திய வாதிகளும் பேசுகின்ற அதே மொழியில் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் தேசிய வாத சக்தி களை பற்றி மாக்சிஸ லெனினிஸ வாதிகள் பேசமுடியாது. தேசிய இன அடக்கு முறைகளுக்கு எதிரான இலக்கை அடிப்படையாகக் கொண்டுள்ள ஆயுத நடவடிக்கைகள் பயங்கரவாதமாக கொள்ளக் முடியாது. ஜனநாயக மறுப்பு, அராஜக நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டும். அவை விமர்சன ரீதியாக ஏற்கப்பட்டு திருத்தப்பட வேண்டும். திருத்தப்படாத போது போராட்டம் சரியான திசை மார்க்கத்தில் செல்லவியலாது.

அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை பாசிச சக்திகள் என்று கூறுவது பொருத்தமற்றது. பாசிச சக்தியொன்றுக்கு அடக்குமுறை அரசு யந்திர அடிப்படைகள் இருப்பதுண்டு. தமிழ் மக்களின் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கென தனியான அடக்கு முறை அரசு யந்திர அடிப்படைகள் ஏதுமில்லை. அவ்வியக்கத்தின் ஜனநாயக விரோத, அராஜக நடவடிக்கைகளை கண்டிப்பது என்பதும் அதனை பாசிஸ சக்தி என்று அழைப்பதும் நேர் எதிரான வெவ்வேறு விடயங்களாகும். அதனைப் பாசிஸ சக்தி என்றழைப்பது பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடி வரும் ஒரு போராட்ட இயக்கத்திற்கு மாறாக அடக்கு முறையாளர்களின் பங்காளிகளாவதகாவே இருக்க முடியும். அதனது தவறுகளை கண்டிப்பதும் விமர்சிப்பதும் போராட்டத்துக்கு பல மூட்டுவதாக இருக்க வேண்டுமே அன்றி அடக்குமுறை அரச யந்திரத்திற்கு துணை துணை போவதாக இருக்க முடியாது. உலகின் பல நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தலைமை சக்திகளாக இருந்து மாக்சிஸ லெனினிஸ வாதிகள் தேசியவாத சக்திகளுடன் ஐக்கியப்பட்டு போராடியுள்ளனர். சில நாடுகளில் தேசியவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்த்து போராடியுள்ளனர். எரித்திரியா போன்ற போராட்டங்களில் முதன்மை சக்திகளாக இருந்துள்ளனர். தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தேசியவாத சக்திகளுடன் கூட்டிணைந்து போராடியது.

அந்தவகையில் பேராசிரியர் சி.சிவசேகரத்தின் தேசியவாதமும் தமிழர் விடுதலையும் என்ற நூல் மாக்சிய லெனினிஸவாதிகள் தமிழ் தேசிய வாதத்துடன் பேசுவதாகவே அமைந்திருக்கிறது. தமிழ் தேசியவாதத்தை ஏசுவதாக அமைந்த காலகட்டத்தில் இருந்தது போன்று தமிழ் தேசியவாதம் இன்றில்லை. வர்க்கப் பார்வையில் தமிழ் தேசியவாதத்தின் வரையறைகளை பார்க்கின்ற அதேவேளை பேரின வாதத்திறகு எதிரான போராட்டத்தில் தமிழ் தேசியவாத சக்திகளிடமிருந்து மாக்சிஸ லெனினிஸ சக்திகள் தூர விலகி நிற்க முடியாது. அதேபோன்று பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் மாக்சிஸ லெனினிஸ சக்திகளின் பங்களிப்பை முற்போக்கான தேசிய வாத சக்திகள் நிராகரிக்க முடியாததாகும்.

சகல தமிழ்த் தேசியவாத சக்திகளும் தேசிய விடுதலை போராட்டத்தில் நேர்மையான ஐக்கியப்படுவது மாக்சிஸ லெனினிஸ சக்திகளுடனும், இடதுசாரி சக்திகளுடனும் சினேகபூர்வமான உறவை வளர்த்துக் கொண்டு போராட்டத்தை விரிவுபடுத்தி பலமாக வளர்த்தெடுக்க முன்வர வேண்டும். தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள, முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களுடனும் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் தேசியவாத சக்திகள் அவற்றின் நட்பு சக்திகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் போராட்டத்தில் மேற்படி சூழ்நிலையை ஏற்படுத்த தமிழ் தேசியவாத சக்திகளும், மாக்சிஸ லெனினிஸ சக்திகளும் இடதுசாரிகளும் குறைந்த பட்ச கருத்தியல் அடிப்படைகளை இனங் காண்பதற்கு பேராசிரியர் சி.சிவ சேகரத்தின் இந் நூல் உதவும். அக்கருத்தியல் அடிப்படைகள் மேலும் விருத்தி செய்யப்படுவதும் வேலைத்திட்டங்கள் செயல்முறைகள் வகுக்கப்பட வேண்டியதும் அதற்கு பலபக்க கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதும் அவசியமாகும்.

### இனப்பிரச்சினை......

1ம் பக்க தொடர்ச்சி...

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி தான் பதவிக்கு வந்தால் யுத்தத்தை நிறுத்துவ தாகவும் புலிகளுடன் பேசுவதாகவும் கூறி வருகிறது. அவர்களும் இனப் பிரச்சினை என்ற பந்தினைத்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு தூக்கியுள்ளனர். பதினேழு வருடகால ஆட்சியில் முடியாதுபோன விடயத்தை மீண்டும் எப்படி அவர்கள்ால் நடைமுறைப்படுத்த முடியும். தமது பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு விட்டார்களா? இல்லவே இல்லை ஐ.தே.கட்சியிடம் புதிதாக தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் கிடையாது.

ஆதலால் பொது சன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நேர்மையாகவும் தூர நோக்கோடும் துணிவுடனும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என எதிர் பார்ப்பது ஒருவகை ஏமாளித்தனமேயாகும்.

அவர்களது அடிப்படை நிலைப்பாடு பேரினவாத பெருமுதலாளித்துவ அந்நிய ஏகாதிபத்திய சார்பு நிலைப் பாடேயாகும். இதில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதே பட்டறிவாகும்.

எனவே தான் ஜனாதிபதித் தேர்தலில் உறுதியானதும் நேர்மையானதுமான வேலைத் திட்டத்தையுடைய ஒரு பொது இடதுசாரி வேட்பாளர் நிறுத்தப்படல் வேண்டும் எனப் புதிய ஜனநாயகக் கட்சியும் அது இணைந்துள்ள புதிய இடதுசாரி முன்னணியும் வற்புறுத்துகிறது. அத்தகைய பொது வேட்பாளரின் குறைந்த பட்ச வேலைத் திட்டம் கீழ்வரும் விடயங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். பொதுசன ஐக்கிய தேசியக் கட்சி, யுத்தம், பேரினவாதம், உலகமயமாதல், தனியார்மயம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஆகியவற்றுக்கு எதிரான அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் யுத்தத்தை நிறுத்தி புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை மூலமான குறைந்தபட்சத் தீர்வுக்கு வரக் கூடிய அம்சங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

மேற் கூறிய அம்சங்களை உள்ளடக்காது சாராம்சத்தில் இனவாத நிலைப் பாட்டினைக் கொண்டுள்ள ஜே.வி.பி. யுடன் இணைந்துகொள்ள முடியாது. அப்படி அவர்களுடன் இணைந்து நிற்பதென்பது குறுகிய சுய நலன்களாகக் கொண்ட சந்தர்ப்பவாத நிலைப்பாடாக அமைய முடியும்.

எனவே முற் கூறிய பிரதானமான அம்சங்கள் என்பது இன்றைய சூழலில் நாட்டையும் மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய அடிப்படைப்பிரச்சினைகளாகும். இவற்றை பரந்த மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்வதற்கு பொது இடது சாரி வேட்பாளரை நிறுத்தி மக்கள் சக்தியை கட்டியெழுப்புதல் வேண்டும். அதுவே நாளைய பரந்த வெகுஜன எழுச்சியாக மாறுவதாகவும் அமையும். ●

வெளியிடுபவர்: இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தை கட்டிட தொகுதி, கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: யூ. கே. பிரின்டஸ். 26/1, சிவனாந்தா வீதி, கொழும்பு 13.